செங்குந்த மித்திரன்

தொகுதி - ௪  சென்னை  மலர் - ௪

4  4

1928  1930-31

J.L
Y592(m211, N27 CH.
N30.4.4
129815


செங்குந்தமித்திரன்
9 - JUN
தென்னிந்திய
மாதவெளியீடு

பலம், புத்தி, ஆரோக்கியம், ஆயுள் இவைகளை விருத்தி செய்யும்.

# ஆனந்தா அயக்காந்த திராவகம்



புத்தியை கூர்மையாக்கி,
புஷ்டிக்கு அழகைக் கொடுக்
கும் திவ்விய அமிர்தம்.

பால்யர், யௌவனர், விருத்தர்,
ஆண், பெண், யாவருக்கும்
சிரேஷ்டமான ஔஷதம்

குணமில்லையெனின் பணம்
வாபீஸ் செய்யப்படும்.

இரும்பைப் பார்க்கிலும் கடினமான லோகம் வேறொன்றுமில்லை. தாதுவிர்த்திக்கு இதுவேசிறந்தது இரும்பின் சத்தை உண்பவனுக்கு நரைதிரை உண்டாகாது. இதனால்தான் "இரும்பவன் இரும்பைத் தின்றால், போரவன் பொன்னை தின்பான்" என்று இவ்வுலகத்தில் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஒருவன் இந்தத் திராவகத்தைச் சாப்பிடுகிறதற்கு முன் தன் தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக் கொண்டு அதன்பின் இந்தத் திராவகத்தை ஒரு மண்டலம் 40-நாளைக்கு சாப்பிட்டு மறுபடியும் தராசில் நின்று நிறுத்துப் பார்ப்பானானால் ஏறக்குறைய முன்னிருந்ததற்கு ஒரு வீசை 40-பலம் அதிக நிறையிருப்பான். இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துக் கொள்ளலாம்.

தாதுவிர்த்தியில்லாதவர் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அதை ஜலத்தில் துவைத்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்து வந்தால் தாதுவிர்த்தி உண்டாகுமென்று வைத்திய சாஸ்[illegible] கூறுகின்றது. அதற்கே அந்தக் குணம் இருக்கும்போது, அயத்தினுடையவும், [illegible]த்தினுடையவும் சத்தைத் திராவகமாக இறக்கியிருக்கும் இந்தப் பரம சிரேஷ்டமான ஔஷதத்தை உட்கொள்பவர் தேகம் வஜ்ஜிர சரீரம் ஆய்விடுமென்பதற்கு என்ன தடை ?

**இச்சிறந்த மருந்தின் புட்டி 1-க்கு விலை ரூ. 2. 3 புட்டியின் விலை ரூ. 5 8 0**

## டை அயக்காந்த திராவகத்தினால் தீரும் வியாதிகள்.

1. வாய்வுபிடிப்பு ஆண்குறி தளர்ந்து போதல், 2. மேகவாய்வினால் போக சக்தியில்லாமற் போதல், 3. ஸ்திரீயைக் கண்டவுடன் கலிதமாய் விடுதல், 4. தலைமயிர் உதிர்தல். 5. பித்தச் சூட்டினால் தலைமயிர் நரைத்துப்போதல், 6. மேகச் சூட்டினால் கண்ணெரிச்சலுண்டாவது. 7. கண்களில், நகக் கணுவுகளில். இரத்த ஓட்டமில்லாமை, 8. சுரரோகத்தினால் இரத்தம் கெட்டு உடம்பு வெளுத்துப்போதல், 9. மேக ரோகத்தால் உடம்பில் சக்தியில்லாமை, 10. பித்தவெட்டையினால் உதிரம் கெட்டு பலயீனப்படுதல், 11. கைகால் உடம்பு எரிச்சலுடைமை. 12. நாக்கு ருசியில்லாமல் அரோசகமடைதல், 13. உஷ்ணவாய்வினால் வயறு மந்தமுண்டாகுதல், 14. பித்த காமாலையில் முகம் வெளுத்துப்போதல், கண் வெளுத்துப்போதல், 15. மஞ்சள் காமாலையினால் உதிரம்போல் கண் சிவந்துபோதல். 16. விபரீதப்புணர்ச்சியினால் நாபியில் சூடுண்டாகி இந்திரியங்கள் நீர்த்துப்போதல் முதலியன.


தபால் பெட்டி 288 சென்னை
ஆனந்தா வயித்திய சாலை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் பாமாலைப் பகுதி | 106 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 107 |
| சமயப் பகுதி:—இந்துதெய்வ தத்துவார்த்த விளக்கம் | [illegible] |
| புது உலகமும் பழைய உலகமும் | 11 |
| அறிவியல் பகுதி:—வானநூலும் இந்தியப் பஞ்சாங்கமும் | 113 |
| மாதர் பகுதி:—கற்பு நிலை | 116 |
| ஆராய்ச்சிப் பகுதி:—முருகன் | 119 |
| இளைஞர் பக்கம்:—பிணமகனே மணமகனானான் | 122 |
| நாவல் பகுதி:—சிந்தாமணி யெழுதிய சித்திரம் | 126 |
| விடுகதைக் கொத்து | 129 |
| சுகாதாரப் பகுதி:—மருத்துவகுல சங்கத்தினர் பிரசுரம் | 130 |
| நிரூபங்கள் | 131 |
| வர்த்தமானம் | 134 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 136 |
| தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சீபுரம்:—வசூல் கமிட்டிகள் | 146 |
| பஞ்சாங்கம் | 148 |


## சைவ இளைஞர் மகாநாடு திருவிடைமருதூர்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் மேற்கூறிய சைவ இளைஞர் மகாநாடு, திருவிடைமருதூர் அரண்மனையில் நாளது பிரமோதூத, சித்திரை கூஉ (1930 ஏப்ரல் 18உ) வெள்ளிக்கிழமை நடைபெறும். சுகாதார மந்திரியார் கனம் பொருந்திய சைவத் திருவாளர். எஸ். முத்தையா முதலியார் அவர்கள் மகாநாட்டைத் திறப்பார். சைவத் திருவாளர். கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் எம். ஏ. எம். எல்., மகாநாட்டில் தலைமை வகிப்பார்.


## A Gold-plated Lever Wrist Watch for Rs. 6-14-O.

எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும் சரியான டைம் காட்டும் விலிண்டர்கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குநின்று போவதல்ல. 5 வருஷ மல்ல, பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கடியார கைச்சங்கிலி இனாமாக சேர்த்து அனுப்பப்படும். வீணிலே விலிண்டர் கடியாரங்களில் பணத்தை இழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக் கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் சரியாக ஓடவில்லை யென்றால் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருஷம் காரண்டியுடன் அனுப்புகிறோம். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.



FANCY WATCH HOUSE, *119, G. P. O., Madras.*

## கடவுள் வணக்கம்

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ் சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற் கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்ப தொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெம் கடவு ளானே. (அப்பர் சுவாமிகள்

## செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை.

(திரு. R. V. கருப்பண்ண முதலியார் அனுப்பியவை)

சித்தம்பூர் வாழுஞ் சிவனளித்த பிள்ளையார்
மெத்தப் பெருவயிறு வீங்கினர் காணம்மானை.
மெத்தப் பெருவயிறு வீங்கினரே யாமாயின்
இத்தரையின் மீதவருக் கேச்சலவோ வம்மானை
இரவு பகல் குட்டிணிக்கிங் கேச்சண்டோ வம்மானை

விருப்பாரும் பூஞ்சோலை மேவு திருவரங்கர்
திருப்பாற் கடலுடைய செல்வர் காணம்மானை
திருப்பாற் கடலுடைய செல்வரே யாமாயின் [னை
இரப்பாற்குப் பெண்கொடுத்த தென்னமதி யம்மா
என்றல்லோ மண்ணுண்டிருந்தனர் காணம்மானை

ஆதாரமாங் குடந்தை யாதிரும் பேச்சுரனார்
கோதாடு மன்மதனைக் கொன்றெரித் தாரம்மானை
கோதாடு மன்மதனைக் கொன்றெரித்தா ராமாயின்
மதா பிதாக்கள் பழிவாங்காரோ வம்மானை
வாங்குதற்கு முன்வாயின் மண் விழுந்ததம்மானை.

தொல்லுலகி லெல்லோருஞ் சொன் மாங்கனி யெ
நல்லதொரு காஞ்ச நகரி லுண்டேயம்மானை [ன்று
நல்லதொரு காஞ்சி நகரி லுண்டே யாமாயின்
எல்லார்க்குந்தானே யினிக்குமோ வம்மானை [னை
இனித்திருக்கு மொருவேளை யெரித்திருக்கு மம்மா

மட்டுவார் கூந்தலுமையாள் மனமகிழக்
கட்டுமா வொன்றுளது கச்சியிலே யம்மானை
கட்டுமா வொன்றுளது கச்சியிலே யாமாயின்
இட்டமாய் நற்கனி காயில்லையோ வம்மானை
இல்லாமற் கல்லாலெறிவாரோ வம்மானை.

கல்லாலின் கீழிருக்குங் காளத்தி நாதருக்குப்
பொல்லாச் சிலந்தி புகுந்தது காணம்மானை
பொல்லாச் சிலந்தி புகுந்ததுவே யாமாயின்
வல்லானொரு பணிக்கன் வாரானோ வம்மானை
வந்தல்லோ பண்டு வடுப்பட்ட தம்மானை.

ஆத்தட வயல் சூழாமாதை வாழழகர்
தாரொத்த மேனி தழலொத்ததம்மானை
தாரொத்த மேனி தழலொத்ததாமாயின்
ஈரக்கங்கா நதியாளிருப்பதேனம்மானை
ஈரம் பெரு நெருப்புக் கில்லையே யம்மானை.

மாசிலாத் தென் விரிஞ்சை மார்க்க சகாயலிங்கர்.
வேசியின் பாற்றூது சொல்லி மீண்டனர் காணம்
[மானை.
வேசியர் பாற்றூதுசொல்லி மீண்டனரே யாமாயின்
வீசை முனை வெழ்க்க மலர்க்கில்லையே யம்மானை
இல்லாமற் றலையிறக்க மேன் வந்ததம்மானை.

வற்றுதலையையிலும் வாள்விசயன்றன் கையிலும்
பற்றுமலண்ணலடி பட்டனர் காணம்மானை.
பற்றுமலண்ணலடி பட்டானே யாமாயின்
பெற்றாரில்லாத சிறு பிள்ளையோ வம்மானை
பிள்ளை மதியுடைய பத்தர் காணம்மானை.

பூங்காவனஞ் சூழும் புள்ளிருக்கும் வேளூரான்
பாங்கான தென்மதுரைப் பாணன் காணம்மானை
பாங்கான தென்மதுரைப் பாணனே யாமாயின்
தாங் காதிழை யெடுத்துத் தைப்பனோ வம்மானை
தையலுக்கு நல்ல சமர்த்தன் காணம்மானை.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர் :—பண்டிதர் பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—ச ] பிரமோதூத வருஷம் சித்திரை மாதம் [ பகுதி—ச

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### இரண்டாவது மகாநாடு

நம்மவர் இரண்டாவது மகா நாட்டினைக் காஞ்சிபுரத்தில் கூட்டுவதற்கான முயற்சிகள் வெகு தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இது வரை வரவேற்புச் சபையினர் கூட்டங்கள் இரண்டு நடைபெற்றன. கார்த்திகையில் கூடிய வரவேற்புச் சபையின் முதலாவது கூட்டத்தில் நம்மவர் 2-வது மகா நாட்டினைச் செங்கல்பட்டு ஜில்லா வாசிகள் பொறுப்பில் காஞ்சிபுரத்தில் கூட்டுவதெனத் தீர்மான மானதோடு, செங்கல்பட்டு ஜில்லாவினைச் சில வட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு வட்டத்திலும் மகா நாட்டுச் செலவுக்கு வேண்டிய தொகையைத் தரிவரி மூலமும் நன்கொடைகள் மூலமும் வசூலிப்பதற்கெனச் சில வசூல் கமிட்டிகளும் அவைகளுக்குரிய அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றது அன்பர்கள் ஞாபகத்தி லிருக்கலாம். மாசி மாதம் தொடங்கிக் காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்தில் தரிவரி வசூல் நடந்து வருகின்றது. பங்குனி மாதம் 24-ந் தேதி வரவேற்புச் சபையின் இரண்டாவது கூட்டம் கூடியது. அதில் மகாநாடு கூட வேண்டிய இடமும் காலமும் நிர்ணயிக்கப் பெற்றதோடு மகா நாட்டுக்கு வசூலாகும் பணத்தை யார் பெயர்களில் எந்த பாங்கியில் போட்டு வைப்பதென்பதும், இன்னின்னார் கிராமங்கள் தோறும் சென்று ஆங்காங்கு வசூலுக்கு ஏற்பாடு செய்வதென்பதும், இன்னின்னார் மகாநாடு சம்பந்தமான விஷயங்களை அப்போதைக்கப்போது விளம்பரஞ் செய்து கொண்டு வர வேண்டுமென்பதும் ஆகிய விஷயங்கள் முடிவு செய்யப்பெற்றன. இவற்றின் விவரங்களை மற்றோர் பக்கத்தில் காண்க.

வசூல் கமிட்டியாரும் விளம்பர கமிட்டியாரும் இனி யாதொரு தாமதமுமின்றித் தத்தம் தொண்டுகளைச் செய்ய ஆரம்பிப்பார்களென எதிர்பார்க்கிறோம். செங்கல்பட்டு ஜில்லாவில் பல கிராமங்களிலுமுள்ள செங்குந்தர்கள் தமது பொறுப்பில் நடைபெற இருக்கும் இம்மகா நாடு வெகு சிறப்பாக நடைபெறுமாறு ஊக்கங்கொண்டு ஒத்துழைக்க முன் வருவார்களென்பது இது வரை இது சம்பந்தமாக எமக்கு வந்துள்ள கடிதங்களினின்றும் நன்கு புலனாகின்றது.

---

### சந்தா பாக்கி

நமது 'மித்திரன்' பிறந்து 4-வருஷ காலமாயினும் இது வரை மறக்காது மித்திரனை

வாங்கிக்கொண்டு இன்னும் சந்தா அனுப்பாத கருணைவள்ளல்கள் பலர் இருக்கின்றனர். இவர்களிடமிருந்து சந்தா பாக்கியினை வசூலிப்பதற்கு நமது பத்திரிகையினை வி. பி. தபாலில் அனுப்பிக் கொண்டு வருகிறோம். அவர்களுள் பலர் வி. பி. யை எடுத்துக் கொள்ளாமல் மறுத்து விட்டு நமது சங்கத்துக்குப் பெரு நஷ்டத்தினை விளைவிக்கின்றனர். இக்கருணை வள்ளல்களின் பெயர்களை அடுத்த மாத மித்திரனில் விலாசங்களுடன் வெளியிட உத்தேசிக்கிறோம். அவர்களின் அன்பர்களேனும் அவர்களிடம் சந்தாபாக்கியினை வசூலித்து அனுப்புவார்களென நம்புகிறோம். இந்நிலையில் எந்தப் பத்திரிகை தான் நடைபெற இயலும்?

## விளம்பரங்கள்

நமது மித்திரனில் வரும் விளம்பரங்கள் அனைத்தும் நமது சங்கத்து விளம்பரங்களெனத் தப்பபிப்பிராயங் கொண்டு அவற்றில் விளம்பரப்படுத்தி யிருக்கும் பொருள்களுக்காக நமது சங்கத்துக்கோ, மித்திரன் காரியாலயத்துக்கோ, நேரில் எமக்கோ எழுதுகின்றனர். இத்தகைய கடிதங்களுக்குப் பதில் எழுதிக்கொண்டிருப்பது இயலாத காரியம். ஒவ்வொரு விளம்பரத்திலும் விளம்பரஞ் செய்வோரது விலாசமிருக்கிறது. விவரந் தெரிய வேண்டுவோர் அவ் விலாசங்களுக்கு நேரில் எழுதவேண்டும். அப்படி யன்றி எமக்கு எழுதுவது வியர்த்தமே யாகும். ப-ர்.

## தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டின் வசூல் கமிட்டிகள்

நிகழும் சுக்கில ஆண்டு பங்குனிமாதம் 24-ம் நாள் (6-4-30) ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 30 - மணிக்கு இரண்டாவது வரவேற்புக் கழகக் கூட்டம் காஞ்சீபுரம் பிள்ளையார் பாளையம் கிருஷ்ணராயர் தெருவு ஸ்ரீசுப்பிரமணிய ராலயத்தில் வரவேற்புக் கழகத் தலைவர் திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்குச் செங்கற்பட்டு ஜில்லாவின் எல்லா கிராமங்களிலிருந்தும் சுமார் 200-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர். கூட்ட ஆரம்பத்தில் சென்ற வரவேற்புக் கழகக் கூட்டத்தின் நடவடிக்கைகள் திரு. ம. சண்முக சுந்தர முதலியார் அவர்களால் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டபின், சென்னை திரு. மா. அ. கனகசபை முதலியார்அவர்கள் மகாநாட்டைச்சிறப்பாக நடத்தும் அவசியத்தை வற்புறுத்தினர். பின்னர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் மகா நாடு சம்பந்தமாக இது வரை நடைபெற்ற வேலைகளைக் குறித்துப் பேசி வைகாசிமீ முடிவில் மகா நாட்டை நடத்துவதற்கு அனுசரிக்க வேண்டிய முறைகளையும் குறிப்பிட்டுப் பேசினர். பின்பு ஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் செங்குந்தர் இயக்கம் 40-ஆண்டுக்கு முன் தோற்றப்பட்டது முதல் இது வரை விருத்தி யடைந்திருக்கும் நிலையினை விளக்கினர். பிறகு திரு. ம. சண்முக சுந்தர முதலியார் அவர்கள் மகா நாட்டைக் காஞ்சீபுரத்தில் நடத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினர்.

பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யப் பெற்றன.

1. மகா நாடு நடத்த வேண்டிய இடம் காலம்: நமது இரண்டாவது மகாநாட்டை வைகாசி மாதக் கடைசியில் காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் உயர்தரப்பாடசாலை விளையாட்டு வெளியிடத்திலாவது அல்லது நவாசுப் பேட்டை திரு. சுப்புராய முதலியார் அவர்கள் தோட்டத்திலாவது நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. வசூலிப்பதற்குரிய ஏற்பாடுகளைக் கிராமங்கள் தோறும்சென்று சித்திரைமீக்குள் வசூல்செய்வதற்காக அதி தீவிர முயற்சி செய்யும்படி திட்டம் செய்வதற்குக் கீழ்க்கண்டகனவான்கள் நியமிக்கப் பெற்றிருக்கின்றனர்:—

1. திரு. ம. த. சாமிநாத முதலியார்.
2. „ சா. ரா. தங்கவேலு முதலியார்.
3. „ S. லட்சமண முதலியார்.
4. „ ம. கெங்காதர முதலியார்.
5. „ பி. செ. மாணிக்க வாசக முதலியார்.
6. „ பரமானந்த முதலியார்.
7. „ குட்டி அண்ணாமலை முதலியார்.

3. வசூலாகும் தொகையைத் திரு. ம. கெங்காதர முதலியார் திரு. S. லட்சுமண முதலியார் ஆகிய இருவர் பெயரால் காஞ்சிபுரம் இம்பீரியல் பாங்கியில் கரண்டு கணக்கில் கட்டவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

4. விளம்பர சபை: மகா நாடு சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், பத்திரிகைகட்கு விஷயதானம் புரிதல் முதலியவற்றைக் கவனித்தற்குச் சென்னை திருவாளர்கள் ம. சண்முக சுந்தர முதலியார், மா. அ. கனகசபை முதலியார், V. இரத்தின முதலியார், காஞ்சிபுரம் வி. திருஞான சம்பந்த முதலியார், பி. செ. மாணிக்க வாசக முதலியார், ஸி. அருணாசல முதலியார் ஆகியவர்கள் அடங்கிய விளம்பர சபை ஒன்று நியமிக்கப்பட்டது.



## சமயப் பகுதி

### இந்துதெய்வ தத்துவார்த்த விளக்கம்

(தொகுதி 4, 6-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்முக மூர்த்தம்

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள்]

திருவளர்ந்தோங்கு மிப் பாரதகண்டத்தில் பல்வேறு சமயங்களும் தெய்வங்களுந் திகழ்ந்து விளங்குகின்றன. இவைகளெல்லாவற்றிலும் மேன்மையுற்று தெய்வீகஞ் சிறந்து திலகம்போ லொளிர்வது நமது சைவசமயமே. இச் சீரிய சைவசமயத்திற் பிரபாதிக்கப்படுங் கடவுள் அனாதிமல சித்தருவாய் விளங்குஞ் சாக்ஷாத் சிவபெருமானே யாவார். இதனைச் 'சைவத்தின்மேற் சமயம் வேறில்லை யதிற்சார் சிவமாந் தெய்வத்தின்மேற் றெய்வம் வேறில்லை' என்று ஆன்றோர் கூறியிருத்தலால் உணர்க. இத்தகைய சுத்த சிவம் தம்மை யடைந்து வழிபட்டேத்தும் மெஞ்ஞானிகளாம் சுத்தாத்துமாக்களுக்கு அனுக்கிரகஞ் செய்வான் கொண்டருளிய திருமூர்த்தங்கள் பல. இவற்றுள் சாலச் சிறந்ததும், இருமை யின்பத்தையு மெளிதிற் றரவல்லதும், இக்கலியுகத்திலே விசேட பிரத்தியக்க தெய்வமாகவிருந்து அன்பர்க் கருள்புரிய வல்லதுமான தெய்வம் மேற்கூறிய சண்முக மூர்த்தமேயாம். 'சுக்குக்கு மிஞ்சின வைத்தியமில்லை. சுப்பிரமணியருக்கு மிஞ்சின தெய்வமுமில்லை' என்பது பழமொழி. 'கலியினிற் கந்தவேளே கைகண்ட தெய்வம்' என்னும் ஆன்றோர் வாக்கும் இங்கு கவனிக்கற்பாலது. பொதுவாக இம்மூர்த்தம் விதிமுறையமைக்கப்பெற்றிலங்கும் எல்லா சிவாலயங்களிலும் குகாலயங்களிலும் சிறப்பாக நம் செங்குந்தர்கள் வதியுஞ் செல்வீகக் கிராமங்களில் விளங்கும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளின் திருக்கோயில்களிலுங் காணப்படுகின்றது. ஷடானனம் அல்லது ஷட்முகம் என்னும் வடசொல்லின் சிதைவே தமிழில் சண்முகம் என்றாயிற்று. சண்முகம் என்னும் பதத்திற்கு ஆறுமுகம் என்பது பொருள். இங்கு ஆறு முகங்களையுடைய நங் குமாரக்கடவுளைக் குறிக்கும். எனவே, பூரண சந்திரோதயம்போன்ற ஆறு திருமுகங்களும், வேல், அம்பு, வாள், சக்கரம், பாசம், [illegible]யம் இவைகள் பொருந்திய வலத்திருக்கரங்க[illegible]ம், வச்சிரம், வில், கேடகம், துவசம், அங்கு[illegible] வரதம் என்பன வமைந்த இடத்திருக்கரங்க[illegible]ம், மயில் வாகனமும் வள்ளியம்மையார் [illegible]வயானையம்மையார் என்னும் இருசத்திகளும் [illegible]றயே வலப்பாலும் இடப்பாலும் வீற்றிருக்கக் [illegible]ழகுக்கெல்லா முறைவிடமாய் விளங்குந் திரு[illegible]ளியுடைய மூர்த்தியே சண்முகமூர்த்தி யெனப்[illegible]வர். இது சோடச மஹாமூர்த்தங்களிலொன்று.

இம்மூர்த்தம் ஆறு தலையோ டமைந்திருப்பதானது 'உங்களுக்கெல்லாம் ஆறுதலை யளிக்கவே (இளைப்பாறுகை = அதாவது, பல ஜென்மங்க ளெடுத்தெடுத் துழல்வதினின்றும் நீங்கி இளைப்பாறுதல்) நாம் ஆறு தலையோ டவதரித்துள்ளோம்' என்பதை யுலகினருக்குக் குறிப்பா லுணர்த்துவதுபோன்றிருக்கிறது. தமது கையில் ஞானசத்தி சொரூபமாகிய வேலாயுதத்தைத் தரித்திருப்பதானது 'உங்களையெல்லாஞ் சென்மப் பிணியினின்று நீக்கிக் காப்பாற்றுகிற வேலையையே கைக்கொண்டுள்ளோம்' என்று புகல்வதை ஒத்திருக்கின்றது. வரதாபயங் கொண்டமையானது 'நீவிர் யாவரும் அஞ்சன்மின்! எம்மை யடையின் அழிவிலின்பமுத்தியாகிய பரமானந்த நித்திய சுகத்தைத் தரும் நமது திருவடியை யருளுவோம்' என்று காட்டுவதை யொக்கும். ஒன்றிற் கிரண்டாக இருமாதுடன் மருவி நிற்றல், துறவறத்தைவிட இல்லற தர்மத்தை மேற்கொண்டொழுகும் புண்ணிய சீலர்களுக்கே விரைவில் திருவருள் செய்கிறோ மென்பதையும், 'இல்லறமல்லது நல்லறமன்று' என்னும் வாக்கிற் கிணங்கத் துறவறத்தைவிட இல்லறமே நனி சிறந்ததென்பதையும் புலப்படுத்துகின்றது.

இனி, இம்மூர்த்தியின் உண்மைத் தத்துவத்தை ஆராயுமிடத்து எல்லாம் வல்ல இறைவனாகிய ஐம்முகக்கடவுளே தேவர்களிடுக்க ணொழிக்கவும், சூராதியசுரர்களை வேரோ டழிக்கவும், அறுமுகக் கடவுளாய் அவதரித்திருந்தா ரென்பது புலனாகின்றது. இதனைப் "பரஞ்சுட ருருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்" என்றும், 'ஆசிலோர் குழவிபோலா யறுமுகங் கொண்டா னெண்டோ ளீசனே யென்பதல்லால் பிறிதொன்றை யிசைக்கலாமோ' என்றுங் கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் கந்தபுராணத்திற் கூறியிருத்தலா லுணர்க. இவரது ஆறு திருமுகங்களும், ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, பராசத்தி, ஞானசத்தி, குடிலாசத்தி என்றும், அ. உ. ம். நாதம் விந்து சத்தி என்னும் பிரணவங்க ளாகுமென்றும், சிவபெருமானது ஆறு திருமுகங்களே யாகுமென்றும், மந்திராத்துவா, பதாத்துவா, வன்னத்துவா, புவனத்துவா, கலாத்துவா, தத்துவாத்துவா, என்னும் ஆறு அத்துவாக்களென்றும் (அத்துவா - மார்க்கம் அல்லது வழி), ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம்,

சத்தியோகாதம் என்னும் ஈசன் திருமுகங்களைந்துடன் தேவி, திருமுகமொன்றுஞ் சேர்ந்து ஆறுமுகங்களாயின வென்றும், முற்றறிவு, எல்லையிலின்பம், இயற்கையறிவு, பேரருளுடைமை, வரம்பிலாற்றல், தம்வயமுடைமை ஆகிய ஆறு சுத்த குணங்களாகு மென்றும், ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பனவாதி யாறு குணங்களென்றும், சடாக்கர மந்திர சொரூபமென்றும், பல்வேறு விதமாக அறிஞர்கள் பொருள் கூறுகிற்பர். இவ் வாறு முகங்களும் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல் என்னு மறுவகை யிடங்களின் றிசையை நோக்கியுள்ளன. ஆதலால், ஓரறிவுமுதல் ஆறறிவிறுதியாயுள்ள சகல உயிர்களும் அப்பெருமானது திவ்விய திருநோக்கால் சகல போக பாக்கியங்களையுந் துய்த்து அறுவகைச் சமயங்களையுங் கடந்து ஷட்சாத்திர நிபுணராய் அறுவகைப்பட்ட மலங்களினின்றும் நீங்கி முத்தியடைகின்றனவென்றும், அவ் வாறு முகங்களில் சருவஞ்ஞத சத்தியாகிய முகம் படைத்தல், காத்தல், அழித்தலென்னு முத்தொழில்களையுஞ் செய்யாநிற்கின்றதென்றும், நித்திய திருப்தி சத்தியாகிய முகம் எல்லா அனுக்கிரகங்களையும் புரியுமென்றும், அநாதிபோத சத்தியாகிய முகம் எல்லா வுயிர்களையும் போகிக்கப்பண்ணு மென்றும், சர்வ சுதந்தர சத்தியாகிய முகம் பக்குவ ஆன்மாக்களுக்கு முத்தியை யளிக்குமென்றும், அலுப்த சக்தியாகிய முகம் பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்யா நிற்குமென்றும், அநந்த சத்தியாகிய முகம் எல்லா ஆற்றலையு முண்டாக்குமென்றும் வேத சிவாகமங்கள் கூறா நிற்கும். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் ஆறு முகங்களின் செயல்களைப்பற்றி,

"ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
  ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
  குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபட சூரரை வதைத்தமுக மொன்றே
  வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
  ஆதியருணசல மமர்ந்த பெருமாளே"

என்று கூறுகிறார். ஒரு முகம் சூரபதுமன் முதலாய அசுரர்களையெல்லாம் தடிந்தருளாநிற்கும். ஒருமுகம் ஆன்மாக்களின் வினைகளைப் போக்கிப் பேரின்பத்தை யளிக்கும். ஒருமுகம் வேதங்களையுஞ் சிவாகமங்களையுமருளிப் போதிக்கா நிற்கும். ஒன்று மலவிருளை நீக்கி யொளிமயமாய் விளங்கும். ஒன்று தெய்வயானை யம்மையாருக்கும் வள்ளியம்மையாருக்கும் மோகமுதவும். ஒன்று தன்னடிச் சார்ந்தார்க்கு வேண்டு வரமளித்தருளும் என்று ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர். இங்ஙனமன்றி, திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய 'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி' என்ற பாசுரத்திற்கும் அஞ்சாநெஞ்சுடன் குற்றங்கூறிய நக்கீரதேவர் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படையிலே,

"மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
  பல்கதிர்விரிந்தன் றொருமுக மொருமுக
  மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
  காதலி னுவந்து வரங்கொடுத்தன்றே யொருமு
  மந்திர விதியின் மரபுளி வழாஅ
  வந்தணர் வேள்வி யோர்க்கும்மே யொருமுக
  மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
  திங்கள்போலத் திசைவிளக்கும்மே யொருமுக
  செறுநர்த் தேய்த்து செல்சம முருக்கிக்
  கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட்டன்றே
                    [யொருமுக
  குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
  மடவரல் வள்ளியோடு நகையமர்ந் தன்றே."

என்று ஆறு திருமுகங்களின் பொலிவுஞ் செய... களும் பெருமையும் மிகத் தெளிவாகக் கூறப்ப... டிருக்கின்றன.

தவிர, இம்மூர்த்தத்திற்குத் தாமரை போ... மழகிய பன்னிரு திருக்கரங்கள் விளங்கு... றன. அவைகளில் தோமரம், துவசம், குலி... அங்குசம், அம்பு, பங்கயம், மணி, மழு, த... வாள், வில் என்னும் பதினொரு ஆயுதங்... வேலாயுதமும் விளங்குகின்றன. பதினொரு ... திரர்களே மேற்கூறிய பதினொரு ஆயுதங்... வும், சிவசத்தியே வேலாயுதமாகவும் அமைந்தா... கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனை,

"பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும்
  பொருவிலா வுருவமுந் தொன்னாள்
நன்றுபெற் றுடைய வுருத்திர கணத்தோர்
  நவிலருந் தோமரங் கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமும்
  மணிமலர்ப் பங்கயந் தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார்
  விறன்மிகு மறுமுகன் கரத்தில்"

என்று வருங் கந்தபுராணச் செய்யுளாலுணர்க. இ... சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்று மூன்... சத்திகளும், மூன்றிதழாயமைந்த அடுக்கே வேல... யுதமென்றுங் கூறுவர். இதனால் இவரது ஆயு... கள் கொல்லன் முதலிய தொழிலாளிகளால் செ... யப்பட்டு உயிரை வதைத்து நிணந்தோய்ந்து உ... ரத்தைக் குடிக்கும் ஆயுதங்கள் போலல்ல வென்... தாயிற்று. இனி, இப்பெருமானது பன்னிரு திரு... கரங்களின் பெருமையைப் பகருமிடத்து, ஒரு கை... ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற தேவ இருடிகளுக்கு... பாதுகாவலாக எடுத்தது, அதற்கிணையாகிய ம... றொரு கை மருங்கில் வைத்தது; ஒரு கையான... அங்குசத்தைச் செலுத்த, அதற்கிணையாகிய ம... றொரு கை அழகிய ஆடையினையுடைய தொடை... யின்மேற் கிடந்தொளிர்வது; இரண்டு கைக... வியப்பையுங் கருமையையு முடைய கேட... தோடு வேலை வலமாகச் சுழற்றா நின்றது. ... கையானது (முனிவர்களுக்கு ஞானத்தைப் ... திக்குங் காலை) மார்புடனே விளங்க, அதற்... யாகிய மற்றொரு கை தாழ்ந்த மாலைசே...



...ழகுபெற நின்றது; ஒரு கையானது தொடி... ...ன மேலே சுழல, கீழ் வீழ்ந்த மற்ற கையா... ...து ஓசை இனிதாயொலிக்கின்ற மணியை மாறி... யாலிக்கப் பண்ணுகின்றது; ஒரு கையானது ...கத்தினின்று மழையை வருஷிக்கச் செய்ய ...தற்கிணையாகிய மற்றொரு கையானது தெய்வப் ...பண்களுக்கு மணமாலையைத்தரிக்கவும் எடுத்தது. ...ப்படி பன்னிரு கர்மங்களும் பலபல செயலினை ...த்தாயிருக்கின்ற பெருமையோடு விளங்குகின் ... கிளி ரூபமேற்ற அருணகிரி நாதரைக் கிளி... ...மாகவே ஒரு கையிற் கொண்டுள்ளாரென் ...ம் சிலர் கூறுகின்றனர். இதனை ஒரு பெரியார்

"கொங்கு செண்பகமொருகை கொடியொருகை
                    [வேலொருகை
  கொஞ்சு கிளிதானுமொ ருகை
...ங்குவில்லம் பொருகை தண்டொருகை செண்
                    [டொருகை
  சக்கர கிரிவாள மொருகை
...மங்கைகுற மாதொருகை மயிலொருகை செய
                    [லொருகை
  மணிமந்த்ர மாலை யொருகை"

என்ற பாசுரத்துக் கூறியிருக்கின்றனர். இருபுடையிலும் விளங்காநின்ற தெய்வயானையம்மையாரும் வள்ளியம்மையாரும் முறையே கிரியா சத்தியென்றும் இச்சாசக்தி யென்றுங் கூறப்படுகிறது. ஐம்முகச்சிவம் அறுமுகக் கடவுளாகஅவதரித்த காலை வாமபாகத்திருந்த உமாதேவியார் தெய்வயானையம்மையாகவும், சடாபாரத்திற்றங்கியிருந்த கங்கையானவள் வள்ளியம்மையாகவும் வந்து மருவினார்கள் என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். தவிர இவர்களைச்சிற்சத்திபராசத்தி யென்றுங்கூறுவர். கோழி நாததத்துவமாம். மயில் விந்துதத்துவமாம். அவர் படையாகிய பூத கணங்கள் தத்துவக்கூட்டமாம். தவிர இம்மூர்த்தமானது மயின் மீதிவர்ந்து தேவிமார்களுடன் றிகழ்வதானது, தம்மை வழிபட்டேத்தும் மெய்யன்பர்கட்கு இடுக்கண் நேர்ந்துழி, நினைத்த மாத்திரையில் விரைவிற் சென்று அதனை நீக்கிக்காத்தருளுவோம் என்பதையும், பக்தி சிரத்தை வைராக்கியத்தோடு வணங்கி வழிபாடாற்று மன்பர்களுக்கு மயில் வாகனரூடராய்த் தேவிமார்கள் புடைவிளங்க நாம் காக்ஷி கொடுத்தருளுவோம் என்பதையுங் குறிக்கின்றது. இதனை அருணகிரிநாதர் "பருத்த மயின் மிசை நினைத்தபொழுதுன் பதத்துமலரினை யருள்வாயே' (திருத்தணிகை, 542) என்று கூறியிருத்தலானுணர்க. (தொடரும்)


## மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,
தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
**40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.**

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு 8 தபாற்செலவு அணு 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

நீங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்களா? இல்லையாயின் உடனே உங்கள் சந்தாவை அனுப்பி விட்டு ஒவ்வொருவரும் இயன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புங்கள்.




## அதிசய இயந்திர மனிதன்

மின்சாரக்கண், காந்தக்கை, ரேடியோ மூளை.

அமெரிக்கா மின்சார சங்கத்தார் முன்னிலையில் ஒரு அதிசயமான இயந்திர மனிதன் காண்பிக்கப்பட்டது. இது மேலாளில்லாமலேயே வேலை செய்கின்றது. இதற்கு மின்சாரக் கண்களும், காந்தக் கைகளும், ரேடியோ (ஆகாயத் தந்தி) மூளையும் உள்ளன. இதனின்றும் குளிர்ந்த தீ பிரகாசிக்கின்றது. 10 லட்சத்தில் ஒரு பங்கு அரிசியிடை கனமுள்ள தங்கமணி ஒன்றைப் பிரித்துச் சேகரித்துப் பார்க்கும் வல்லமை உடையது. மற்றும், சில ஆண்டுகட்கு முன்னர் மனிதர்களால் தான் செய்ய முடியும் என்றும், கருவிகட்கு அசாத்தியமானவை என்றும் கருதப்பட்ட பல அரிய செயல்களை இவ்வியந்திர மனிதன் செய்து முடிக்கின்றான்.

மனிதக் கண்களிலும் இவ்வியந்திர மனிதனின் கண்கள் நிறவேற்றுமையை உணர்வதில் 165 மடங்கு அதிக கூர்மை வாய்ந்திருக்கின்றன.

இவ்வியந்திர மனிதன் போதகாசிரியர் உவில்லியம் மக்டாவிஷ் என்னும் அமெரிக்கரால் சிருட்டிக்கப்பெற்றனன்.

---

## நடிகர் உலகம்

உலகத்தில் உள்ள எல்லாத் தொழில்களிலும், படக்கூத்துக்களில் நடக்கும் சார்ளி சாப்ளின், ஹாரோல்ட் லாயிட், மேரி பிக்போர்டு, க்ளோரியா ஸ்வான்சன் போன்றவர்கட்கே அதிக வருமானம் கிடைக்கின்றது.

இருபது நடிகர்களின் ஐந்து வருஷத்து வருமானம் ஒரு கப்பற்படையினையே விலைக்கு வாங்குமாம். சிலரின் வருஷச் சம்பளத்தை இங்குக் குறிப்பிடுகின்றோம்:—

| | |
|---|---|
| ஹாரோல்ட் லாயிட் | 4,000,000 |
| சார்ளி சாப்ளின் | 2,000,000 |
| டாம் மிக்ஸ் | 2,500,000 |
| டொரோதி மாக்கேல் | 750,000 |
| நார்மா ஷீயார் | 500,000 |
| டோலோரஸ் கோசலலோ | 500000 |

வாரம் 30,000-ரூபாய்சம்பளத்தில் ... ர்ந்து 3-வருஷத்திற்குச் சம்பளம் தருவதாய் ஒரு கூத்துக்கம்பெனி சொந்தக்காரர் கேட்க, இத்தொகையைச் செல்வி க்ளோரியா ஸ்வான்சன் மறுத்துவிட்டனளாம்!

ரின்-டின்-டின் என்னும் நாய் வருடத்தில் 25,000-பவுன் சம்பாதிக்கின்றது!

---

## பத்திரிகை யுலகம்

உலகத்தில் தலை சிறந்த அமெரிக்கப் பத்திரிகையாம் நியூயார்க் டைம்சின் 1929-ம் ஆண்டுக் கணக்கின்படி பின்வரும் குறிப்புக்களகப்படுகின்றன:— காகிதம் மட்டும் 117,287-டன் நிறையுள்ள காகிதக் கட்டுக்கள் செலவழிந்திருக்கின்றன. இக்காகிதங்கட்காக 5,150,163-ராத்தல் மை அழிந்திருக்கின்றது. 8-பக்கங்கள் கொண்ட இப்பத்திரிகை மணி ஒன்றுக்கு 2,167,000-பிரதிகள் இயந்திரத்தில் அடிபடுகின்றது. படம் முதலியவைகளும் 8-பக்கங்கள் அடங்கிய 144,000-பிரதிகள் மணி ஒன்றுக்கு வெளியிடப்படுகின்றன. மொத்தத்தில் மணிக்கு நியூயார்க் டைம்சு பத்திரிகாலயத்தில் உள்ள அச்சு இயந்திரத்தினின்றும் 2,320,000 பத்திரிகைகள் வெளியாய்ப் பிரசுரிக்கப்படுகின்றன!

இப்பத்திரிகாலயத்தில் வாரம் 175,908,473 டாலர் சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகின்றது.

தந்தியின் மூலமாய்ச் செய்திகள் வருவிப்பதனால் வாரம் 98,000 டாலர் (ஒரு டாலர் ஏறக்குறைய 3-ரூபாயாகும்) செலவாகின்றது.

பத்திரிகாசிரியர்களும் அவர்களது சிப்பந்திகளும் மட்டும் 592-பேர்களிருக்கின்றனர். காரியாலயத்தில் 961-பேர்கள் வேலை செய்கின்றனர். இயந்திராலயத்தில் 1911—பேர்களும் மேற்பார்வையில் 80-பேர்களுமாக மொத்தத்தில் 3544 பேர்கள் இவ்வொரு பத்திரிகையில் தொழில் செய்து வருகின்றனர். நாளொன்று இப்பத்திரிகை வார நாட்களில் சராசரி 532,218-ம், ஞாயிறுதோறும் 727,133-ம் செலவாகின்றது!

இங்ஙனமிருக்க நம் நாட்டில்?

---



# அறிவியல் பகுதி

## வானநூலும் இந்தியப் பஞ்சாங்கமும்

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

[திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.]

### சந்திரன்

சூரிய மண்டலத்திலுள்ள கிரஹங்களில் அநேகமாக எல்லாவற்றிற்கும் உபகிரஹங்கள் இருக்கின்றன. அவ்வுபகிரஹங்களுக்குச் சந்திரனென்று பெயர். அவ்வாறு சந்திரனெனப் பெயர் பெற்ற உபகிரஹங்கள் பூமியைச் சுற்றி ஒன்றும், செவ்வாயைச் சுற்றி இரண்டும், வியாழனைச் சுற்றி ஐந்தும், சனியைச் சுற்றி ஒன்பதும், யூரேனஸைச் சுற்றி நான்கும், நெப்ட்யூனைச் சுற்றி ஒன்றும் ஓடுகின்றன. இவைகள் யாவற்றிலும் பூமண்டல வாசிகளாகிய நமக்கு மிகவும் முக்கியமானது பூமியின் உபகிரஹமாகிய சந்திரனே. சூரியனுக்கு அடுத்த படியாக நம்முலகிற்குத் தனது ஒளியினாலும் ஆகர்ஷணசக்தியினாலும் பேருதவி புரிந்து வருவது சந்திரனே. சந்திர ஒளி சூரியனுடைய ஒளி மாதிரி ஸ்திரமாக இராமல் எப்பொழுதும் மாறுதலடைந்துகொண்டே இருக்கிறது. உபகிரஹங்கள் யாவும் கிரஹங்களைப் போலச்சுய வொளியற்றன. அவைகள் ஏதாவதொரு கிரஹத்தைச் சுற்றுவதோடு சூரியனையுஞ் சுற்றுகின்றன. இவ்வாறு கிரஹங்களைச் சுற்றிக்கொண்டு சூரியனிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒளியை வெளியனுப்புவதால், கிரஹங்களிலிருந்து பார்ப்பவர்களுக்கு உபகிரஹங்கள் சில காலம் மறைந்தும், சில காலம் குறைந்தும், சில காலம் நிறைந்தும் தோன்றுகின்றன. இவ்வித மாறுதலுக்குக் கலைமாறுதல் என்று பெயர்.

சந்திரன் பூமியிலிருந்து சுமார் இரண்டரை லக்ஷம் மைலுக்கப்பால் பூமியைச் சுற்றி வருகிறது. உருவத்தில் பூமியைவிட மிகச் சிறியது. பூமியின் குறுக்களவில் சந்திரனுடையது நாலில் ஒரு பங்கு. நிறையில் சந்திரன் பூமியில் 50ல் ஒரு பங்கு கூட இராது. சந்திரனுடைய மேற்பரப்பை நாம் உற்று நோக்கினால் பல களங்கங்கள் நமது கண்ணுக்குத் தென்படுகின்றன. தூரதிருஷ்டிக் கண்ணாடியினுதவியினாலும், போட்டோகிருப் மூலமாயும் சந்திரதலத்தை மிகவும் தெளிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். சந்திரதலத்தில் சாம்பல் நிறமாய்த் தோன்றுபவைகள் அங்குள்ள சமுத்திரங்களின் அடித்தலங்களென்றும், ஒளியும் இருளும் கலந்து தோன்றுவன மலைகளும் அவற்றின் நிழல்களும் பள்ளத்தாக்குகளுமென்றும், சிறுசிறு கருவட்டங்களாகத் தோன்றுவன வெகு நாளைக்கு முன்னரே தீய்ந்துபோன எரி மலைகளின் சிகரங்களென்றும் கூறுகிறார்கள்.

### சந்திர கதி.

சந்திரன் தன்னைத்தானே சுமார் $29\frac{1}{2}$ நாட்களுக்கொருமுறை சுற்றிக்கொள்ளுகிறது. ஆகாயத்தில் சந்திரன் நக்ஷத்திரத்தை யபேக்ஷித்து, அதாவது ஒரு குறிப்பிட்ட நக்ஷத்திரத்திலிருந்து புறப்பட்டுத் தனது மாத யாத்திரையை முடித்துவிட்டு மறுபடியும் அதே நக்ஷத்திரத்திற்கு வருவதற்கு (Sidereal revolution) $27\frac{1}{3}$ நாட்கள் ஆகின்றன. சந்திரன் ஒரு குறிப்பிட்டதினத்தில்ஆகாயத்தில்எந்தப்பாகத்திலிருக்கிறது என்பதைஅறிவதற்காக நமதுஇந்திய வான சாஸ்திரிகள் சந்திரவீதியை 27 பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலுமிருக்கக் கூடிய முக்கியமான நக்ஷத்திரத்தின் பெயரை அந்தப் பாகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் முறையே அசுபதி பரணி முதலியனவாகும். ஒவ்வொரு பகுதியும் தினமொன்றுக்குச் சந்திரன் நகரும் தூரத்தை உத்தேசமாகக் காட்டுகிறது.

சூரியனை அபேக்ஷித்து ஒரு சுற்று சுற்றிவருவதற்குச் சந்திரனுக்கு $29\frac{1}{2}$ நாட்கள் ஆகின்றன. (Synodic revolution) மேற்கண்ட காலத்தைவிட இதற்கு இரண்டு நாட்களுக்கு மேல் அதிகமாவதற்குக் காரணம், அமாவாசைக்குப்பின் சூரியனிடமிருந்து கிழக்கு நோக்கி விரைவாக ஓட ஆரம்பித்த சந்திரன் மறுமுறை தன் பக்கத்திற்கு வருவதற்கு முன், சூரியன் கிழக்கு முகமாக நகர்ந்து தோன்றுவதுதான். சுமார் 27 டிகிரி சூரியன் நகர்ந்து தோன்றுவதால் சந்திரனுக்குச் சூரியனைப் பிடிப்பதற்கு இரண்டு நாட்கள் அதிகமாக ஓட வேண்டியிருக்கிறது. சூரியனை யபேக்ஷித்துச் சந்திரன் ஒவ்வொரு நாளும் எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்பதை யறிதற் பொருட்டுச் சந்திரவோட்டத்தை 30 பாகங்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு திதி என்றழைக்கிறார்கள். அவைகள் முறையே பிரதமை துதியை முதலியனவாகும்.

### சந்திர வீதி

சந்திரவீதி சூரியவீதிக்குச் சுமார் 5 டிகிரி சாய்வாக இருக்கிறது. சூரியவீதி வானமத்தியரேகைக்கு $23\frac{1}{2}$ டிகிரி சாய்வாக இருக்கிறது. இதனால்

சந்திரன் வான மத்தியரேகைக்கு $28\frac{1}{2}$ டிகிரி தெற்காகவும் $28\frac{1}{2}$ டிகிரி வடக்காகவும் சில காலங்களில் ஓடுகிறது. சூரியவீதியும் சந்திரவீதியும் சந்திக்கும் இரண்டிடங்களும் ராகு, கேது எனப்படுமென்று முன்னரே கூறியுள்ளோம். இவ்விடங்களும் மேஷ துலா சங்கராந்தி மாதிரியே. அதாவது, சூரிய வீதி வானமத்தியரேகையைச் சந்திக்கு மிரண்டிடங்கள் மாதிரியே ஒவ்வொரு சுற்றிலும் மேற்கு நோக்கி நகர்ந்து கொண்டே போகிறது. இச்சந்திப்பிடங்கள் வருஷமொன்றுக்கு மேற்கு முகமாகச் சுமார் 20 டிகிரி நகர்ந்து கொண்டுபோய்ச் சுமார் 18 வருஷத்தில் பழைய இடத்தில் வந்து சேருகிறது. இதனால் ராகு கேது எனும் இரண்டு சாயா கிரஹங்களும் 18 வருஷத்திற்கொருமுறை கிழக்கிலிருந்து மேற்குமுகமாக ஆகாயத்தை ஒரு சுற்று சுற்றி வருகிறதென் றறிகிறோம்.

## சந்திர கலைகள்

சந்திரன் பூமியைச் சுற்றிவரும் போது சில சமயங்களில் சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியிலும், சில சமயங்களில் இரண்டிற்கும் வெளியிலும் ஓடுகிறது. சந்திரனுடைய மேற் பரப்பில் தன்னை நோக்கியிருக்கும் ஒரு பகுதியை மாத்திரம் சூரியன் பிரகாசிக்கச் செய்கிறது. மற்றைய பகுதியை இருள் மூடிக்கொண்டிருக்கிறது. சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியிலிருக்கும் பொழுது சந்திரனுடைய பிரகாசமான பாகம் சூரியனை நோக்கி இருக்கிறது. இருள் மூடிய பாகம் பூமியை நோக்கி இருக்கிறது. ஆகையால் பூமண்டலத்திலிருப்போருக்குச் சந்திரன் தெரிவதில்லை. அன்று தான் அமாவாசை. சூரியனை அபேக்ஷித்துச் சந்திரன் $29\frac{1}{2}$ நாட்களுக் கொருதரம் சுற்றுகிறதென்று சொன்னோம். ஆகையால் அமாவாசைக்குச் சுமார் 15 தினங்களுக் கப்புறம் சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் வெளியே ஒரே கோட்டிலிருக்கும். அன்று சந்திரனுடைய ஒளிபெற்ற பாகம் பூமியையும் சூரியனையும் நோக்கி இருக்குமாதலால் பூமண்டலத்தி லிருப்போருக்குச் சந்திரனுடைய ஒளிபெற்ற பாகம் முற்றிலும் தெரியும். அன்று தான் பௌர்ணமி. அமாவாசை தினமுதல் பௌர்ணமி தினம் வரையில் சந்திரதலத்தின் ஒளிபெற்ற பாகம் நமக்கு அதிகமாகத் தெரிந்து கொண்டே வருகிறது. பௌர்ணமிக்குப் பின்னர் இருளடைந்த பாகம் அதிகமாகத் தெரிந்து கொண்டே வந்து, அமாவாசை யன்று சந்திரன் நமது கண்களுக்கு மறைந்து விடுகிறது.

## கிரஹணங்கள்

சந்திரன் பூமி இவைகளினுடைய நிழல்கள் அவைகள் வானவெளியில் சுற்றித் திரியும் போது அவைகள் பின்னலேயே செல்லுகின்றன. சூரியன் உருவத்தில் மிகவும் பெரிதாக இருப்பதனால் அந்நிழல்கள் வரவரச் சிறுத்துக் கூறிய முனைகளாக முடிகின்றன. பூமி சந்திரன் இவைகளிரண்டும் வானவெளியிலோடும் போது சில சமயம் சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியிலும், சில சமயம் பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியிலும் ஓடுமென்று முன்னரே சொன்னோம். அக்காலங்களில் சில வேளைகளில் சந்திரனுடைய நிழல் பூமியின் மீது படுகிறது; சில வேளைகளில் பூமியினுடைய நிழல் சந்திரன் மீது படுகிறது. சந்திரனுடைய நிழல் பூமியின் மீது விழும்போது, நிழலிலிருப்போருக்குச் சூரிய பிம்பம் முற்றிலுமோ அல்லது ஒரு பகுதியோ மறைந்து தோன்றும். இதைச் சூரிய கிரஹண மென்பார். பூமியின் நிழல் சந்திரன் மீது விழும்போது சந்திரன் ஒரு பகுதியிலேயோ அல்லது முற்றிலுமோ தனது ஒளியை இழக்கிறது. இதைச் சந்திர கிரஹண மென்பார். சந்திரன் உருவத்தில் மிகச் சிறிய தாகையால், சில காலங்களில் அதன் நிழல்கூர் பூமிக்கு எட்டாமல் அந்நிழலின் தொடர்ச்சியே பூமியை எட்டுகிறது. அக்காலங்களில் சந்திரன் சூரிய பிம்பத்தை மத்தியமாக மறைக்கும். சூரியனை அப்போது பார்க்க ஓர் அக்கினி மோதிரம் போல் விநோதமாக இருக்கும். இதைக் கங்கண சூரிய கிரஹண மென்பார். இச்சம்பவம் சந்திரனுக்கு நிகழ்வதில்லை. ஏனெனில், பூமியின் நிழல் மிகவும் நீண்டிருப்பதால் சந்திரவீதி அதற்குள்ளேயே அடங்கிவிடுகிறது.

சூரிய வீதியும் சந்திரவீதியும் ஒன்றுக்கொன்று சாய்ந்திரா விட்டால் அமாவாசை தோறும் சூரிய கிரஹணமும், பௌர்ணமி தோறும் சந்திர கிரஹணமும் ஏற்படும். அவைகள் ஒன்றுக்கொன்று சாய்ந்திருப்பதால் அவைகள் சந்திக்கு மிடங்களாகிய ராகுகேதுக்களில் சூரிய சந்திரர்கள் வரும்பொழுது மாத்திரந்தான் கிரஹணங்கள் ஏற்படுகின்றன. ஒரே சந்திப்பிடத்தில் இரண்டும் வரின் சூரிய கிரஹணமும், ஒவ்வொரு சந்திப்பிடத்திற்கும் ஒவ்வொன்றாய் நிற்பின் சந்திரகிரஹணமும் ஏற்படுகிறது.

## புதன்

சூரியமண்டலத்திலுள்ள கிரஹங்களெல்லாவற்றிலும் சூரியனுக்கு அதிக சமீபமான தூரத்திலிருப்பது புதன். உருவத்தில் புதன் மிகச் சிறியது. அதன் குறுக்களவு சுமார் 3000 மைல்கள். பூமியின் குறுக்களவு 8000 மைல்கள். அது சுமார் மூன்று கோடி மைல்களுக்கப்பால் நின்று சூரியனை 88 நாட்களுக் கொருதடவை சுற்றி வருகிறது. தன்னைத் தானே சுற்றிக்கொள்வதற்குச் சுமார் 23 மணி நேரமாகிறது. இக்கிரஹம் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் நின்று சூரியனைச் சுற்றிவருவதால் பூமண்டலத்திலிருப்பவர்களுக்குச் சூரியனுக்கு எதிர்ப்புறமாக ஒருகாலும் தோன்றாது. சூரியனிடமிருந்து கிழக்கிலும் மேற்கிலும் 16 முதல் 28 டிகிரிக்குமேல் விலகியோடாது. ஆகையால் இக்கிரஹத்தைக் காண விரும்புகிறவர்கள் சில சமயம் உதய காலத்திலும், சில சமயம் அஸ்தமன காலத்திலும் தான் காணலாம். சந்திரன் சூரியனை மறைக்கிறது போல சில சமயங்களில் புதனும் சூரியனை மறைப்ப துண்டு. அக்காலங்களில் புதன் சூரிய



பிம்பத்தின்மேல் ஒரு சிறு கறும்புள்ளி போல் தோன்றும்.

## சுக்கிரன் (வெள்ளி)

சூரிய மண்டலத்திலுள்ள கிரஹங்களெல்லாவற்றிலும் மிகவும் பிரகாசமானது சுக்கிரன். சூரியனிடமிருந்து இது இரண்டாவது கிரஹம். உருவத்தில் அநேகமாகப் பூமியை ஒத்தது. சுமார் ஆறரை கோடி மைல்களுக்கப்பால் நின்று சூரியனை 224 நாட்களுக் கொருதடவை சுற்றி வருகிறது. சுமார் 24 மணிக் கொருதரம் தன்னையே சுற்றிக்கொள்ளுகிறதென்று சொல்லுகிறார்கள். இக்கிரஹமும் புதனைப்போல் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் நின்று சூரியனைச் சுற்றுவதால் சூரியனுக்கு எதிர்ப்புறமாக நமக்கு ஒருகாலும் தோன்றாது. சூரியனிடமிருந்து கிழக்கிலும் மேற்கிலும் 47 டிகிரிக்கு மேல் விலகியோடாது. புதனைப்போல் இக்கிரஹமும் சில வேளைகளில் சூரியனை மறைப்ப துண்டு.

பூமியின் வருஷ கதியையுந் தன்னுடைய வருஷ கதியையும் அபேக்ஷித்துச் சுக்கிரன் ஒரே இடத்திற்கு வருவதற்கு 584 நாட்கள் ஆகின்றன. அதாவது, இன்று பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் ஒரே ஒழுங்கில் சுக்கிரன் நின்றால் அதிலிருந்து சிறிது சிறிதாக விலகிப்போய்ச் சூரியனைச் சுற்றி மறுபடி பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் வருவதற்கு 584 நாட்கள் ஆகின்றன.

(தொடரும்)


ஸ்ரீலோலன்

(ஓர் இனிய துப்பறியும் நாவல்)

எளிய நடை ! இனிய உரை !

மற்ற நாவல்களைப்போலன்றி

நன்னீதிகளைப் புகட்டுவது.

இன்றே வாங்கிப் படியுங்கள்.

விலை ரூ. 1–4–0.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை,

(9)F பவழக்காரத் தெரு, சென்னை.



மகம்மேரு தைலம்.



கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளுக்கெல்லாம் இந்தத்தைலமானது மிகவும் கைகண்டது. சிரசைப்பற்றிய வாதநீர்சாலேநீர் மேகநீர் பித்த சுரத்தைக் கண்டித்துநேத்திரத்தில் பித்தநீராவது, மேகநீராவது, கபாலத்தைப்பற்றியிருக்குமாகில் தலைமுழுதும்நமைச்சல், ஊரல், எரிச்சல், தலைமயிர் உதிரல், தலையில் சுண்டுகள், தலையில் ரணங்கள் இப்பேர்க்கொத்த கபால ரோகங்களை கைக்கு மெய்யாய் கண்டிப்பதினால் மகம்மேரு தைலமென்று பேர் வைக்கப்பட்டது. மேலும் மேக வெட்டையினாலாவது பித்தச் சூட்டினாலாவது உதிரம் கெட்டுப்போய் திரேகமுழுதும் ஊரல், நமைச்சல், சொரி, சிரங்கு, அழுக்குத்தேமல், தேகவரட்சி, தேகவெளுப்பு கண்களில் முகத்தில் இரத்தமில்லாமல் வெளுத்துப்போதல் இப்பேர்க்கொத்த வரட்சிகளெல்லாம் தணித்து நல்ல இரத்த ஓட்டமுண்டாக்கும்.

இந்த தைலத்தை நாலுநாளைக்கொருமுறை அதிகாலையில் தலைமுழுகவேண்டியது. அன்றையதினம் பகல் நித்திரையும் தயிர் மோர் குளுமையான பதார்த்தம் இதுகள் மட்டும் ஆகாது. மற்றபடி வேறே யாதொரு பத்தியமும் இடையாது.

ஆழாக்கு தைலம் புட்டி ரூ. 1 8 0

விஷ ஹரி,

தேள், பாம்பு, இதர விஷ ஜந்துக்களின் கடியின் விஷ வேதனையை உடனே நீக்கும்.

ஆயிரக்கணக்கான ஜனங்களின் உயிர்களைப் பல கிராமாந்திரங்களிலும் வயல்களிலும் வயல்களிலும் காப்பாற்றிப் பிரசித்தியடைந்து இருக்கிறது. ஒரு புட்டி உம்மிடமிருந்தால் சமயத்தில் ஓருயிரைக் காப்பாற்றலாமென்று உண்மையாய் நம்புங்கள்

விலை புட்டி 1-க்கு ரூ. 1 0 0
புட்டி 3-க்கு ரூ. 2 8 0

தபாற்பெட்டி நெ. 288,
ஆனந்தா வைத்திய சாலை,
சென்னை.




## கற்பு நிலை

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

[திரு. S. பாக்கியநாத முதலியார் அவர்கள்]

*கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறே*
*ரிற்புறத் தலைவ ரைநாடார் யாங்களுமின்பவாழ்வுந்*
*தற்பொறியாகநல்குந் தலைவனின்னலதோர்தெய்வம்*
*பொற்புறக்கருதோங்கண்டாய்பூரணனந்தவாழ்வே*

—தாயுமானவர்.

ஒரு ஸ்திரீயானவள் தன் சொந்த நாயகனிருக்கச் சோரநாயகனை விரும்பாமலிருப்பதே கற்புநிலைமை என்று அநேகர் கருதுகின்றனர். அது ஒரு வகையாய் நியாயமான தென்று ஒப்புக்கொண்ட போதிலும், சோர நாயகனைக் கிஞ்சித்தும் இச்சியாமல் சொந்த நாயகனின் சம்ரட்சணைக்குள் ளிருக்கின்ற ஒரு மனைவியானவள் இந்தப் புருஷனைச் சரியான படி பாதுகாக்காமலும், அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்காமலும், அவன் சொல்லுவதற்கெல்லாம் எதிரிடை பேசிக்கொண்டு மிருந்தால் அவள் கற்பு நிலைமையுள்ளவளல்ல என்று அபிப்பிராயப்படுகிறோம். கற்பு என்னும் அம்சமானது சர்வஜனங்களுக்கும், சகல மதஸ்தர்களுக்கும் பொதுவானதாயிருந்த போதிலும், மேற்கண்ட அபிப்பிராயத்தை நமது செங்குந்த மாது சிரோமணிகளுக்கு மாத்திரம் நமது மித்திரன் மூலமாய்ப் பிரசித்தம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இதை எழுதியிருக்கிறேன்.

"மனைவிகளே, உங்கள் புருஷர்களுக்குக் கீழ்படியுங்கள்" என்று விவிலிய நூல் கூறுகிறது. கீழ்ப்படியுங்கள் என்ற ஒரே வார்த்தையில் சகல சாராம்சங்களும் அடங்கியிருக்கின்றன. மனைவியானவள் தன் புருஷனுக்கு அடங்கி அவனுக்குக் கீழ்ப்படிந்து அவனுக்கு எதிர் பேசாமல் அவனுடைய வார்த்தையை மேலானதாகக் கொண்டு அவனுக்குப் பயபக்தியாய் நடக்கும் பக்ஷத்தில் அவள் தன் கணவனை மிகவும் மதிப்பா யெண்ணி யிருக்கிறாள் என்பது யாவருக்கும் பிரத்தியட்சமாய்த் தெரிவதுமன்றி அதன் மூலமாய் அவளுடைய பதிவிரதா தர்மமும் சிறந்து விளங்கும். கணவன்பேரில் உண்மையும் மதிப்புமான சிந்தை மனைவிக்கு இருக்குமாகில் அவளுடைய சுயாதீன கற்பு நிலைமை இயற்கையாய் ஜொலிப்பதுமன்றி அவளிடத்தில் தெய்வீகத்தன்மையும் காணப்படும். அவள் வாயினால் சொல்லுவது பலிதமாகும்.

ஒரு மனைவியானவள் மற்ற தெய்வத்தை வணங்காமல் தன் கணவனையே தெய்வமாகப் பாவித்து அவனை வணங்கி வருவாளாகில் அவள் மழை பெய்யச் சொன்னால் உடனே மழை பெய்யும் என்ற கருத்தைக்கொண்டு,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்றும், தம் கணவரை வணங்கும் பெண்களைத் தேவர்கள் தொழுவார்கள் என்னும் கருத்தமைய,

"பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிற் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு"

என்றும் தமிழ் நாட்டுத் தீபம்போன்ற திருக்குறள் நமக்குப் போதிக்கிறது. ஊரார் மதிக்கத்தக்கவளாயும், நாயகனுக் குகந்தவளாயும், மெல்லிய சொல்லுடையவளாயுமிருக்கின்ற மாதரே கற்புடையவள் என்னும் தாத்பரியங் கொண்டு,



"*கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா*
*ளுட்குடையா ளூர்நா ணியல்பினா - ளுட்கி*
*யிடனறிந் தூடி யினிதி னுணரு*
*மடமொழி மாதராள் பெண்*"

என்று நாலடியார் (கற்புடைமகளிர் பகுதி) கூறுகிறது. இதை யல்லாமல் குமரேச சதகம் பாடிய நூலாசிரியர் அநேக நீதிகளைச் சொல்லுவதோடு

"*ஆதுலர்க்கன்னங் கொடுத்தவர்களே தெய்வ*
*மன்பான மாணக்கருக்*
*கரிய குருவே தெய்வ மஞ்சினோர்க் காபத்*
*தகற்றினோனே தெய்வமாம்*
*காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாங்*
*கணவனே மிக்க தெய்வம்*
*காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு*
*காக்கு மன்னவர் தெய்வமாம்*
*ஓதரிய பிள்ளைகட் கன்னை தந்தையர் தெய்வ*
*முயர்சாதி மாந்தர் யார்க்கு*
*முறவின் முறையார் தெய்வம் விசுவாச முள்ள*
[*பேர்க்*
*குற்ற சிவபக்தர் தெய்வம்*
*மாதயைனிற் சூத்திரர்க்கு மறையோர் தெய்வம்*
*வானவர்க்குத் தெய்வநீ*
*மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு*
*மலைமேவு குமரேசனே*"

என்று வியக்தமாய்ச் சொல்லியிருக்கிறார்.

இவற்றை நோக்குங்கால் ஸ்திரீகளுக்கு தன்கணவன் தான் தெய்வமேயன்றி வேறொரு தெய்வமில்லை யென்பது பிரத்தியக்ஷமாகிறது.

சிவபெருமான் தினந்தோறும் வில்வார்ச்சனை செய்து பூஜை பண்ணிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் அவருடைய மனைவியாகிய உமாதேவி வந்து தன் கணவனிடத்தில் "சுவாமி, உலகத்திலுள்ள சர்வஜனங்களும் உம்மைப் பூஜிக்கின்றார்களே அப்படியிருக்க நீர் யாரைக் குறித்துத் தினந்தோறும் பூஜைபண்ணுகிறீர்," என்று கேட்க, அதற்கு அவர்,

"1, சாஸ்திரங்களை நன்றாய்க் கற்றுணர்ந்து அதன்படி நடக்கின்ற உண்மையான சிவனடியார்கள்.

2, பசித்தவர்களுக்கு அன்னங்கொடுத்துக் காப்பாற்றுகிற தயாள சிந்தை யுள்ளவர்கள்.

3. பற்பல தர்மங்களைச் செய்கிறவர்கள்.

4. சதாபிஷேகம் என்னும் சடங்குநிறைவேற்றப்பட்டு 84 வயதுக்குமேற்பட ஜீவித்திருக்கும் வயோதியர்கள்.

5. நெறிதவறாமல் விரதங்களை யனுஷ்டிக்கிறவர்கள்.

6. கணவருக்கு அடங்கிக் கீழ்ப்படிந்து நடக்கிற மாதுசிரோமணிகள்.

ஆக இந்த ஆறுபேர்களையும் நான் நமஸ்கரிக்கிறேன்" என்று உத்தரம் சொன்னதாக ஒரு சரித்திரம் வழங்குகிறது. இதை உற்று நோக்கின்கணவருக்குத்திருப்திகரமாய்நடந்து கொள்ளும் உத்தம ஸ்திரீகள் சிவபெருமானால் பூஜிக்கப்படும் உன்னதமான சிலாக்கியத்தை யடைவார்க ளென்பது நன்கு புலப்படுகிறது.

சுருதிக ளிங்ஙன மிருக்க, யுக்தி, அநுபவம் என்னும் அம்சங்களைக் கவனிக்கும்போதும் கணவனையே தெய்வமாகப் பாவித்து எந்த விஷயத்திலும் கணவனுக்குத் திருப்திகரமாய் நடந்து கொள்ளும் உத்தமஸ்திரீயோடு கூடி வாழும் சிலாக்கியத்தைப் பெற்ற புருஷனே உலகத்தில் சர்வ சந்தோஷமும் நிறைந்த புண்ணியமும் பெற்ற புருஷனாவான். பூர்வத்தில் அவன் செய்த தவமே மேலான தவமாகும். பூர்வதவப்பயனால் அவனடைந்த புருஷார்த்தமே பரமபுருஷார்த்தமாகும். இவ்வித அநுகூல தாம்பத்தியம் கிடைக்குமாயின் அது எவையோருடைய பார்வைக்கும் மங்களகரமா யிருக்கும். இந்தப்புண்ணிய தம்பதிகள் சதாநேரமும் பரஸ்பர அன்பும் உண்மையுமாயிருந்து அவர்களுக்கு உற்பத்தியாகிற புத்திர சிகாமணிகள் மேன்மையான புத்தி கூர்மைதங்கி வானஜோதிகளைப்போலப் பிரகாசிப்பார்கள். அவர்கள் பெற்றோர்பேரில் பூரண அநுதாபங்கொண்டு சகோதரர் பேரிலும் யாதொரு விவாதமுமின்றி வாஞ்சை யுள்ளவர்களா யிருப்பார்கள். அவர்கள் கடவுளுடைய ஆசீர்வாதம் பெற்றுச் சகல கலைக்யானங்களிலும் மேம்பட்டவ ராவார்கள். அவர்களுக்கு உண்மையே உறைவிடமா யிருக்கும். இதற்கு விரோதமாய் ஒன்றுக்கொன்று நம்பிக்கையில்லாமல் உட்பகைகொண்டு பர்த்தாவின் வார்த்தையை மதியாமல் எந்தநேரமும் கணவனிடம் எறுக்குமாறு பேசும் துஷ்டமனையாளோடு மிருகத்துக் கொப்பான வாழ்க்கைசெய்து அதன் மூலமாய் ஜெனனமாகிற பிள்ளைகள் கேவலமான நிலைமையில் மட்டுப்புத்தியாய் ஜீவிப்பதுமன்றிப் பெற்றோர் பேரிலும் சகோதரர் பேரிலும் விரோதங் கொண்டு எக்காலமும் பொய்யையே உறைவிடமாகக் கொள்ளுகிறார்கள். இது அநுபவத்தில் கண்டறிந்த விஷயம்.

ஆகையால் சீரியகுல செங்குந்த மாதுசிரோமணிகளே, 'நமது செங்குந்த மித்திரன்' ஜெனனமாகி மூன்று வயது முடிவடைந்து விட்டது. அவன் மற்ற பத்திரிகைகளைப்போல ஆடம்பரமான செய்திகளை நமக்குத் தெரிவிக்க வாராமல் பின்னணியின் அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருக்கும் நம் குலமக்களைச் சீர்திருத்தி நமக்கு அப்போதைக்கப்போது வேண்டிய அறிவைப் புகட்டி நம்மை முன்னேற்றத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்ற பிரதான நோக்கத்துடன் வெளிவந்திருக்கிறான். அவ்வாறே இதுவரையும் அவன் நமக்கு அநேக நற்போதனைகளைப் பிரஸ்தாபித்திருப்பதுமன்றி நமது மகா நாட்டையும் கூட்டிவைத்தான். அதன் மூலமாய் நாம் சில சீர்திருத்தங்களடைந்துமிருக்கிறோம். அதுபோலவே இப்போது அவன் சொல்லும் இந்தக் கற்பு நிலை என்னும் வியாசத்தை நீங்கள் நன்றாய் வாசித்தும் அல்லது வாசிக்கக் கேட்டும் அதன்படி நடக்கப் பிரயாசைப்படுங்கள். அவ்விதம் நீங்கள் சீர்திருத்தமடைய வேண்டியதற்காகவே நமது காருண்ய தலைச்சங்கத்தார் நமக்குள் பெண்கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற அபிலாஷை யுடையவர்களாயிருக்கிறார்கள். உங்களுடைய கற்புநிலையே நமது ஜாதியின் முன்னேற்றத்துக்கு ஒரு முக்கிய சாதனமாகும். அந்நிய முகம் பாராமலிருப்பதுதான் கற்புநிலைமை என்று நீங்கள் நினைக்கவேண்டாம். இப்படியிருந்தால் மாத்திரம் போதாது. திருவள்ளுவ நாயனாரின் பரிசுத்த மனைவியாகிய வாசுகியம்மையாரின் திருப்பாதாரவிந்தங்களை நீங்கள் வணங்கி அவரை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு கணவருக்கு அடங்கிக் கீழ்ப்படிந்து எந்த விஷயத்திலும் கணவருக்குத் திருப்திகரமாய் நடந்து கொள்ளுவதே மேலான கற்பு நிலை என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். கணவரிடம் பொய் பேசாமல் எப்போதும் உண்மையையே பேசவேண்டும். கோபமுகத்தோடும் உரத்த சத்தத்தோடும் கணவரிடம் எதிரிடை பேசாமல் சாந்த குணத்தோடும் இனிய குரலோடும் பேச வேண்டும். கணவருக்குக் கீழ்ப்படியாமல் இரைச்சலிட்டுச் சண்டை போடுகிற ஸ்திரீகள் எந்த வீட்டிலிருப்பார்களோ அந்த வீடு ஒருகாலும் விருத்தியடையப்போவதில்லை யென்பது திண்ணம்.

நாளாயினி சரித்திரத்தை நீங்கள் வாசித்துப்பார்த்துக் கற்புநிலையைக் கற்றுக் கொள்ளுங்கள்.

அவ்விதம் நீங்கள் கணவரிடம் பயபக்தியாய் நடந்து வருவீர்களாயின் உங்களுக்குத் தெய்வ கிருபையும் சமாதானமும் உண்டாவதோடு உங்கள் வயற்றில் ஜெனனமாகும் சந்ததிகளும் கடவுளுடைய ஆசீர்வாதம் பெற்று மேலான நிலைமையிலிருப்பார்கள்.

---


## சுகந்த பரிமள சாஸ்திரம் அணா 12

இதில் மல்லிகை முதலிய புஷ்பங்களை முகர்ந்தால் பேதியாகக்கூடிய முறைகள்; தாம்பூலம் காபி முதலியவற்றால் பேதியாகக் கூடிய முறைகள்; சுகந்த மூக்குத்தூள், கூந்தல் தூபம், ஸ்நானப் பொடி பெங்களூர் முதலிய ஊர் ஊதுவத்திகள், அத்தர் பில்லைகள், மயிர்வளரும் பரிமளத் தைலங்கள், ஸ்நானத் தைலங்கள்; பலவகை ஷர்பத்துகள் முதலியன செய்யு முறைகள் அடங்கியிருக்கின்றன.

## கனக சாஸ்திரம் அணா 12

கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம், கர்ப்பூரம், சாம்பிராணி, பெருங்காயம், பவழம், செம்பு, கெம்பு, தம்பாக்கு, முத்து, முதலிய வைப்புச் சரக்குகள் செய்யுமுறைகளும்; அயமணி, இரசமணி, பன்னீர், கற்கண்டு முதலியன செய்யுமுறைகளும் அடங்கியது.

ஸௌத் இண்டியன் புக் டிபோ,
2/17, பவழக்காரத் தெரு, சென்னை.




# ஆராய்ச்சிப் பகுதி

## முருகன்

[திரு. ஜ. இராஜ- முதலியார்]

உலகமானது நித்தப் பொருள்களையும் அநித்தப் பொருள்களையும் அடக்கிக் கொண்டிருக்கின்றது. நித்தப் பொருள்கள் யாவும் அழியாதவை. மற்றைய அழிபவை. அழியாதவை தோற்றமு மில்லன. தோன்றும் பொருள்கள் யாவும் அழிவனவே. தோன்றுமவிருப்பன 'இயற்கைப் பொருள்களெனவும், தோன்றும் பொருள்களியாவுஞ் செயற்கைப் பொருள்கள் எனவும் அழைக்கப் பெறும்.

வான், காற்று, தீ, நீர், நிலன் என்னும் ஐம்பெரும் பொருள்களும், ஞாயிறும், திங்களும், ஆன்மாவும் அழியாதன. இவற்றுள் செயற்கையாகத் தோன்றுமவை அழிபவை. நம்முடல் ஐம்பெரும் பொருள்களின் கூறுகளாகத் தோன்றிய செயற்கை. ஆகவே அழியுந்தகையது. இப்பொருள்களின் வேறாயும் இப்பொருள்களேயாகவும் இருந்து இவற்றையியக்குவிக்கும் அழிவிலாப் பேரொளியாய்ப் பேரொலியாய் இருக்கக் கூடிய அறிவுப் பொருள் ஒன்று இருக்க வேண்டும்.

பண்டைக் காலந் தொட்டு மக்கள் இப்பொருளை யாராய்ந்து வருகின்றனர். ஆயினும், இன்னும் அறிந்த பாடில்லை. 'பொருள் ஒன்று இருக்கின்றது' என்பதை மட்டும் உறுதிப் படுத்தி யுள்ளார்கள். உறுதிப்படுத்தும் ஆற்றலின்றி, அத்தகைய பொருளொன்றில்லை யென்றே கூறித் திரிவாரும் பண்டையிருந்தே இருக்கின்றனர். அவர்கள் உண்மையைப் பொய்யாகவும் பொய்யை யுண்மையாகவும் மாறுபடுத்தி யுணரும் திரிவுணர்வினர். அத்தகைய பொருளொன்றில்லையாயின் உலக மியங்க வியலாது. இயற்கையின் றேற்றமெனின், அங்ஙனந் தோற்றுவிக்கும் பொருள்தான் யாதோ வென்னும் வினவிற்கு விடையின்மை யுணர்க. தாமே தோன்றுபவையில. ஆகவே, தோற்றுவிக்கும் பொருளொன் றுண்டென்பதே அறிஞர் கண்ட முடிபு.

இத்தகைய பொருள் இயற்கைப் பொருளாயுள்ளது. ஆகையால் தோற்றமும் ஈறும் இன்றி யெப்பொழுதும் ஒரே தன்மைத்தாயிருக்கும் என்பது முன்பாராய்ந்த வுண்மை. ஆகவே, இவ்வழியாம் பொருட்கு முன்னோர் "முருகு" என்னும் பெயரை வழங்கினர். ஆண்டகைமைச் சிறப்புடைமை பற்றி அன் விகுதி சேர்த்து முருகன் என்பர். அன்றியும் முற்கூறியவாறு இன்னதென அறிய வியலாத் தன்மையதாயிருப்பது பற்றிக் "கடவுள்" என்றும் கூறினர். ஆகவே, கடவுள், முருகன் என்னுஞ் சொற்கள் இன்னதென வொரு பொருளை வரைந்து சுட்டாமல் இயற்கையாய் இருப்பன என்பது மறுக்க வியலா நிலைமையவாகும்.

"குறியிலன் அலதொரு குணமிலன் எனநினை
அறிபவர் அறிவினும் அறிவரு நிலையினை"

என்பது "அறியா நிலைய பொருள்" என்பதை யுணர்த்துவதாகும். அத்தகைத் தாயினும் இருக்கிறதென்பதை நம்புதற்கு யோக முயற்சியினர் அடையும் பேரொளியுஞ் சான்றாகும்.

### முருகன் தமிழ் நாட்டார் தெய்வம்

மேலாராய்ந்த முருகன் என்னுஞ் சொல்லை வழங்கி வந்தோர் தமிழ் மக்களே என்பதும் யாவர்க்கும் ஒப்ப முடிந்த வுண்மை. இது பற்றியே முருகனைத் தண்டமிழ்த் தெய்வமாகக் கொண்டொழுகுவர் அறிஞர். முருகன் பேரருட் பெருக்கை யடைந்த ஸ்தலங்கள் இன்னும் யாவராலும் மதவேற்றுமை யின்றி கொண்டாடப் படுகின்றன. இதுபற்றியே முருகன் திருப்புகழை வாரியாக வளித்த அருணகிரிப் பெருவள்ளலார்,

'மொய்தாழ் குழற்சிறு வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மங்கு வாழவைப்
போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான்
றலைபத்துங் கத்தரிக்க

எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே.''

என வாழ்த்தினர் போலும்.

''மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே.''

என நால்வகைத் தெய்வங்களை வழங்கினர். தமிழ்நாட்டின ரெனக் கூறப்படினும் உண்மைப் பொருளை யுணர்த்துஞ் சொல் முருகன் என்னுஞ் சொல்லேயாதலானும், மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்னுஞ் சொற்கள் பிற்காலத்தன வாகலானும், ஆதியூழியில் முருகன் என்னுஞ் சொல்லே கடவுட் டன்மையை யுணர்த்துஞ் சொல்லாகத் தமிழ் மக்களாற் கொள்ளப்பட்டமைக்கு முருகன் தமிழ்த் தெய்வம் என்பதே சான்ருகலானும் ஐயப்பாடின்ரும். தொல்காப்பியத்தில் ஆரியச் சொற்களை வழங்குதற்கு விதியிருக்கின்றமையானும், வேந்தன், வருணன் என்பது ஆரியச்சொற்க ளாகையினுனும் தொல்காப்பியம் ஆரியக் கலப்புக்குப் பின்னரே எழுதப்பட்ட தென்பது தெள்ளிது.

அங்ஙனமாயின், ஆரியக் கலப்பென்று கூறுதற்குக் காரணமென்ன? ஆரியர்கள் வழக்கிற்கு முன்னர் தமிழ்மக்கள் நாகரிகமடைந்துள்ளனரா? தொல்காப்பியத்தின் ஆசிரியராய அகத்தியரன்றே தமிழை இலக்கணப்படுத்தினர்?

''வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி
[யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந்
[தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்
.............................................''

என்பது சான்ருமன்றே? அங்ஙனமிருக்க, ஆரியக் கலப்பின்றித் தமிழ் மக்கட்கு நாலிருந்த தென்பது பொருந்துமா? எனின், அஃது ஆராய்ச்சியில்லார் கூற்ருகும். எங்ஙனமெனின், ஆரிய முனியாகிய அகத்தியர் தென்னுட்டிற்கு வருங்கால் தமிழர்களிடம் பழகுவதற்குச் சிவபிரானிடத்து தமிழைக் கற்ருர் என்பதும், அங்ஙனமே முருகக்கடவுளிடங்கற்ருர் என்பதும், அகத்தியர் தமிழறிஞரிடந் தமிழைக் கற்றமையைக் கற்பித்துக் கூறும் கற்பிதமேயாகலானும், ஒருவர் ஒரு மொழியைக்கற்று உலகிற் ருணர்த்தினர் என்பது ஆராய்ச்சிக்கும் இயற்கைக்கும் முரணுகலானும், அகத்தியருந் தம்மாற் செய்யப்பெற்ற நாலை முன்னேர் நாலின் வழியே செய்தனர் என்பதற்கு ''என்மனர்,'' ''என்ப'' என்னும் வாசகங்கள் அவர் நாலாய அகத்தியத்திலிருந்தவாக மேற்கோளாகக் காட்டும் சூத்திரங்களிடத்துக் காணப்படுதலே சான்ருகலானும் அவர்கள் கூற்று ஆதாரமுடைத்தன்று.

இங்ஙனங் கூறியவற்ருனும், மொழியாராய்ச்சியாளரால் ஒப்புக் கொள்ளப் பெற்ற மொழித் தோற்றத்தின்படி தமிழ் மக்களிடைத் தமிழ்மொழி வளர்ந்து இலக்கண வழக்குப் பெறுவது தமிழ் மக்களின் நாகரிக வளர்ச்சியின்றி யியலாதாகையானும் தமிழர்களிடை நாகரிக மிருந்தமை புலனும்.

ஆகையால், ஆரியர் கள் கலப்பிற்கு முன்னரே தமிழர்கள் நாகரிகம் பெற்றுத் தெய்வ வழிபாடுடையரா யிருந்தன ரென்பதும், அங்ஙனம் அவர்களாற் றெய்வமாகக் கொள்ளப்பட்டவன் தண்டமிழ் முருகனே யென்பதும், மற்றைய தெய்வங்களும் அவற்றை யுணர்த்துஞ் சொல்லும், பின்னரே தோன்றினவை யென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி. தெய்வங்கள் தோன்று தலென்பது தெய்வ வழிபாடுடைத்தாதல், தெய்வத்திற்குத் தோற்றமும் அழிவுமின்மையின்.

கடவுளை வழிபாடுசெய்து அதனுற் பேரொளி பெறுவதற்குக் கடவுட்கு வடிவமும், குணமும், பல்வேறுவகைப் பெயர்களும், மதங்களுந் தோன்றின. மதங்களின் போக்கினுலொன்றுக்கு மற்ருென்று வெளிப்படையாக முரண்பாடுகள் காணப் பெற்றன. உள்ளுறையாக வேறுபாடின்று என்பது அறிஞர் கொள்கை. அதனுல் கொள்கைகளை யறிசரிப்பாருக்குள் சச்சரவுகள் உண்டாயின. சச்சரவுகள் ஆராய்ச்சி யின்மையாலேயே யுண்டாவன வாகும்.

நிற்க, நாம் இனி முருகன் என்னும் சொல்லின் பொருளையே ஈண்டு ஆராயவேண்டுவது. ஞாயிற்றின் பேரொளியும், திங்களின் றண்ணொளியும், வானின் பெரும் பரப்பின்றன்மையும், காற்றின் ஆற்றலும், நீரின் நீர்மையும் வலிமையும் நாம் அநுபவிப்பவையே. ஓங்



கிரும் பெருங்குன்றின் பாங்குறுந் தோற்றம் நம் உள்ளத்தை உருக்குவதே.

''கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை
[கிடைத்த
குளிர் தருவே தருநிழலே நிழற்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தெண்ணீரே
உகந்த தெண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மல
ரோடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே [ரே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பய
[னே''

என இராமலிங்க வள்ளாளர் வர்ணித்தாங்கு இயற்கையின் இன்பத்தை யநுபவியா வறிஞர் இலர். இவ்வியற்கையின் வடிவமாயும் வேருயும் இருந்து நமக்குப் பேரருள் புரிவோன் முருகனே யன்ருே? முருகன் அழகன். உலகின் அழகே முருகன். முருகனே யாவருள்ளத்தும் நிலைபெற் றிருக்கும் பேரொளிய அறிவு. முருகனே யாவரிடத்தும் உண்டாகும் ஆனந்தம். யோகிகளின் உள்ளத்துநிலைபெற்றிருக்கும் பேரின்ப வுருவு முருகனே. பலவிதமான நாம ரூபங்களாய கடவுளர்களாக அறிஞர்கள் வழிபடும் வண்ணம் நித்தியப் பொருளா யுள்ளவன் முருகனே.

''மாலோன் மருகனை மன்ருடி மைந்தனை வான
[வர்க்கும்
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை
[மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று
[கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்திலனே அந்த நான்
[முகனே.''

என்பது அருணகிரியாரின் ஆநந்தப் பெருக்கு. மாலோனுக்கும் மன்ருடிக்கும் மருமகனையும் மைந்தனையு முள்ளவன் என்பது பிற்காலக் கற்பித வழக்கை யொட்டிய கூற்று; கடவுட்கு அத்தன்மையில்லையாதலான், முருகன் யாவர்க்கும் ஆறுமுகனுயான். இக்காலத்தினும் முருகன் யாவராலும் போற்றப் படுபவன். செம்மை + வேள் = செவ்வேள், நற்பொருளும் விரும்பப்படும் பொருளும் செவ்வெள். நற்பொருள் செம்மைப் பொருள். பண்டைத் தமிழர் முருகன், செவ்வேள் என்னும் பெயர்களையே வழங்கினர் எனத் தெரிகிறது. தெய்வக்கொள்கை சம்பந்தமான எச்சொற்களும் ஆரியர் காலத்திற்குப் பிறகு தமிழ்ப் பெயரால் வழங்கப்பட வில்லையெனத் தெரிகிறது. ஆகையினுற்ருன், அச்சொற்கள் பண்டைத் தமிழரால் உபயோகிக்கப்பட்டவை எனக்கூற நேர்கிறது; தமிழர் இமிழிசை முருகென வுருகின ரென்பதற்கு வேறு சாற்றுகள் வேண்டா. இவையே போதும். முருகாய செவ்வேளின் பிற பெயர்களிற் பல ஆரியர்களாற் கொடுக்கப்பட்டவை. அவற்றுள் புராண கற்பிதமான பெயர்களும் இயற்கைத் தோற்றப் பெயர்களும் உள்ளன.

(இன்னும்வரும்)

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புதுமாடல்
கைக்கெடியாரங்கள்.



இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானுலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம். ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினன் வாட்சு கம்பேனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.




## பிணமகனே மணமகனானான்

[திரு. ஜே. தங்கவேல்].

"ஆ! மகனே, நின்கதி இப்படி யாயிற்றோ! ஐயோ! எப்படி வளர்த்தேனடா! எவ்வளவு படிக்க வைத்தேனடா! சிறை புகவோ சீருடனானாய்! அப்பா! அம்மட்டா? உன் ஆவி தேவலோகம் புகும் போலிருக்கிறதே."

"என் செல்வமே! உன் அப்பாவுக்கும் எனக்கும் ஒரு பெருஞ் செல்வமா யிருந்தனையே! உன்னை உலக மெல்லாம் புகழ்ந்ததே! என் கண்ணே! உன் அழகென்ன! அறிவென்ன! நீயா! கொலையா! ஆ! நடராஜா! உன்னை எப்படிப் பிரிவோம்!"

"அண்ணா! என் அருமை அண்ணா! உன்னைக் காணாது நான் எவ்வாறு உயிர் தரிப்பேன்! இன்னும் எத்தனை மணிநேரம் என்னுயிர் இவ்வுடலில் தங்கியிருக்கும்! உன்னாவியோடு என்னாவியும் பறவாதோ! பங்கஜவல்லி உன்னைப்பற்றி அறிந்தாளோ? ஆ! அவள் இதை யுணர்ந்தால் எவ்வாறு வருந்துவாள்! என்ன பாடுபடுவாள்! கருணாகரர் எங்கிருக்கிறாரோ? உம்மைப்பற்றிக் கேள்வியுற்றால் அவர் எவ்வளவு உள்ளம் நைந்து வாடுவார்! ஆஹா! அவர் இங்கிருந்தால்! எப்படியாவது உம்மைக் காப்பாற்றுவாரே. அவர் எங்கிருக்கிறார் என்றும் தெரியவில்லையே. இதுவும் நமது தீவினையா! கடவுளே! தேவரீர் கண்பார்த்தருள லாகாதா?"

பல வருஷங்களாகப் பிள்ளை யெனும் பெரும் பேறின்றி, பூசனை பல புரிந்து, தருமம் பல நிருவி, தவம் பல கிடந்து, நோன்பு பல நோற்று, அருமையாய்ப் பெற்று, தமதாவியே யென-ஏன்? அதிலும் மேன்மையான பொருளெனப் போற்றி வளர்த்துக் கல்வி யென்னும் அருமருந் தூட்டித் தமது இன்பப் பொக்கிஷமாகப் பாராட்டி வந்த அருமை மகன் கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறையிற் கிடப்பதற்காகத் தாய் தந்தையர் படும் துயரை எவரே முற்றும் விவரிக்கவல்லார்? உடலிரண்டே யெனினும் உயிரொன்றென வாழ்ந்த தமையன் தங்கையரில் தமையன்—அன்பும், அறிவும், நற்குணமும் ஒருங்கே திரண்டு ஓருருக் கொண்டது போன்ற அருமைத் தமையன்—கேவலமான கொலையாளனாகக் கருதப்பட்டுச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இன்னலுழப்பதுகேட்ட தங்கையின் மனத்தெழுந்ததுயர்க்கடலுக்கு யாரே கரையிட வல்லார்? தாய்தந்தையரும் தங்கையும் இவ்வாறு வருந்த, நடராஜன் சிறையிற் பட்ட பாட்டைக் கவனிப்போம்.

சோர்ந்து மார்பின்மீது மடிந்து விழுந்த முகத்துடனும், அயர்வு, கவலை, வருத்தம் ஆகியவற்றிற்கு இரையாய கண்களுடனும், குவித்த கைகளுடனும் உட்கார்ந்து, "உண்மை யறிந்திடும் உத்தமப் பொருளே! அன்பார்கலியே! ஏழைகட் கிரங்கும் எம்பெருமானே! பழியோரிடம் பாவமோரிடமாக முடிவதைக் கண்டு களிப்பது நுமது திருவிளையாடலின் இயற்கையோ! ஆ! நானா! அந்தச் சிறு குழந்தையை! என் கையால்! வாள் கொண்டு! குத்துவேனா! ஐயோ! என் கை வாளைப் பிடிக்குமோ? என் கண் இரத்தக் குழம்பைக் காணுமோ? என் மனம் இரும்பல்லவே! பாறையல்லவே! என் மனம் பதைக்கும் இத்தகைய அடாத செயலுக்கு நானே கருவியென உலகத்தார் இகழுதல் எனது பழவினைப் பயனோ? நான் உயிர் துறப்பது நிச்சயந்தானே. அக்கதியாகிலும் சீக்கிரம் எனக்கு வரலாகாதா! அப்பொழுதாயினும் நான் இந்த உண்மை யறியாத உலகத்தில் என் கவலையையும் அவமானத்தையும் விட்டு விட்டு நுமது திருவடி யருகடைந்து சத்திய சொரூபியாய நுமது திருச்சன்னிதானத்தில் முறையிட்டுச் சரியான தீர்மானம் பெறுவேன். அந்தோ! இவ்வுலகத்துக் கெவ்வளவு நன்மை செய்ய எண்ணினேன். எனது நோக்கங்களெல்லாம் என்னோடு மாண்டொழியுமே. பங்கஜவல்லி—எனதருங் காதற்கனி, எனதாவி யன்னாள்—எனைப் பிரிந்திட்டு எங்ஙனம் உயிர் வாழ்வாள்? கருணாகரனுக்குச் சிவகாமியை என் தந்தை மணஞ்செய்து கொடுப்பாரோ? ஆ! தங்காய்! எனதாருயிர்த் தங்காய்! உங்களெல்லோரையும் விட்டு நான் இன்னும் சில மணிகளுக்குள் பிரிவேன்," என்று எண்ணி ஏங்கினான். அவனது நிர்மலமான கண்களாகிய வானத்திற் படிந்த கவலையெனும் மாசும் வருத்தமெனுங் குளிர்காற்றுப் பட்டுக் கண்ணீர் எனும் மாரி பொழிந்தது.

/



கோபாலன்: கருணாகரா, எப்பொழுது வந்தாய்? நெடு நாளாக இந்தப் பூம்பட்டினத்திலேயே உன்னைக் காணோமே.

கருணாகரன்: இப்பொழுது தான் ஸ்டேஷனிலிருந்து வருகிறேன்.

கோ: என் வீட்டுக்கு வரலாகாதா?

கரு: ஐயா வீட்டிற்குப் போய்விட்டு வருகிறேன்.

கோ: அவர் இப்பொழுது கவலையி லாழ்ந்திருப்பார்.

கரு: என்ன! என்ன!

கோ: அவரது மகன்...

கரு: என்ன அவருக்கு?

கோ: அவன் ஒரு குழந்தையைக் கொலைசெய்து விட்டான். இப்பொழுது சிறையிலிருக்கிறான். நாளைக்குத் தூக்கிடப்படுவான் என்று சொல்கிறார்கள்.

கரு: உண்மையாகவா? சிதம்பர முதலியார் மகனா?

கோ: ஆமாம்.

கரு: நடராஜ முதலியாரா?

கோ: நடராஜன் தான்.

கரு: அவர் அப்படிப் பட்டவரல்லவே. நான் அவர் குணத்தை நன்றாக அறிவேனே. நானும் அவரும் ஒரே வீட்டில் ஒரே மாதிரியாகப் பழகினோமே.

கோ: பழகினால்? பார்வைக்கும் ஏறக்குறைய உன்னைப் போலவே இருக்கிறான். அதனால் அவன் குணங்களும் உன்னுடையவை போலவே இருக்குமா? அதற்காக ஏன் வருந்துகிறாய்? அடாது செய்தால் படாது படுகிறான். நீ என் வீட்டுக்கு வா.

கரு: இல்லை, நான் வேறோரிடத்திற்குப் போக வேண்டும். பிறகு வருகிறேன்.

இருவரும் பிரிந்தார்கள். கருணாகரன் அவ்வூர் ஓட்டலை நோக்கிப் புறப்பட்டான். அவனது மனத்தில் கவலை குடி புகுந்தது. "நடராஜர்! சிறந்த குணசீலர்! அவரா கொலை செய்திருப்பார்? ஏதோ தவறு நடந்திருக்கிறது. சரி, அதைப்பற்றி எல்லாம் இப்பொழுது ஆலோசிக்கவோ விசாரிக்கவோ அவகாசமில்லை. நாளைக்குத் தூக்கிடப் போகிறார்களாமே. அதற்குள் ஏதாவது செய்ய வேண்டும். எப்படியாவது அவரைத் தப்புவிக்க வேண்டும்," என்று யோசித்த வண்ணம் சேமந்தனி விலாசத்தை யடைந்தான். இருக்க இடம் பேசி, ஓரறையில் தனது சாமான்களை யெல்லாம் வைத்தான். அங்கிருந்த கடிகையாரமும் 12 மணி அடித்தது. கருணாகரனது மனத்துக் குணவு அதிகமாக இருந்ததால் அவன் வயிற்றுணவைக் கவனித்தானில்லை. இடையில் விடுபட்ட யோசனை தொடர்ந்தது.

"நடராஜரை எப்படியாவது விடுவித்துக் காப்பாற்றவேண்டும். சிறைக்காவலன் பித்தாண்டியை எனக்குத் தெரியும். அவன் உதவியைக் கொண்டு அவரைச் சிறையினின்று வெளிப்படுத்தலாம். ஆனால் மறுநாள் தூக்குத் தண்டனை யல்லவா? அவர் சிறையினின்றும் தப்பியோடி விட்டார் எனும் புகார் கிளம்பினால்? அது கூடாது. பித்தாண்டிக்குத் தண்டனை உடனே கிடைக்கும். கஷ்டங்கள் அதிகரிக்கும். பின்னென்ன செய்வது? ஆம், நடராஜரும் நானும் ஒரே மாதிரியாக இருப்பதாகக் கோபாலன் சொன்னான் அல்லவா? ஏன்? பலர் பல தடவைகளில் என்னை நடராஜர் என்றே எண்ணி இருக்கிறார்கள். எங்களிருவருக்கும் வயதிலும் மூன்று அல்லது நான்கு மாத வித்தியாசமே உளது. நடை, பேச்சு முதலியவற்றிலும் எங்களிருவருக்கும் சிறிது ஒற்றுமை இருக்கிறது. சரி, நான் அவருக்குப் பதிலாகச் சிறையிலிருந்து கொண்டு அவரை விடுவிப்பேன் ...ஆ! சிவகாமி! அவள் என்னாருயிர் ஆயிற்றே. நான் இங்குவந்ததன் முதற் காரணம் நான் அவள்மீது கொண்டிருந்த அன்பல்லவா? அவளைக் காணவேண்டும் என்னும் அவாவல்லவா? நடராஜருக்குப் பதிலாக நான் சிறையிற் சென்றால் அவருயிருக்குப் பதிலாக என்னுயிர் போகும். அந்தோ! நான் சிவகாமியை மணப்பது முடியாதே." இவ்வாறு சிந்தித்தான். முடிவிலொரு தீர்மானஞ் செய்தான்.

"என்ன பேதைமை! என்மதி இருந்தவாறென்னே! நான் இவ்வாறு என்னுயிரையும் என் நலத்தையுமே பாராட்டி மயக்கங் கொண்டேனே. இந்தச் சுயநலச் சிந்தனை என்னை நன்றி கொன்றவனாக வல்லவோ செய்தது? சீச்சீ! இந்தப் பாழெண்ணமே கூடாது. 'செய்ந்நன்றி கொன்றமகற்கு' உய்வுண்டோ? கிடையாது, கிடையாது. ஐயா அவர்கள் எனக்குச் செய்த நன்றி ஏட்டிலடங்குமோ? சொல்லி லடங்குமோ? அவரது மகனுக்கும் எனக்கும் ஏதாவது வித்தியாசங் காட்டினாரா? யாரோ திருவிழாச் சந்தடியில் அசாக்கிரதையால் விட்டுச் சென்ற ஒரு குழந்தையை எடுத்து வந்து எவ்வளவு அன்போடு வளர்த்தார். இவ்வளவு காலமாக நான் தின்றது அவர் உப்பல்லவோ? நான் அவரை மறப்பது நீதியோ? அவரது மகனார் ஒரே மகனார், அருமைச் செல்வர், சிறந்த குணங்கள் வாய்ந்தவர், அவருக்கு இன்பத்தை யூட்டுபவர், நியாயமென்பது மருந்துக்குங் கிடைக்காத இவ்வுலகத்தில் தவறான தீர்ப்பினால் சிறை புகுந்து, வருந்தி இறப்பதா? நான் உயிரோடிருக்கும் போதா? நான் அதைக் கேட்டு வாளாவிருப்பேனா? ஆஹா, அவர் இறந்தால் எத்தனைப் பெயருக்கு எவ்வளவு சங்கடங்கள் நேரிடும்? அவர்மீது பூரண காதல் கொண்டு அவரது இனிய மொழிகளையே தனது நல்லுணவாகவும் போஷாதரவாகவும் கொண்டுள்ள பங்கஜவல்லி, இன்னும் ஒரே மாதத்தில் அவரை மணக்கும் பாக்கியத்தை எதிர்பார்த்திருப்பவள், அவர் மாள்வதைக் கண்டு ஏங்குவதா? வேண்டியதில்லை. அவருக்காக நான் உயிர் துறப்பேன். செய்ந்நன்றி

மறவாதார் செல்லும் செழும்பதி புகுவேன். நான் இறப்பதால் அவ்வளவு கெடுதிகளில்லை. எனது தாயும் தெரியாது, தந்தையும் தெரியாது. சிவகாமிக்காகவே என் மனம் பின்னடைகிறது. ஆனால் அதற்கும் தக்க சமாதான மிருக்கிறது. எங்களிருவருக்கும் காதலிருந்தபோதிலும் ஐயாவுக்கு அதில் விருப்பமில்லை போலும். சரி, நான் மாள்வதே உத்தமம்....ஆமாம், ஒரு பெருங் கஷ்டம் எனதெண்ணங்களி னெதிரே நிற்கிறதே. அன்புருவாய நடராஜர், சுயநலங் கருதாச் சுகுண பூஷணர், இதற்கொப்பமாட்டாரே. என் செய்வேன். ஆம்! நல்லது, இதற்காகக் கவலைவேண்டுவதில்லை. நான் கொண்டுவந்த இலை! நாசியில் பட்டமாத்திரத்தில் மயக்க முண்டாக்கும் மூலிகை இருக்கிறது. தெய்வச் செயல் இருந்தவாறென்னே! நான் வேடிக்கை செய்யக் கொண்டுவந்த இலை ஆபத்தை நீக்க உதவும் அருமருந் தாயிற்றே. அத்தெய்வமே எனது காரியத்தை நிறைவேற்றட்டும்.''

சூரியாஸ்தமனத்திற்குள் பித்தாண்டியிடம் பேச வேண்டியவைகள் பேசியாயின. இரவு எட்டுமணியாயிற்று. பித்தாண்டி திறவுகோலுடன் பூம்பட்டினத்துச் சிறைக் கதவினருகில் நின்றிருந்தான். கருணாகரனும் கூலியாட்கள் இருவரும் அவனை நெருங்கினர். கருணாகரன் பித்தாண்டியின் கையில் ஒரு சிறிய பச்சிலையைக் கொடுத்து அவன் காதில் இரகசியமாகச் சில வார்த்தைகள் கூறினான். பித்தாண்டி கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று ஏக்கமெனும் பாசக் கயிற்றிற் சிக்கி வாடியிருந்த நடராஜனை அணுகினான். ஒரு நிமிஷத்திற்குள் நடராஜன் தன் கவலை யொழிந்து மயக்கத்தோடு சாய்ந்தான். உடனே வெளியிலிருந்த கருணாகரன் உள்ளே சென்றான். தனது சட்டைப் பையிலிருந்த க்ஷவரக் கத்தியை எடுத்து நடராஜன் தலையை மொட்டையடித்தான். தான் கொண்டுவந்த முகமதிய உடுப்பை அவனுக் குடுத்தினான். ஒரு சிகப்பு முகமதிய குல்லாயை அவன் தலையில் மாட்டினான். காத்துக் கொண்டிருந்த கூலியாட்களிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து; "ஜெயபுரி; கருணாகர விலாஸ்; சீக்கிரம்; ஜாக்கிரதை," என்று சிலவார்த்தைகளை மெல்லச் சொன்னான். சில நிமிஷங்களுக்குள் பிணம் போற் கிடந்த நடராஜன் உடலும் ஒருமோட்டார் வண்டியிலேற்றப்பட்டது. சொற்பநேரத்திற்குள் நடராஜனும் கூலியாட்களும் ஜெயபுரியில் கருணாகர விலாஸை அடைந்தனர். கூலியாட்களும் வேண்டிய ஜாக்கிரதை யோடிருந்தனர்.

பித்தாண்டி பெருந்தொகை பெற்றான். சிறைக்குள் கருணாகரன் நடராஜனது உடைகளை அணிந்து கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனது முகம் நீருக்கு அழகையும், மனிதர்க்கு நறுமணத்தையும், வண்டுக்குத் தேனையும் அளித்துக் களிக்கும் செந்தாமரையென அலர்ந்து நன்றி நிறைந்த குறிப்போடு திகழ்ந்தது.

பொழுது புலர்ந்தது. விலங்கு சப்தம் கேட்டது. இரண்டு சேவகர்கள் நடராஜன் வேஷத்திலிருந்த கருணாகரனை யணுகி அவனுடைய கைகளுக்கு விலங்கிட்டனர். அவனும், கவலையும் வருத்தமும் நிறைந்தவனைப் போல நடித்தான். வெளியிலிருந்த பித்தாண்டி வெதும்பினான். இரண்டு நிமிஷங்களுக்குள் கருணாகரன் இருபக்கங்களிலும் சேவகர்கள் சூழ எமாபுரி நோக்கிப் புறப்பட்டான். வீதிகளில் ஜனங்கள் அவரவர் வாயிற் புறத்தில் கும்பல் கும்பலாக நின்றனர். "ஐயோ பாவம்!" என்றனர் சிலர். "உன் தலை விதி இப்படி இருந்ததா!" என்றனர் சிலர். "குழந்தையைக் கொலை செய்தது வீண் போகுமா?" என்றனர் சிலர். "நடராஜன் அப்படிப்பட்டவன் அல்லவே. மதம் வேண்டா; ஜாதிவேண்டா என்று சில் சமயங்களில் பிதற்றிக் கொண்டிருப்பான். பொதுவில் நல்லவனாயிற்றே. சிறு பிள்ளைகளிடம் அன்பாகப் பேசிக் கொண்டிருப்பானே. என்னவோ, பாவம், வினை யாரை விட்டது?" என்று சிலர் கும்பலாகப் பேசிக் கொண்டனர்.

இவற்றிற்கு நடுவில் ஒரு வீட்டிலிருந்து தடுப்பவர்களையும் பிடிப்பவர்களையும் அசட்டை செய்து கொண்டு ஒருவன் ஓடிவந்து எதிரில் நின்று கொண்டான். எவருக்கும் அஞ்சாமல் பேச ஆரம்பித்தான். "வேண்டும், வேண்டும், ஒழிந்துபோ. நான்தான் உனக்கிந்தவழி வைத்தேன். வெகு நாளாக உன்மீது கரம் வைத்திருந்தேன். தீர்த்து விட்டேன்," என்று பேசினான். இதைக்கேட்ட சேவகர்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். உடனே அவன் "ஐயா, ஐயா, நான் செய்யவில்லை, இப்பொழுது செய்யவில்லை. இப்பொழுது செய்யவே இல்லை. எனக்காகச் செய்யவில்லை; ஊருக்காகவே. என்னைப் பிடித்துக் கொள்வீர்களா?" என்றான். சேவகர் "இல்லை; நீ கொலை செய்யவில்லையே. உனக்கென்ன பயம்? நீ ஏன் இப்படி உளருகிறாய்?" என்றனர். அப் பித்தன் "நான் எனக்காக ஒன்றும் செய்யவில்லை," என்றான். சேவகர் உடனே அவனைப் பற்றிப் பக்கத்திலிருந்தவர்களை விசாரித்தனர். ஒருவன் "அந்தக் கொலை நடந்த நாள் முதலாக இந்தக் கோதண்டன் வீட்டுக்கு வெளியில் வருவதில்லை" என்றான். சிலர் அவன் சொன்னதை ஆதரித்தனர். கோதண்டராமன் பைத்தியக்காரன் அல்ல என நிரூபிக்கப்பட்டது. அவன் முகத்திலோ, பயம் குடிகொண்டிருந்தது. கொலை செய்ததால் பிரமஹத்தி பிடித்தவனது குறிகள் அவனிடம் காணப்பட்டன. அவன் மீது சந்தேகங்கொண்ட சேவகர் அவனைக் கைப்பிடியாகக் கொண்டு சென்றனர்.

இவற்றை யெல்லாம் பார்த்திருந்த பித்தாண்டி சிதம்பர முதலியாரிடம் ஓடி, அவரிடம் இவைகளைப் பற்றிக் கூறினான். உடனே அவர் நியாயஸ்தலத்துக்கு ஓடிவந்து சரியாக விசாரணை செய்யும்படி நியாயாதிபதியை வேண்டினார். ஜனங்களிற் பலர் அவருக்கு ஆதரவாக நின்றனர். விசாரணையின் முடிவில், பித்துக் கொண்டவன் போல் பிதற்றிய கோதண்டராமன் என்பவனே ஒரு குழந்தையைக் கொன்று இரவில் நடராஜன் வரும் வழியில் வைத்ததாகவும் அதை யறியாத ஊரார் நடராஜன் மீது பழி சுமத்தியதாகவும் தெரிந்தது. அதன் பயனாக நடராஜன் விடுதலை யடைந்தான். அவனுடைய தண்டனையைக் கோதண்டராமன் அடைந்தான். இவ்வளவையும் கண்ட கருணாகரனது உள்ளம் தெய்வத் துதியெனும் திவ்விய தீர்த்தத்திற் றிளைத்துக் களித்தது.



சிதம்பர முதலியார் நடராஜனை (கருணாகரனை) அழைத்துக் கொண்டு வீடு சென்றார். அங்கே அவரும் அவர் மனைவியும் அவனைக் கட்டியணைத்தனர். அழுகண்ணீர் சிந்திய அவர்களது கண்கள் ஆனந்த பாஷ்பம் பொழிந்தன. சிவகாமி தனது அண்ணனை (காதலனை) யணுகி அவனிடம் அன்பு மொழிகள் பேசினாள். அவளது கொவ்வைச் செவ்வாய் அவளையும் அறியாது அவனது கன்னத்தில் ஓரன்பு முத்த மிட்டது. அவனது இதழ்கள் திறந்தன. முத்தனைய பற்கள் எட்டிப் பார்த்தன. மெல்ல நகைத்தான். ஒருநொடியில் தனது உடைகளைக் களைந்தெறிந்தான். நடராஜன் கருணாகரனானான். சிதம்பர முதலியாரும் அவர் மனைவியும் முதலில் திகைத்தனர். சற்று நேரத்திற்குப் பின் அவனை அன்போடு தடவினர். சிவகாமி மட்டும் புன்னகை ததும்பத் தலை குனிந்து, நாணிக் கோணி நின்றாள். எல்லா இரகசியங்களும் சொற்ப நேரத்தில் வெளியாயின. கருணாகர விலாசத்துக்கு ஒரு அவசரத் தந்தி காற்றினுங் கடுகவே சென்றது.

அன்றைய ஞாயிறு மறைவதற்குள் நடராஜன் மலர்ந்த முகத்துடன் ஒரு மோட்டார் வண்டியில் தனது பிறப்பகம் வந்து சேர்ந்தான். தனது தாய் தந்தையரது முன்னிலையில் விழுந்து தெண்டனிட்டான். அவர்களும் அவனை வாரி எடுத்து முத்தமிட்டனர். பக்கத்தில் கருணாகரன் நிற்பதைக் கண்டான். அவன் "அன்பரே, நீர் நல்ல சுயமரியாதைத் தொண்டர்!" என்றான்.

நட:—என்ன கருணாகரா?

கரு:—உமது சுயமரியாதைத் தொண்டு தான் உமது உயிரை மாய்க்க விருந்தது.

நட:—சந்தோஷம். அந்த வழியில்—தேசத் தொண்டாற்றும் வழியில்—என் உயிர் செல்லுமாயின் அதுவே எனது பெரும் பாக்கியமாகும். இருக்கட்டும்; நீ ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

கரு:—கோதண்டராமனை உமக்குத் தெரியாதா? உம்மீது பழி வருவதற்கு அவனே காரணம். அந்த வைதிகக் குடுக்கை, மூட நம்பிக்கை நிறைந்த வீண் ஆசாரக்காரன் உமது சுயமரியாதைக் கொள்கைகளை வெறுத்து வந்தானல்லவா? அது பரவாதிருக்கும் வண்ணம் உம்மைத் தொலைத்துவிடத் தீர்மானங் கொண்டான். உம்மை நேரிற் கொல்லப் பயந்து இவ்வாறு உம்மீது பழி சுமத்திச் சில நாட்கள் இழிவு படுத்தினான். ஆனால் கடவுளொருவரில்லையா? உமது குணமேன்மை அவருக்குத் தெரியாதா? அவரே உம்மைக் காப்பாற்றினார்.

நட:—உண்மை என்றும் எங்கும் நிலை பெறுவது திண்ணம்.

பின்னர் சிதம்பர முதலியார் கருணாகரனது பெருநன்றியைப் பற்றித் தம் மகனுக் கறிவித்தார். நடராஜனும் "உடுக்கை இழந்தவன் கை போன்று இடுக்கண் களைந்த" தனது ஆருயிர் நண்பனுக்குப் பார்வையாலும், வார்த்தைகளாலும், செய்கைகளாலும் நன்றி செலுத்தினான். தனது தங்கை சிவகாமியைக் கருணாகரனுக்கு மணஞ் செய்விக்கத் தான் கொண்டிருந்த எண்ணத்தைத் தன் தந்தையிடங் கூறினான். கருணாகரனிடத்து நிறைந்த அன்பு கொண்டிருப்பினும் அவனுடைய ஜாதி வம்சம் முதலிய தெரியாமையால் தம் மகளை அவனுக்கு மணஞ்செய்விக்க மயங்கிய முதலியாரும் அவனது அருங்குணத்தைக் கண்டு அவனையே தமது மருமகனாகக் கொள்ள இசைந்தார். அதைச் சிவகாமியிடம் தெரிவித்தார். அவளும் புன்னகையால் தன் எண்ணத்தைத் தெரிவித்தாள். பங்கஜவல்லி மீது நடராஜன் கொண்டிருந்த காதலும் பெருகிப் பொங்கிற்று. சிதம்பர முதலியாரும் அவரது பத்தினியாரும் அரிய மருமகனையும் மருமகளையும் பெறுதற்குகந்த நாளும் நியமிக்கப் பெற்றது. மணமக்களது ஆனந்தத்தை முழுதும் விவரிக்க எளியேன் வல்லேன் அல்லேன்.


ரூ. 2-15-0 பௌண்டன் பேனா ரூ. 2-15-0



நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர் W.B. பௌண்டன் பேனா தங்க ப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட்வாட்சு இனாமாய் அனுப்பப்படும். W. B. பவுண்டன் பேனாவும் கடியாரமும் விலை ரூ. 2—15—0.

THE KRISHNA AGENCY,
Box 119, G. P. O. Madras.

(13) C

# நாவல் பகுதி

## சிந்தாமணி யெழுதிய சித்திரம்

(கலைமகள்)

சிந்தாமணிக்குப் பதினாறு வயதாயிற்று. இன்னும் கலியாணம் ஆகவில்லை. இவ்வளவு சின்னஞ்சிறு கன்னியான அவளுக்குச் சமானமாய்ச் சித்திரம் எழுத வல்லவர் இத்தென்னிந்தியாவில் இல்லை என்று திட்டமாய்ச் சொல்லலாம். அவள் எழுதும் அற்புத ஓவியங்களைக் கண்ணுற்றவரிற் பெரும்பாலர், அவள் சித்திரங்கள் வர்ணக் கோலினால் தீட்டப் பட்டவை அல்ல, தெய்வீக அருள் பெற்ற மாத்திரைக் கோலால் வரையப்பட்டவையே என்று ஐயுற்றனர். மற்றும் சிலர் அவள் வரைந்த படங்களிற் காணப்படும் இயற்கைத் தோற்றங்களாகிய சூரியோதயம், மாலைப்பொழுது, மலை, வனம் முதலிய காக்ஷிகளின் அழகும், நந்தவனம், நீரோடை, செடி கொடிகளின் உண்மைத் தோற்றமும் அவள் மெல்லிய விரல்களின் மாய வேலைப்பாடு என்பதை அவள் படங்கள் வரையுங்கால் நேரிற்கண்டு தெளிந்த பின்னரே நம்பத் தலைப்பட்டனர். அவ்விளஞ்சிறுமி எழுதியவற்றில், இயற்கைத் தோற்றங்களெல்லாம், அசைவு மாறுதல் இவ்விரண்டைத் தவிர, உண்மையிற் காண்பனவற்றைப் போ லிருந்தன. அவள் எழுதிய மனிதர், மிருகங்களின் உருவங்களும் இமைப்பின்மை ஒன்றினால் தான் உயிரற்ற சித்திரங்கள் என்று கொள்ள இடந்தந்தன.

பெண்ணுருவெடுத்த ராஜா ரவிவர்மா வென விளங்கிய சிந்தாமணிக்கு இச்சித்திரம் எழுதுந் தொழிலால் பொருளீட்டும் எண்ணமிருந்ததாகத் தெரியவில்லை. ஒரு மாதிற்கு எத்தகைய விசேஷ சாமர்த்திய மிருந்தாலும், அவள் அத்தொழிலை மேற்கொண்டு, தன்னந்தனியே இருந்து, புகழையோ பொருளையோ சம்பாதித்துத் தன்னிச்சையாக இருப்பதை நம் நாட்டில் எங்கும் காண முடியாதல்லவா? ஆகையால், சிந்தாமணிக்கு இது வரை விவாகம் ஆகவில்லையே தவிர, விவாக நிச்சயம் செய்தா யிருந்தது. அவளுக்கு விரைவில் மணமுடித்துக் கண்குளிரப் பார்த்து விட்டு இறக்க வேண்டு மென்று சிந்தாமணியின் வயது சென்ற பாட்டனார் கோரிக்கொண் டிருந்தார். அவளுடைய பாட்டனார் ஒருவரைத் தவிரச் சிந்தாமணிக்கு வேறு உறவினரோ காப்பாளரோ கிடையாது. மிகவும் சிறிய வயதிலேயே சிந்தாமணி பெற்றோரை யிழந்து விட்டாள். அவளுக்குச் சிறு பருவத்திலிருந்தே சித்திரம் வரைவதில் விருப்பும் திறனும் இருந்ததை அவள் பாட்டனார் கண்ணுற்று, அவளைச் சென்னையிலுள்ள சித்திரக் கலாசாலையிற் சேர்த்து நான்கு வருஷங்கள் சித்திரம் எழுதப் பயிற்றுவித்தார். மற்றைய மாணவ மாணவிகள் எட்டு வருஷத்தில் கற்கக் கூடியதை நான்கு வருஷங்களிற் கற்ற சிந்தாமணி, தனது பதினான்காம் பிராயத்தில் கலாசாலையை விட்டு நீங்கித் தன் பாட்டனார் வசிக்கும் ஊராகிய தஞ்சை நகரில் தன் பாட்டனாருடன் வசித்துவந்தாள். அவள் அதுவரை எழுதிய படங்களிற் பல, மாத வாரப் பத்திரிகைகளின் முகப்புப் படங்களாகவும், நண்பர்கள் வீட்டுச் சுவர்களுக்கு அலங்காரமாயும் விளங்கின. அவளுடைய சித்திரங்களை நல்ல விலைக்குப் பலர் வாங்கத் தயாராயிருந்த போதிலும், அவள் பாட்டனார் நாணயமாய் வசிப்பதற்குப் போதுமான உபகாரச் சம்பளம் பெற்று வந்ததன்றிச் சிறிது சொத்தும் உடையவரா யிருந்ததால், அவர் சிந்தாமணியின் சித்திரங்களை விலைக்குக் கொடுக்கவோ, அவள் பொருள் பெற்றுப் படம் எழுதவோ அநுமதிக்கவில்லை.

சிந்தாமணிக்குத் தான் சித்திர மெழுதிப் பொருளீட்டவேண்டுமென்ற அவசிய மில்லாவிடினும், நல்ல போட்டி பரிசுகளில் பரிசுகளும், கண்காக்ஷி சாலைகளில் பதக்கங்கள் நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெறவேண்டு மென்று மிகுந்த ஆவலிருந்தது. அத்தகைய பொதுப் பரிசளிப்புக்களுக்குப் படம் எழுதியனுப்ப அவள் பாட்டனார் தடை செய்யாது மதிப்பாரென் றெண்ணினள். கடைசியில் அவளுக்குப் பதினாறு வயதாகும்போது அவள் வெகுநாளாய் எதிர்பார்த்திருந்த தருணம் வந்தது. அவ்வருஷம் அகில இந்திய சித்திர விருத்தி சங்கத்தினர் மிகப் பெரிய சித்திரக் கண்காக்ஷி விழா ஒன்று ஏற்படுத்தப் போவதாயும், அதற்குச் சித்திரம் வல்லவர் எவரும் தாம் எழுதிய படங்களை அனுப்பலா மென்றும், அவற்றில் மிக்க கீர்த்தியான ஓவியங்களைப் பிரபல சித்திர நிபுணர்கள் பதின்மரைக்கொண்டு பரீக்ஷிக்கச் செய்து அப்பத்துப் பெயராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்தரமான மூன்று படங்களில் ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் ரூபாய் பரிசளிக்கப்படு மென்றும், அதற்கடுத்ததாய் நன்கு வரையப் பெற்ற பத்துப் படங்களுக்கு நூறு ரூபாய்கள் பரிசளிக்கப்படும் என்றும், பரிசு பெற்ற சித்திரங்கள் சொந்தக்காரரின் அனுமதியின்பேரில் நல்ல விலை கொடுப்பவருக்கு விற்பனை செய்யப்பட்டுப் பணம் அனுப்பப் படு



மென்றும் விளம்பரஞ் செய்து, இந்த சமாஜத்தின் நோக்கம், சித்திர சாஸ்திரத்தில் ஜனங்களுக்கு அவா வுண்டாக்கவும், சித்திரந் தீட்டுபவர்களுக்கு ஊக்கமளிக்கவும் வேண்டு மென்பதே ஆகையால், இந்தக் கண் காக்ஷிக்கு ஆண், பெண் இருபாலாரும் அனுப்பலா மென்று இந்தியா முழுதும் அறிக்கை செய்தனர். அவ்விளம்பரத்தைக் கண்டு, தமது திறமையை உலகோர்க்கு வெளியிட நற்சமயம் வாய்த்ததென்று உற்சாகத்துடன் வர்ணக் கோலைக் கையிலெடுத்தனர் பலர். அவர்களில், வெவ்வேறு ஆவல்களுடன் ஊணுறக்கந் தவிர்த்துத் தம்மனதிற்கும் கண்களுக்கும் தோற்றிய அழகிய கற்பனைகளையும் காக்ஷிகளையும் கையால் எழுதப் புகுந்தனர் தஞ்சையிலிருந்த இரு யௌவன ஓவியர். அவ்விருவரில், பொருளைக் கருதாது, புகழை விரும்பிச் சனங்களைத் தன் வித்தையால் வியப்படையச் செய்யவேண்டு மென்ற ஆவலுடன் எழுதப் புகுந்தவள் சிந்தாமணி. அவளைக் கலியாணம் செய்வதாய் நிச்சயிக்கப்பட்ட அவள் மணமகனான சித்திரவர்மனோ, பொருள், புகழ் ஆகிய இருவகை நலன்களையும் நாடி எழுதத் தொடங்கினான்.

சித்திரவர்மனென்னும் அவ்வாலிபன், சிந்தாமணி சித்திரம் பயின்ற கலாசாலையில் பல வருஷங்கள் சித்திரம் வரையப் பயின்று, சென்ற வருஷந்தான் தஞ்சைக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கும் சிந்தாமணிக்கும் கலாசாலையிற் பழகிய நட்பு நாளடைவில் அன்பாக மாறத் தனது பாட்டனார் அனுமதியின்மேல் அவள் அவனுக்கு மாலையிடுவதென்று வரும் தை மாதத்தில் நாட்குறிக்கப்பட் டிருந்தது. சித்திரவர்மன், சித்திர வித்தையன்றி, மற்ற உயர்தரப்பரீக்ஷைகளில்தேறியவனல்லன். பொதுஅறிவு பெறப் போதுமான கல்வி மட்டும் கற்றிருந்தபடியாலும், செல்வவந்தனல்ல வென்பதாலும், அவன் தன் எழுதுங் கலையையே தொழிலாகக் கொண்டு ஜீவனோபாயத்திற்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்கக்கூடும் என்ற நிச்சயம் ஏற்பட்ட பிறகே மணஞ் செய்துகொள்ள வேண்டுமென் றிருந்தான். மணமாலை சூடு முன் வெற்றிமாலை சூட விரும்பிய சிந்தாமணி 'இக்கண் காட்சிக்கு நான் வரைந்தனுப்பும் படத்திற்கு என்ன மதிப்புக் கிடைக்கிறதென்று அறிந்த பிறகு தான் மணம் புரிவே' னென்று ஆனி மாதத்திலேயே அவள் விவாகத்தை நடத்திவிட விரும்பிய தன் பாட்டனாரிடம் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டாள். அவள் செய்த தீர்மானம் சித்திரவர்மனின் உள்ளக் கருத்திற் கிசைந்ததாகவே யிருந்தது.

சித்திர வர்மன் தான் பயின்ற வித்தையிற் றேர்ந்த வாலிபன் என்று அவன் முகப் பொலிவினாலேயே கண்டு கொள்ளலாம். அவன் எழுதும் சித்திரங்கள் நூறு படங்கள் இடையிலிருந்தாலும் ஜனங்கள் கண்களையும், கருத்தையும் கவரக்கூடிய கம்பீரமான அழகு வாய்ந்தவை. எக்காலத்திலும் ஒளி குறையாமல் பிரகாசமாயிருக்கத் தக்க வர்ணங்களை நூதன முறையில் கூட்டக் கற்றிருந்தான். ஆனால் அவனுடைய சாமர்த்தியத்திற்கு மிஞ்சி யிருந்தது செருக்கு. பரந்த இவ்வுலகிலுள்ள பிரபல ஓவியர்களில் ஒன்றிருவரைத் தவிர மற்றவர் தனக்குஎவ்வாற்றாலும் தாழ்ந்தவரே என்னும் உயரிய தற்புகழ்ச்சியான எண்ணமுடையவன். "மற்றப் பெயர் பெற்ற சித்திரக்காரர்களைப் போல் உன் பெயர் வெளி வராததேன்?" என்று எவரேனும் கேட்டால், "அறிவிலிகளுக்கே ஆதரவு செய்யும் அதிருஷ்ட தேவிக்கு இன்னும் என்பாற் கருணை வரவில்லை," என்று கூறுவான். எவரும் தனக்கு நிகரில்லை என்று தருக்கிய அவ்விளைஞன் தன் காதலி சிந்தாமணியின் கைத்திற முழுமையும் அறிந்திருந்தால், அவள் ஒரு நாள் தன்னை வெல்லக் கூடிய அரிய படங்களை எழுதுவாளென்ற எண்ணம் அவன் மனதிற் பட்டிருந்தால், அவளை மணம் புரிந்து கொள்ளச் சம்மதித்திரான். சிந்தாமணி சிப்பியின் வயிற்றுள்ளேயே இருக்கும் நன்முத்தைப்போல் தன் சக்தியைத் தானே உணராமல், அடக்கம், பணிவு முதலிய குணங்கள் மிகுந்து சாதாரண ஸ்திரீயைப் போன்றே காணப்பட்ட படியால், சித்திரவர்மன் அவள் விரலில் ஒளிந்திருந்த அற்புதச்சித்திரங்கள் வரையும் அரிய திறமையையும் அவள் பெறப் போகும் புகழையும் ஒரு சிறிதும் அறியவில்லை. சிந்தாமணியின் சிறந்த குணத்தாலும் இனிய முகத்தாலும் மனம் கவரப்பட்டு அவளை நேசித்ததுடன், அவளுடைய சித்திரப்பழக்கம் பிற்காலத்தில் உதவியாக இருக்குமென்ற எண்ணத்தாலும், அவள் பாட்டனாருடைய சொத்திற்கு அவளே சொந்தக்காரியாதலால் அவளை மணம்புரிவது தன் தொழிலுக்கு மிக்க உதவியாகு மென்ற நோக்கத்தாலும் அவளை மணம் செய்துகொள்ள விரும்பினான். சிந்தாமணியின் சித்திரங்கள் கண்ணுக்கினியவையா யிருப்பதை அவன் கண்டிருந்தாலும் ஒரு பெண்பாலின் சாமர்த்தியம் ஒரு நாளும் ஆடவருடையதற்கு மேற்படக் கூடியதல்ல வென்ற துணிபுட னிருந்ததால் அவளே தனக்குப் போட்டியாய் நின்று பரிசுகள் பெற்றும் தன்னையே வென்றுவிடக் கூடியவள் என்று கனவிலும் கருதவில்லை. சித்திரக் கண்காக்ஷியில் தனக்கு முதற் பரிசு கிடைப்பது திண்ண மென்று நினைத்து எழுதப் புகுந்த சித்திரவர்மன், தன் காதலியை அடுத்த பத்துப் பரிசுகளில் ஒன்றைப் பெறக் கூடிய ஒரு ஓவியம் வரைந்தனுப்ப வேண்டினான். சிந்தாமணி கூறிய பதில் அவனைத் திடுக்கிடச் செய்தது.

காதலன் வேண்டுகோளைப் புன்னகையுடன் செவியுற்ற சிந்தாமணி, "அன்பரே! நானும் முதற்பரிசுக்குத்தான் படம் வரைய உத்தேசித்திருக்கிறேன். நம்மிருவருக்கும் முதற் பரிசு கிடைத்தால் அது நமது திருமணத்திற்கு ஒரு சுபமான அறிகுறியல்லவா? நான் பாட்டனாருடன் பேசித் தீர்மானித்து விட்டேன்',' என்றாள்.

"நீ பரிசுகளுள் எதைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் எனக்கு உன் மீதுள்ள நன் மதிப்பும் நேசமும் ஒரே தன்மையதே. இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள நூற்றுக் கணக்கானவர் வரையும் படம்

களில் மூன்றைத் தேர்ந்து பரிசு கொடுக்கப் போகிறார்கள். ஆகையால் முதற் பரிசை எதிர் பார்த்து ஏமாறிப் போவதைவிட நீ அடுத்த பரிசைப் பெற முயற்சிப்பது மேன்மை,'' என்று புத்திமதி கூறினான் சித்திரவர்மன்.

அவள் "என் கையில் வந்ததை வரைந்தனுப்பப் போகிறேன். எந்தப் பரிசு வேண்டுமாயினும் கொடுக்கட்டும். படங்களின் விதி பரிசோதகர்கள் கையிலல்லவோ இருக்கிறது! நீங்கள் என்ன எழுதப் போகிறீர்கள்?'' எனப் பதிலுரைத்தாள்.

சித்திரவர்மன் மெல்லென நகைத்துப் "பிறருடைய இரகசியங்களை ஆவலுடன் அறியத் தேடுவது பெண்ணினத்தினருக்குப் பிறவிக்குணம். நீயும் அவ்வினத்தினள் தானே! சிந்தாமணி! நான் எழுதப்போகும் விஷயம் இரகசியமானது. என் படத்தைப் பார்க்க வேண்டுவோர் கண் காட்சி சாலையிற்றான் பார்க்கலாம். என்னைத் தவிர அதனை முதன் முதல் பார்ப்பவர்கள் பரிசோதகர்கள்தான்,'' என்றான். "எனக்குக் கூடக்காட்டமாட்டீர்களா?'' என்று வியப்புடன் வினவினாள் சிந்தாமணி.

"அதென்ன அவ்வளவு விசேஷமான சித்திரம்? ஏதாவது சிதம்பர ரகசியமா?'' என்று கேட்டுக்கொண்டே சிந்தாமணியின் பாட்டனார் உள்ளே வந்தார். அவர் கேட்ட கேள்வியால் முகம் சிணுங்கிய சித்திரவர்மன். "ஆம்; வெகு விசேஷமானதாகவே யிருக்கும் என்பதில் ஐயமில்லை. கண்கள் பெற்ற பேறிதைக்காணக் கிடைத்ததே என்று காசினியில் வதிவோர் வியக்கக்கூடிய நூதனக் காட்சியாகத்தானிருக்கும்,'' என்று பெருமிதத்துடன் புகன்றான்.

"அப்படியானால் நான் எழுதுவதையும் உங்களுக்குக் காட்ட மனமிசையேன். காக்ஷி மண்டபத்தில் தான் நீங்கள் அதைப் பார்க்கலாகும்'' என்று சித்திர வர்மனை நோக்கிக் கூறிய சிந்தாமணி தன் பாட்டனாரிடம் "தாதா! நீங்கள் மாத்திரம் பார்க்கலாம்- எனதுள்ளத்தைத் திறந்து பார்க்கவும் உங்களுக்கு அநுமதி உண்டு,'' என்றாள்.

"எனக்கு அத்தகைய அழைப்புச் சீட்டு இல்லையா?'' என்றான் சித்திரவர்மன்.

'மனத்திடையே வசிப்பவருக்கு அழைப்பு எதற்கு?'' என்று சிறு நகை செய்து கூறினாள் சிந்தாமணி.

மாலைப்பொழுதாகிவிட்டபடியால், தன் வீடு செல்ல எழுந்தான் சித்திரவர்மன். "சரி, சிந்தாமணி! நான் போய் வருகிறேன். இன்னும் ஒரு மாதகாலம் நான் வழக்கம் போல் இங்கு அடிக்கடி வரமுடியாதென்று நினைக்கிறேன். நான் எழுதத் தீர்மானித்த படத்தை ஒரு வாறாக எழுதி முடித்த பிறகுதான் வேறு எதுவும் செய்வேன். கடமைக்குப் பிற்பட்டது தானே இன்பம்!'' என்றான்.

"ஆம்! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நீங்கள் எழுதி முடிப்பதற்குள் நானும் எழுதி விட்டேனாகில் இரண்டையும் ஒரே சமயத்தில் அனுப்பி விடலாம். கடவுள் கிருபையால் உங்களுக்கு வெற்றியுண்டாக வேண்டும். நானும் உமது திறமைக்கு ஏற்ற மனைவி,யென்று எல்லா விதத்திலும் பெயரெடுக்க வேண்டும்!''என்று உள்ளக் கிளர்ச்சியுடன் உரைத்தாள் அவ்விள மங்கை.

"சிந்தாமணி! நீ சித்திரம் தேர்ந்தவளாயிருந்தாற்றான் எனக்கேற்ற மனைவியாவாய் என்பது,எனக்குச் சிறிதுமில்லை. இவ்வழகிய கரங்களுக்கு வர்ணக் கோலையே பிடிக்கத் தெரியாவிடினும் நான் உன்னை நேசிப்பதிற் குறையமாட்டேன்'' என்று அவள் கரங்களைப் பற்றினான் அவள் மணவாளன்.

சிந்தாமணி மேஜையின் மீது வைத்திருந்த ஒரு சிறு பளிங்குப் பதுமையைச் சுட்டிக் காட்டினாள். "அதோ நிற்கும் பதுமையின் கைகள் எவ்வளவு வெண்மையாய் உருண்டு நீண்டு அழகாயிருக்கின்றன! அதனாலென்ன பயன்? பிறர் கண்டு உவக்கக் கூடிய திறமையில்லாத கைகள் அப்பாவையின் பளிங்குக் கரங்களுக்குச் சமானமே! ஒப்புயர் வற்ற ஓவியராகிய உம்மாற் பிடிக்கப்படும் இக்கரங்கள் வர்ணங் குழைக்கவாவது ஏற்றிருந்தா லல்லவோ உங்கள் கைகளைப் பற்றுவதற்கு ஏற்றவையாகும்?' என்று அவள் பணிவுடனும் பரிவுடனும் பகர்ந்த மொழிகளாற் பரவசனாகிச் சித்திரவர்மன் அவளிடமும் அவள் பாட்டனாரிடமும் விடை பெற்றுச் சென்றான்.

அவன் சென்ற பிறகு தன் பெயர்த்தியுடன் பலவாறு சம்பாஷித்துக்கொண்டு வருகையில், சிந்தாமணியின் பாட்டனார் "சித்திரவர்மன் இந்த முதற் பரிசு தனக்குக் கிடைக்க வேண்டுமென்ற பேரவாக் கொண்டவனாய்க் காணப்படுகிறான். நல்லதிருஷ்ட வசத்தால் உனக்குக் கிடைத்து அவனுக்குக் கிடைக்கத் தவறினால் உன்மீது பொறாமையும் பகையும் கொள்வானென்று தோன்றுகிறது'' என்று கூறினார்.

சிந்தாமணி நகைத்தாள்.

"அன்புள்ள தாதா, நானோ அவருக்கு இணையாகப் படம் எழுதும் திறமை வாய்ந்தவள்? அவருடன் விளையாட்டாகச் சொன்னதை நம்பி விட்டீர்கள் போலும். நூறு ரூபாய்ப் பரிசில்களில் ஒன்று கிடைத்தாலே அதிகம். அப்படி நான் புகழ் பெற்றாலும் பொறாமைப் படுவாரோ அவர்! அன்னியருக்குள் பொறாமை யிருக்குமே தவிர, மனமொத்த எங்களிருவருள்ளத்தில் எத்தகைய இழிய எண்ணங்களும் புகா,'' என்றாள் சிந்தாமணி.

"கீர்த்திக்குள்ள மகிமையை நீ இன்னும் அறியவில்லை. ஒரு மனிதனுக்குப் புகழ் பெற நாட்டமிருந்தால் அவனது அன்பு, காதல், நன்றி இவ்வுணர்ச்சிகளெல்லாம் பெருங் காற்றிற்பட்ட சிறு துரும்புகள்போற் பறந்துபோய் விடும். கொடிய விலங்குகளைவிடச் சுயநலப் பிரியமுள்ள மனிதனை அஞ்ச வேண்டும். நீ படம் எழுதிப் பத்திரமாய் அதை அனுப்பும் வரையில் எனக்குக் கவலைதான்.' என்றார் வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்த பாட்டனார்.

(தொடரும்)



# விடுகதைக் கொத்து

(முன் மாதத் தொடர்ச்சி)

[திரு. நாங்குனேரி சு. அருணசலம் பிள்ளையவர்கள்]

16. வேலின் தலை போல்வான்
விளங்கு கைப் பிடியான்
சூடு தடுப்பான்
சுடுகஞ்சி குளிப்பான்—யார்?

17. காலுடையார்
கடிய செய்தி அறிவிப்பார்
கம்பியால் இணையட்டார்
கரியின் ஓர் பேராவார்—யார்?

18. வால்போல் நீண்டதை
வழுவழுப்பானதை
துண்டம் துண்டமாக்கித்
தூக்கித் தின்னக்கண்டேன்—யாது?

19. இருந்த விடத்திருப்பார் இருவர்
இலேசு இலேசாய் உண்டு உதிர்ப்பர்
எடுப்பார் கைப்பிள்ளையாய் எங்கும் செல்வர்
இரு ஆப்புடையார்—யார்?

20. வெள்ளையன்
யாவரும் விரும்புவன்
தன் இனம் சேர்ந்தால்
தரணியோருண்ண நான்கு பொருள்தரு
[வான்—யார்?

21. முன் ஒரு எழுத்தே முழுப்பெயர்
உணர்த்தக் கண்டும்
பின்னு மூன்றெழுத்துச் சேரப்
பேசுவார் பூதலத்தோர்
சொன்ன அப்பதத்தின் கடை இரு
எழுத்தோ கழியெனக் காண்பீர்
நன்னய மாதே நீவிர் நவிலுவீர்
பொருளைத் தானே.

22. கொடியி லிருப்பானும்
குலை குலையாய்த் தொங்குவானும்
உலைவாய் வெந்தானும்
ஒன்றாகி நைவார்காண்—யாது?

23. அனல் மூட்டோர் பொருள் பேரோடு
அடவி வாழ் ஆண்மான் பெயரை'க்'
என்ற எழுத்து இடை நின்று இணைக்குமாகில்
இத்தலத்தோர் பாலுடைச் செடியெனப்
[பகரலாமே—யாது?

24. உலகுணர்த்தும் ஓரெழுத்தும், ஓரெழுத்து
[உடல் உறுப்பும்
ஒன்றாய்ச் சேர்த்துக் காண்பீரேல்
கூடல் ஓடும் துறை என்று கூறல் காண்பீர்
[கன்னியரே—யாது?

25. கன்னியே! கரியன்
கதை அழித்தேன் கரியான்—யாது?

26. வட்டவடிவாள்
வரவரத் தேய்வாள்
முற்றும் மறைவாள்
மூன்றாம் நாள் முளைப்பாள்—யார்?

27. முன்னிரு எழுத்தோ முகத்தொரு நோய
[தாகும்
முன்றொன்று பின்னிரண்டு கூட்டுவார் பத்தி
[என மொழிவர்
ஆதிஅந்தம் சேர்ப்பார் பரம் என்றும் பகருவர்
நாலெழுத் தாலாயவதை நானிலத்தோர் செடி
[என நவிலுவரே—யாது?

28. மூன்றெழுத்தோர் படர்கொடியின் பேரே
[யாகும்
முதல்எழுத்தைத் தள்ளிவிடின் மலையோ என்
[பார்
இடைஎடுத்து விடைகாண்பார் இடையோ
[என்பார்
மடவரலே திடமாக 'அவரை' நீர் மொழிகு
[வீரே—யாது?

29. கண்டால் பதுங்குவான்
கங்குலில் வருவான்
உரத்துள் ளிருப்பான்
உதிரம் பருகுவான்—யார்?

30. மண்மீதும் காண்பான்
மலைமேலும் காண்பான்
தண்ணியிலும் காண்பான்
தத்தித் தத்திப் போவான்—யார்?

31. மூன்றெழுத்தூர்
முப்பதம் இசைக்கும் ஓரூர்
மூன்றோன் மன்னாய் நின்ற வூர்
முத்தமிழ் வளர்ந்த மூதூர்—எது?

32. கூட்டத்தாள்
கூப்பிடவாராள்
குடுமியற்றாள்
ஓர்கொண்டையாள்—யார்?

33. காயோ காய்! கருநிறப் பச்சைக்காய்
கடலோன் வேலுக்குக் கனிகொடுக்கும் காய்
—எது?

34. தானுை தரிக்காப்பூ
தையலர் சடைகொண்டைக் குகந்தபூ—எது?

35- பூ இல்லாப்பூ! புனல்காய எடுத்தபூ—எது?

முன் சஞ்சிகையில்

வெளியானவற்றின் விடைகள்.

1 பூசனைக்காய்; 2 அன்னம் அருந்தல்; 3 பேன்; 8 சல்லடை; 5 இளநீர்; 6 மேஜை; 7 கோடரி; 4 தோசைக்கல்; 9 கோபாலன்; 10 சத்திரம்; 11 பூட்டு; 12 கத்திரி; 13 விபூதி; 14 சீப்பு; 15 சூரியன்.




(மருத்துவதுல சங்கத்தினர் பிரசுரம்)

நீ நோயின்றி தேக பலத்தோடு சுகமாய் வாழ விரும்பினுல்
இந்த விஷயத்தை முழுவதும் படித்து அதன்படி நடந்துகோள்.

1. நாள்தோறும் விடியற்காலம் 5-மணிக்குள் தூங்கி விழித்தல்.

2. விழித்தவுடன் படுக்கையின் பக்கத்தில் மூடி வைத்துள்ள தண்ணீரால் வாய் கழுவுதல்.

3. சலமலங் கழித்தல்.

4. மெதுவான பிரஷ்ஷினுலாவது பற்கொம்பினுலாவது பல் விளக்கல்.

5. பல் விளக்கினவுடனே நீராகாரம், (இரவு சோற்றில் ஊறின நீர்) அல்லது வெந்நீர், அல்லது நல்ல தண்ணீர் இவைகளில் எதாவது ஒன்றை உட்கொள்ளுதல்.

6. 'பிராணுயாமம்' எனும் மூச்சுப் பழக்கம் காலை மாலை வெறும் வயிற்றில் தவருமல் செய்தல்.

7. அவரவர் வயது, சத்திக் கியன்றவரையில் வியர்வை யுண்டாகுமட்டும் உடற்பயிற்சி செய்தல்.

8. வீட்டைவிட்டுக் காலை மாலை இரண்டுமைல் தொலைவிற்குக் குறையாமல் குதிரை சவாரியாவது, வில் வைத்த வண்டியிலாவது, கால் நடையாலாவது வயதிற்கும் சக்திக்கும் எற்றபடி நகர்ப்புறமாகப் போய் வருதல்.

9. தண்ணீரில் அல்லது இளஞ்சூடான வெந்நீரில் காலையில் தலை முழுகுதல். கூடுமானுல் ஆறுகளில், குளங்களில், கடலில் அபாயமில்லாத இடத்தில் நீராடுதல்.

10. காலையில் காபி, டீ, குடிக்காமல் கஞ்சி போன்ற உணவுகளை மிதமாக அருந்தல்.

11. படுக்கை யறைகளிலும் தொழிற்சாலைகளிலும் சன்னற் கதவுகளை எப்போதும் திறந்துவைத்தல்; ஒரே படுக்கையில் இருவர் இரவு முழுவதும் சேர்ந்து படுத்துறங்காதிருத்தல்.

12. பகல் உணவில் எதாவதொரு கீரையைச் சேர்த்துக் கொள்ளுதல்.

13. உடலுக்கு வேண்டிய சத்துள்ள பொருள்களைச் சேர்த்துச் சாப்பிடுதல். அரிசியைத் தவிடு போகாமல் குத்திக் கஞ்சியை வடிக்காமல் பொங்கி உண்ணுதல்.

14. உண்ணும்போது எந்த உணவையும் அவசரமில்லாமல் அமைதியாக இருந்து சிறிது சிறிதாக எடுத்து நன்ருக மென்று உண்ணுதல்.

15. ஆகாரத்திற்குப்பின் மிகப் புளிப்பில்லாத இனிப்பான பழங்கள் எதாவது உட்கொள்ளுதல்.

16. பகலில் உண்டவுடன் சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளுதல்.

17. காலை 7-மணி, நண்பகல், 12-மணி, மாலை 7-மணி இம்மூன்று வேளைகளில் உண்ணல்; மற்ற வேளைகளில் தண்ணீர் அல்லது வெந்நீர் குடிப்பதைத் தவிர வேறு எந்த உணவு வகைகளையும் உண்ணுதிருத்தல்.

18. வெற்றிலை, பாக்கு, புகையிலை, சிகரெட், பீடி, சுருட்டு, மூக்குத்தூள் (பொடி) இவைகளில் ஒன்றும் பழகா திருத்தல்.

19. எக்காரணத்தை முன்னிட்டும் கள், சாராயம், பிராந்தி, ஒயின், கஞ்சா, அபின் முதலிய மயக்கப் பொருள்களை அருந்தா திருத்தல்.

20. காபி, டீ, சோடா, கலர்கள் குடியாதிருத்தல்.

21. நாள்தோறும் ஒருமணி நேரமாவது காலை மாலை உடம்பு முழுவதும் வெயில் படும்படியாக வீட்டை விட்டு வெளியிற் சென்று எதாவதொரு வேலை செய்தல்; அல்லது உலாவுதல்; சக்தியில்லாதவரும், நோயாளரும் முதுகுபக்கம் வெயில் படும்படியாகக் கொஞ்சநேரமாவது உட்கார்ந்திருத்தல், சாய்ந்திருத்தல்.

22. மனம், மொழி, மெய் முதலியவைகள் அயர்வடையும் வரை வேலை செய்யாதிருத்தல்.

23 உழைப்புக்குத் தக்க ஓய்வு எடுத்துக்கொள்ளுதல்.

24. இயன்றவரையில் திறந்த இடத்திலிருந்து வேலை செய்து பொழுது போக்கல்.

25. காய்ச்சின நீரையே குடித்தல்.

26. இயன்றவரையில் ஊன் உணவை (மாமிச வகைகள்) விலக்குதல்.

27. கூடுமானவரை ஆசை, கவலை, சினம், அச்சம் முதலியவைகளுக்கு இடங்கொடாமல் மனதை அடக்கியாளப் பழகுதல்.

28. இரவு 9-மணிக்குப் படுத்துத் தூங்குதல்.

பண்டிட் S. S. ஆனந்தம்,
சங்கம் நிறுவியவர், சங்கத் தலைவர்



## நிரூபங்கள்

### ஒரு விண்ணப்பம்

சேலம் ஜில்லா, திருச்செங்கோடு தாலூக்கா, சங்ககிரி டிவிஷன் குமாரபாளையம் அக்ரஹாரத்தைச் சேர்ந்த சின்னப்ப நாய்க்கன் பாளையத்திலிருக்கும் உண்மைச் செங்குந்த மகாஜனங்கள் அனைவரும் எழுதிக்கொண்ட விண்ணப்பம்.

ஐயா! எங்கள் ஊரில் நல்ல கல்வி அபிவிருத்திக்குரிய வழி ஒன்றும் இல்லை யாகவினுல் நமது முதல் மகாநாட்டின் தீர்மானங்களில் ஒன்றின் வண்ணம், கைத்தொழிலின் காரணமாக இரவு ஒரு பொழுது தான் சிறுர்கட்குக் கல்வி பயில்விக்க நேரம் ஆதலால், 19-1-30, இதற்கெனவே கட்டி முடிக்கப் பெற்ற கட்டடத்தில், "ஸ்ரீ குகாநந்த நிலைய இராத்திரிப் பாடசாலை" என்ற நாமத்தைப் பவாநி உயர்தரப் பாடசாலைத் தமிழாசிரியர் சைவத் திரு. கு. குமாரசாமிப் பிள்ளையவர்கள் சூட்ட, டை பாடசாலையை இன்னும் பல பெரியோர்கள் சூழ திறுவினேம். பாடசாலையும் இதுகாறும் நடந்து வருகிறது.

எங்கள் ஊரில் கல்விச் செல்வம், பொருட் செல்வம் ஆகிய இருவகைச் செல்வங்களிலும் குறைவுற்றவர்களே யிருத்தலால் டை பாடசாலை இனி மேல் நடந்து வருவது முருகன் திருவருளாலன்றி, எவ்வாறு என்பது மிக்க ஐயம். டை கட்டடத்தைக் கட்டி முடிக்கச் செலவான ரூ 1000, ஆயிரமும் பற்பல வெளியூர்ச் செல்வவான்கள் உதவியதே. இனி வேறு வசூல் செய்வது அசாத்தியம்; கிடைப்பதும் அரிது.

டை பாடசாலைக்கு ஆசிரியர்கள் டை தமிழாசிரியர் குமாரர் திரு. K. ஞானசம்பந்தம் பிள்ளையவர்களும், எங்களூர் T. R. மாரிமுத்து முதலியாரவர்களும் ஆகிய இருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 20. சம்பளமும், மற்றச் செலவும் ஆகிறது. இதற்கு யாதொரு நிதியும் வருமானமும் கிடையாது. பிள்ளைகளிடத்தில் சம்பள வசூல் செய்யப் புகுவேமே யாகில் பிள்ளைகள் யாவரும் நின்றுவிடுவர் என்பது திண்ணம்.

ஆகவின், தாங்கள் சங்கத்தின் சார்பாக டை பாடசாலை என்றும் நடந்து வருமாறு தக்க வழிகளைச் செய்து வைப்பது தங்கள் கடமையாகும் என்று யாங்கள் மிக்கப் பணிவுடன் அறிவித்துக் கொள்கின்ருேம்.

அன்றியும், சிறுர்களன்றி, வாலிபர்கள் இயன்றவரை கல்வி யறிவு, குல முன்னேற்றம், இறைவனிடத் தன்பு ஆகிய பெற்று வாழும் வண்ணம் சென்ற 3 வாரங்களாகச் "செங்குந்த இளைஞர் சைவ சித்தாந்த சங்கம்" என்ற ஒரு கழகத்தையும் கூட்டி, ஒவ்வொரு சனிக்கிழமை இரவிலும் சபை நடந்து வருகிறது. இதைப்பற்றிய செய்தி யாவும் மித்திரன் வாயிலாக வெளியிட வேண்டுகின்ருேம்.

மறுமுறையும், எங்கள் கலாசாலை நடந்துவரத் துணை புரியுமாறு தங்களைப் பணிந்து விண்ணப்பித்துக் கொள்கிருேம்.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள,
தி. கா. கருப்பண்ண முதலியார்.
காரியதரிசி.

வேலுமயிலுந் துணை.

குறிப்பு:—தயாளகுண நிறைந்த குலாபிமானிகள் இப்பள்ளிக் கூடத்திற்கு உதவி புரிவார்களென நம்புகிருேம். துலைரத்தனத்தார் ஒத்தாசையையும் நாடல் வேண்டும். (ப-ர்.)

### நவவீரர் வழித்தோன்றிய செங்குந்தர்களுக்கோரு விண்ணப்பம்.

ஸ்ரீமத் அகண்டாகார சச்சிதானந்த சொரூபியாய் விளங்கும் உமாதேவியார் பாதச்சிலம்பில் தோன்றிய செங்குந்த சிகாமணிகளே! நமது குலம் முன்னேற்ற மடையுமாறு கோவை ஜில்லா கணபதி கிராமத்து உண்மைச் செங்குந்த வாலிபச் சங்கத்தைச் சார்ந்த சில அங்கத்தினர்கள் சேர்ந்து தானத்தில் மேலானது அன்னதானமே எனத் தீர்மானித்துப் பிரதி வருஷமும் பங்குனிமீ உத்தர நக்ஷத்திரத்தன்று கோவை நகருக்கு மேற்கே 7 மைல்தூரத்திலுள்ள மருதாசலத்தில் எழுந்தருளியுள்ள மருதாசல மூர்த்தியின் சன்னிதானத்தில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்காக இரண்டு வருஷமாக நபர் ஒன்றுக்கு மாதாமாதம் 4 அணுவாக வசூல் செய்து சேர்ந்த தொகையை வட்டிக்கு விட்டு வரவு செலவு செய்து நாளது வரையில் 150 ரூபாய் வரையில் சேர்த்திருக்கிருேம்.

வருஷாவருஷம் 100 பேர்களுக்குக் குறையாமல் அன்னதானம் செய்வதற்கு மேற்படி தொகையின் வருமானம் போதாதாகையால் உண்மைச் செங்குந்த குலாபிமானிகள் தங்களா லியன்ற பொருளுதவி செய்து டை தர்மத்தை நடத்த உதவி புரியுமாறு வேண்டிக் கொள்ளுகின்ருேம். பணம் அனுப்புவோர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புவதோடு தங்கள் பெயரையும் விலாசத்தையும் தெரிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

தீ. நா. பழனியப்ப முதலியார் குமாரன்,
கந்தசாமி முதலியார்.
கணபதி போஸ்டு, கோயமுத்தூர்

129815

## நிருபம்

குருவராஜப் பேட்டை வீராசாமி முதலியார் சில மாதங்களுக்கு முன் சோளிங்கபுரம் நாட்டாரைப்பற்றி நமது மித்திரனில் எழுதியுள்ள நிருபத்தை முன்னிட்டுச் சோளிங்கபுரத்தில் ஒரு நாட்டுக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் எடுத்த விவகாரம் சரிவரமுடிவு பெருமல் போனதுமன்றிச் சோளிங்கபுரத்திற்கும் குருவராஜப் பேட்டைக்கும் கக்ஷி உண்டாய் விட்டது. பிரபல வியாபாரியும் குலாபிமானியுமாகிய சோளிங்கபுரம் நாட்டாண்மை பட்டணம் முனிசாமி முதலியார் வீட்டில் நடந்த திருமணத்திலாவது இக்கக்ஷி ஒருவாறு பைசலாகுமெனப் பலர் எதிர்பார்த்திருந்தும் ஒன்றும் ஆகாமற் போயிற்று. இப்போது கக்ஷியைப் பலப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறக் காணேம். இது சம்பந்தமாக நமது தலைச் சங்கத்திற்கு இருபக்கங்களிலு மிருந்தும் நிருபங்கள் வந்து கொண்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். ஆகையால் நமது தலைச் சங்கத்தாரை இவ்விஷயமாக யான் கேட்டுக் கொள்வது யாதெனில் ஷை நிருபங்களில் கக்ஷி விரோதத்தைப் பலப்படுத்தக்கூடிய விஷயங்கள் குறிக்கப்பட்டிருந்தாலும் இருக்கலாம் (எனக்கு உண்மையில் அவற்றில் கண்டுள்ள விஷயங்கள் ஒன்றும் தெரியாது) ஆகையால்பகைமையைவளர்க்கக்கூடியவை ஏதாவதிருப்பின் அவற்றை மித்திரனில் வெளியிடக்கூடாது என்பதும், எவ்விதத்திலாவது எங்கள் நாட்டில் ஒற்றுமையைச் செய்துவைக்க முயலவேண்டும் என்பதுமேயாம். இல்லையேல் இக்கக்ஷிப் பிளவு சோளிங்கபுரம் நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு கிராமத்திலும் இருபக்கத்தாருக்கும் பெருங் கெடுதியை விளைக்கு மென்பதில் சந்தேகமில்லை. இதைப்பற்றிக் கேள்வியுற்றுப் பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாட்டிலுள்ள சில சகோதரர்கள் கூட கவலையுற்றுத் தங்கள் நண்பர்களுக்கும் உறவினருக்கும் நிருபங்கள் எழுதியிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன்.

இவ்விரு கக்ஷிகளிலும் பெருந்தன்மையும், குலாபிமானமும், தெய்வ பக்தியும், நியாயத்திற்குக் கட்டுப்படும் தன்மையும், விட்டுக் கொடுக்கும் குணமும், மற்றும் பலவேறு அறிய குணங்களும் வாய்ந்த பெரியோர்கள் இல்லாமற் போகவில்லை. பொற்பிளவோ டொத்த இன்னவரைக் கூட்டிவைப்போர் தான் தேவை. இதற் கென யாராவது முன்வரின் விஷயம் முற்றுப் பெறும் என்பதில் ஐயமின்று. ஆயினும் இதற்கு இரு பாலாரும் இசைந்து தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தாலன்றிப் பிறர் இதில் தலையிடுதல் இயலாது என்பது யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய தொன்றாகும். விரோதத்தையும், க்ஷாத்திரத்தையும் விருத்தி செய்து வேடிக்கைப் பார்க்க விரும்புவோர்க்கு மாத்திரம் இருதிரத்தாரும் இடந்தராது நாட்டாண்மைக் காரர்களும் பெரியோர்களும் 'ஒன்றினல் வாழ்வோம் அன்றியேல் வீழ்வோம்' என்னும் பழமொழிக் கருத்தையும், சமீபத்தில் காஞ்சிபுரத்தில் கூட இருக்கும் நமது இரண்டாவது மகா நாட்டையும் உத்தேசித்தாவது ஒற்றுமையை உண்டாக்கி இந்நாட்டுச் செங்குந்தர்களை க்ஷேமமடையச் செய்யுமாறு திருவாளர்கள் சோளிங்கபுரம் பூஞ்சோலை லக்ஷ்மண முதலியார், பட்டணம் முனிசாமி முதலியார், பங்காரு காளத்தி முதலியார், கூ. கோவிந்த முதலியார், திருவாளர்கள் குருவ ராஜப் பேட்டை தளவா குப்பண்ண முதலியார், குமர அருணசல முதலியார், மின்னல் திருவாளர்கள் பட்டு பரசுராம முதலியார், கடைக்கார பாளையத்தா முதலியார், அம்மையார் குப்பம் திரு. சரவண கோவிந்தசாமி முதலியார், வெங்கனூர் திரு. வீராசாமி முதலியார், மருத முருகப்ப முதலியார் முதலிய அறிஞர்களை மிகவும் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சோளிங்கபுர நாட்டைச் சேர்ந்த
ஒரு கிராமச் செங்குந்தர்கள்.

---

### பவானி உண்மைச் செங்குந்தரின் உரிய வெற்றி.
### மேளக்காரருக்கு மீண்டும் தோல்வி.

சென்ற வருஷம் மாசி மாதம் இத்தலைப்பின் பொருளைக் கொண்ட ஒரு செய்தியைப் பங்குனி மாத மித்திரனில் நேயர்கள் பார்த்திருக்கலாம். அதன் சம்பந்தமான ஒரு விஷயத்தை மீண்டும் இவ்வருஷம் வெளியிட நேர்ந்தது நம்மனோர்க்கு மகிழ்ச்சியையே விளைவிக்கும்.

பவானியில் இவ்வருஷம் மாசி மாதம் வழக்கம் போல் செல்லாண்டியம்மன் பண்டிகை விழாவிற்கு, சென்ற வருஷத்திய நம்மவர்களின் வெற்றி காரணமாய்ப் பொறாமை கொண்டிருந்த மேளக்காரர் என்பவர்கள் ' துவஜாரோகண (கொடிக்கட்டும்) விழாவை நாங்கள் தான் நடத்துவோ' மென ஷை கோவிற் பிரமுகர்களிடம் முறையிட்டுக் கொண்டதைக் கேள்வியுற்ற நம்மவர்கள் உடனே கோவிற் பிரமுகர்களும் மகாஜனங்களுமடங்கிய பொதுக் கூட்டம் ஒன்றினைக் கூட்டினர். அக்கூட்டத்தில் 'கொடிகட்டுதல் யாருக் குரித்து?' என்ற விஷயம் மகா ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டது. பலரின் அபிப்பிராயமும் நம்மவர்க்கே சாதகமா யிருந்தது. முடிவில் 'உண்மைச் செங்குந்தரே கொடிகட்ட வேண்டும்' என்ற விஷயம் கூட்டத்தில் முடிவடைந்தது. அதன் பின்னர் மேளக்காரர் "நாங்கள் கோயிலில் வாத்தியம் செய்ய மாட்டோம்" எனப் புரளி செய்ததுமன்றி, அக்கோவிற் பிரமுகர்களிடம் பெரிதும் முறையிட்டு இருதிறத்தாரும் கட்டுவதற்கின்றிக் 'கோவிற் பொதுவிலேயே கொடி யேற்றுங்கள்' எனக் கூறியுள்ளனர். அது காரணமாகக் கோவிற் பிரமுகர்களில் இரண்டொருவர் கோவிற் பொதுவிலேயே கொடி கட்டிவிடலாம் என்ற உத்தேசத்தோடிருந்



ததையறிந்த நம்மவர்கள், கோவிலிலேயேயிருந்து, கோவிற் பிரமுகர்கள் பொதுவில் கொடி கட்டுவாரானால் தடுக்கும்படி சிலரை அனுப்பி விட்டுப் போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு, "எங்கள் பாத்தியதையை நாங்கள் இயற்றுவதற்கு இடையூறு ஏற்படுவதாகத் தெரிவதால் அதை உடனிருந்து நடத்திவைக்கவேண்டும்"என விண்ணப்பம செய்து கொண்டனர். பின்னர் கோவிற் பிரமுகர் ஒருவரும் வழக்கம் போல் பண்டிகையை நடத்திக் கொடுக்கும்படி போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு விண்ணப்பம் எழுதினர். அதன் பின்னர் மேளக்காரரும் அவர்களிலொருவர் 12 வருஷத்திற்கு முன் கொடி கட்டியிருப்பதால் அப்பாத்தியதை அவர்களுக்கு அளிக்க வேண்டிய ஏற்பாடு செய்து தரும்படி விண்ணப்பங் கொடுத்தனர். அம் மூன்றையும் பெற்ற ஸ்ரீமான் இன்ஸ் பெக்டர் அவர்கள் உடனே யாவரையும் வரவழைத்து விசாரித்தனர். மேளக்காரரில் முருகேசனும், அப்பாவும் வாக்குமூலம் கொடுத்தனர். அவர்கள் வாக்குமூலப் படியே இன்ஸ்பெக்டர் அவர்கள் சாட்சிகளை விசாரித்ததில் அச்சாட்சிகள் "உண்மைச் செங்குந்தர்களே கொடித்துணி கொண்டு வருதல் வழக்கம்" என்பதை உரைத்து விட்டனர். எனவே உண்மையைப் பெரிது முணர்ந்த அறிவாளர் இன்ஸ் பெக்டர் அவர்கள் "சாட்சிகளாலும் உங்கள் வாக்கு மூலத்தாலும் பிற்பட்ட பன்னிரண்டு வருஷமாக உண்மைச் செங்குந்தர்களே கொடி கட்டி வருதலால் அப்பாத்தியம் அவர்களுக்கே உரித்து. அவர்களே துவஜாரோகண விழாவை நிறைவேற்றுவர். நீங்கள் தடுப்பதானுல் தகுந்த நடவடிக்கை நான் எடுத்துக் கொள்வேன். உங்கள் பாத்தியதையை சிவில் கோர்ட் மூலம் பெற்றுக் கொண்ட பின்னுல் கொடி கட்டுவதை நீங்கள் நடத்தலாம்" எனத் தீர்ப்புரைத்தனர். அதற்கொத்துக் கொண்டு மேளக்காரர்கள் கோயிலுக்கு வாத்தியஞ் செய்வதை நிறுத்தி விட்டனர். எற்கனவே உண்மைச் செங்குந்தர்களுக்காக ஈரோட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட மேளக்காரர்கள் பவானியிலிருந்ததால் அவர்களையே கோயில் வாத்தியத்திற்குப் பிரமுகர்கள் அழைத்துக் கொண்டனர். அவ்வாத்தியத்திற்குக் கொடுக்கும் கூலியாகிய ரூபாய் 50—0—0-ம் செங்குந்தர்களே (நம்மவர்களே) கொடுத்து விட்டனர். ஷை ரூபாய் 50-ம் கோவிற் பணத்திலிருந்து கொடுக்க வேண்டியதே நியாயமானதால் நம்மவர்கள் ஷை ரூபாய் 50-ம் கோவிற் பிரமுகர்களிடமிருந்து இன்னும் வாங்காமலிருந்தாலும் இனியாவது கேட்டு வாங்குவார்களென எண்ணுகிறேன். பண்டிகை காலத்தில் மேளக்காரர்கள் வர முடியாது எனக் கூறி விட்டனராம். இதனுல் யாருக்கு நஷ்டம்? மேளக்காரருக்குத்தான். ஜனங்களுக்கு வாத்தியச் செலவைக் குறைக்க மேளக்காரர் வாராமலிருந்தது நமக்குப் பெரிதும் சந்தோஷமே. இவ்விஷயத்தில் நம்மவர்கள் பெரிய வெற்றி யடைந்தது நம் சமூகத்திற்கே சிறப்பினையும் புகழையும் அளிக்கும் என்பதில் தடையில்லை. இவ்விஷயத்தில் நம்மவர்கள் பெருமுயற்சி செய்தது போல ஒவ்வொரு விஷயத்திலும் இத்தகைய உற்சாகத்தைக் காட்டுவார்களென நம்புகிறேம்.

இங்ஙனம்,
B. S. குழந்தைவேலு முதலியார்.
பவானி

---

இம்மாதம் வந்த நமது மித்திரனைப் பார்த்தேன். அதில் கொல்லங் கோட்டு ஒற்றுமைத் திருமணம் விஷயமாய் எழுதியிருந்ததைப்பற்றிப்பார்த்து நான் மிகவும் சந்தோஷ மடைந்தேன். நமது முதலாவது மகா நாட்டில் நடந்த தீர்மானங்களில் ஒன்றுகிய இம்மாதிரி திருமணம் நமது ஜாதியின் முன்னேற்றத்துக்கு ஒரு முக்கியமான அடையாள மென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இம்மாதிரி கலியாணங்கள் செய்ய வேண்டு மென்று நம்மில் சிலர் அந்தரங்கத்தில் எண்ணிக் கொண்டிருந்த போதிலும் அதைப் பகிரங்கமாய் உசார்ஜிதத்துக்குக் கொண்டு வரக் கொஞ்சம் சந்தேகப் பட்டுக் கொண்டிருக்கிறர்கள்.

நமதுமகாநாட்டில் அதைப் பற்றித் தீர்மானமாகியிருந்த போதிலும் அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர நம்மவர்கள் பிரயாசைப்பட வேண்டியது அவசியம். அதில் சாதாரண மனிதர் முயற்சி யெடுப்பதில் பயனில்லை. தங்களைப் போன்ற வித்வ சிரோமணிகள் இதற்கென்று முன்னுக்கு வந்து கொஞ்சம் பிரயாசை யெடுப்பார்களாகில் அந்தத் தீர்மானம் சீக்கிரம் அனுஷ்டானத்துக்கு வந்துவிடு மென்று நான் நம்புகிறேன். அதற்கு முதலாவது படித்த பிள்ளைகளாகத் தெரிந்தெடுத்து அவர்களுக்குள் இந்தக் கலியாணத்தை உசார்ஜிதத்துக்குக் கொண்டு வருவோமாயின் மற்றவர்களும் அதைப்பார்த்துச் சிறிது காலம் செல்லச் செல்ல இந்த வழக்கத்துக்கு வந்து விடுவார்களென்று நினைக்க ஏது வுண்டா யிருக்கிறது.

இப்போது திருநெல்வேலியில் அதே மாதிரி ஒரு ஏற்பாடு செய்யவேண்டு மென்று நானும் இன்னும் சிலரும் ஆலோசித்து அதற்காகத் தங்களுக்கு இந்தக் கடிதம் எழுதி இருக்கிறேன்.

ஆகையால் தாங்கள் பொது நல சேவையே புண்ணியமென்று கருதி உடல் பொருள் ஆவி மூன்றையும் பொதுநல சேவைக்குத் தத்தம்செய்து வருவதுபோல் இது விஷயத்திலும் எவ்வளவு விசாரணை செய்ய முடியுமோ அவ்வளவு ஆரம் விசாரித்து அந்த விவரங்களை நன்றுயறிந்து கூடிய சீக்கிரம் எனக்குப்பதில் எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன். தங்களுக்கு எத்தனையோ காரியங்களிருந்த போதிலும் இதிலும் தாங்கள் சிரமத்தைக் கவனியாமல் முயற்சி யெடுத்து ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம் என்றும், செய்வீர்களென்றும் நம்புகிறேன். சிரமத்துக்கு மன்னிக்கவும். வேணும்.

தங்கள் அன்புள்ள
வ. வீ. ச. வீ. சண்முக முதலியார்,
வியாபாரம், பெரிய தெரு,
திருநெல்வேலி டவுன்.

# வர்த்தமானம்

## மதுரை பிரபல குடும்பத்தில் திருமணம்.

சென்ற 24-3-30 தேதி சோமவாரத்தன்று இரவில் மதுரைச் செங்குந்தர் சங்க உபஅக்கிராசனரும், இரங்கூன் பிரபல வர்த்தகருமான திருவாளர் சி. ராம. சுந்தர முதலியாரவர்களின் புதல்வர் திருநிறைச்செல்வன் ஆறுமுகம் அவர்கட்கும் பரம்பக்குடி முதலாளி ம. ப. ராம அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவரும், செங்குந்த குலச்செல்வருமான திருவாளர் ம. ப. ந. இருளாண்டி முதலியாரவர்களின் புதல்வி திருநிறைச் செல்வி மீனாட்சியம்மையாருக்கும் திருமணம் மிக்க விமரிசையாக நடந்தேறியது. அது சமயம் இரங்கர்ச் செங்குந்த இளைஞர் சங்கத்தினரால் வாழ்த்துப்பா இதமொன்று வாசித்தளிக்கப்பட்டது. மணமக்களை ஆசீர்வதித்து இரங்கூனிலிருந்து பல வாழ்த்துத் தந்திகள் வந்தன என்று என். எஸ். மாணிக்க முதலியார் எழுதுகிறார்.

---

## கலியாண நன்கொடை

சுக்கிலவூ பங்குனிமீ 7உ புன்னைவன க்ஷேத்திரமாகிய திருவேடகம் என்னும் திருப்பதியில் அம்புஜாக்ஷியம்மன் சந்நிதியில் மதுரை ஜில்லா வண்டியூர் செங்குந்த சங்கத்தலைவர் திருவாளர் மா. குப்புசாமி முதலியார் தம்பியாகிய திருவாளர் மா. சுப்பையா முதலியாருக்கும் சொடி மங்கலம் திருவாளர் வயிராண்டி முதலியார் குமாரத்தி திரு. நிறைச்செல்வி அழகம்மாளுக்கும் நடந்த திருமண விழாவில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை ரூ. 2-0-0 கொடுத்தார்கள். அவர்களது குலப்பற்றும் பரோபகாரமும் போற்றத் தகுந்தவை.

---

## லாட்டரீ பிரைசில் வந்த தொகையை தலைச் சங்கத்திற்கு நன்கொடையாகக் கொடுத்த அன்பர்கள்.

| | | | |
|---|---|---|---|
| ச. பழனியாண்டி முதலியார் கொளும்பு. | 1 | 0 | 0 |
| அ. வீ. பொன்னுசாமி முதலியார் அரிசிக்கடை 543, சூரத் எ. பஜார் ரங்கோன். | 4 | 14 | 0 |
| கூ. ந. நாகசுந்தர முதலியார் அரிசிக்கடை 526, சூரத் எ. பஜார் ரங்கோன். | 6 | 10 | 0 |
| பொருள் வைத்தசேரி திரு. ச. ராமசாமிப் பிள்ளை. | 0 | 10 | 0 |
| திரு. செ. நமசிவாய முதலியார். | 3 | 10 | 0 |
| G. கோபாலன். | 1 | 0 | 0 |
| புளுக்பாண்டு கம்பெனி தென்காசி. | | | |
| கூடப்பாக்கம் S. நடராஜ முதலியார் உபாத்தியாயர் நன்கொடை வரவு. | 1 | 2 | 0 |
| அம்பா சமுத்திரம் A; பழனியாண்டி முதலியார் நன்கொடை வரவு. | 2 | 12 | 0 |
| பொன்பரப்பி திரு ம. பா. மாணிக்க முதலியார். | 0-10-0 | | |
| பொன்பரப்பி திரு. கூக்கோ. ஆ. கனகசபை முதலியார். | 0 | 10 | 0 |
| தட்டப்பாறை K. குழந்தைவேல் முதலியார் பாரியாள் நன்கொடை. | 1 | 4 | 0 |
| வேலாயுதம் பாளையம் புதூர் கூ. வா. ரா. சச்சிதானந்த முதலியார். | 0 | 10 | 0 |
| மன்னார்குடி. பெ. ரி. ராம. நடராஜ முதலியார் வரவு நன்கொடை. | 1 | 14 | 0 |

---

## சிறுத்தொண்ட நாயனார் திரு நக்ஷத்திரக் கொண்டாட்டம்.

## மஹேஸ்வர பூஜை.

28-4-30 காலை தமிழ்வேத பாராயணத்துடன் ஸ்ரீ பிக்ஷாண்டவரை முத்து விமானத்தில் வைத்து திருவீதி வலமும் பின்னர் ஸ்ரீ கற்பக விநாயகருக்கு அபிஷேக ஆராதனை முதலியவும் நடைபெறும். மறுநாள் காலை 8 மணிக்குச் சீரான தேவனை விமானத்தில் வைத்து ஊர்வலமும் 12 மணிக்கு மகேஸ்வர பூஜையும் நடைபெறும். சிவநேயச் செல்வர்கள் அச்சமயம் வந்திருந்து இன்புறுவார்களாக.

ஸ்ரீ திருஞான சம்பந்தர் வாசகசாலை,
மாணவர்கள்

---

## பாலப்புரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

சென்ற ஜனவரிமீ வழக்கப்படி இவ்வூர் மாரியம்மன் கோயிலில் நடந்து வரும் மண்டல பூஜை முடிவு தினம் விசேஷ பூஜை நடத்தவேண்டுமென்று பெரியோர்கள் தீர்மானித்தபடி பல கனவான்கள் பொருளுதவியைக் கொண்டு சங்கத்தாரால் பஞ்ச வாத்தியங்களுடன் ஷை பூஜை விமரிசையாக நடந்தேறியது. அச்சமயம் பல ஊர்களிலிருந்து வந்திருந்த நம் குலப்பிரமுகர்கள் சங்கமானது நம்மை ஒற்றுமைப் படுத்தி வருகிற முறையில் உழைத்து வருவதை நோக்கிச் சந்தோஷித்துக் கிளைச் சங்கங்களும் சென்னையிலுள்ள நமது தலைச் சங்கமும நீடூழி நிலைத்து நமக்குப் பெரும் பயனை அளிக்கவேண்டுமென்று அம்மனை வேண்டிக் கொண்டார்கள். நமது சங்கங்கள் ஆங்காங்குச் செய்து வரும் முயற்சி நம் குலத்தவர்க்கு ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்கிவருகிறதென்பது திண்ணம்.

காரியதரிசி,
A. மந்திரு முதலியார்:



## திருத்தணிகை ஞானம்மையார் திருவடி நிலை

ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவரவர்கள் தலைமையின் கீழ் சென்ற மாசி மாதம் திருவாதிரையன்று திருத்தணிகை ஞானம்மையாரின் திரு நட்சத்திரம் கொண்டாடப் பெற்றது. அதுசமயம் கீழ்வரும் பாடல்கள் திரு. சிட்டத்தூர் தணிகாசலம் முதலியாரவர்களால் வெளியிட்டு வழங்கப் பெற்றன. ஞானம்மையாரின் சரித்திரம் நமது மித்திரனில் குலதிலகர் பகுதியில் முன்னொரு மாதம் வெளிவந்துள்ளது.

எல்லாமும் செய்தற் கிடமாகும் என்னெஞ்சே
கல்லார வெற்பன் கழல்.

திருவுந் தருஞ்செய்ய சீருந்தரும் வேலன்
மருவுந் தணிகைமலை வள்ளல்—குருராயன்
ஞானத் திருப்பதத்தை நன்னாளில் தான்பெற்ற
ஞானம்மை பொற்பாதம் நன்கு.

உண்ணாத போகத்தையும் பெறலாம் நாள்தோறும்
மண்ணுவார் நட்பை மதித்திடேல்—பண்ணோரும்
கானத் திருத்தணிகை கந்தன் கழலடைந்த
ஞானம்மை பொற்பதத்தை நாடு.

சரியை முதலாகச் சாற்றும் வழியை
அரிய சிவமுறையி லாண்ட—பரிசிலையே
ஞானம்மை என்னலாம் நல்ல முறைதன்னில்
மோனங்கொண் டுன்னலா முற்று.

காஞ்சிப் பதியிடத்துக் கந்தவேள் நற்குலத்தில்
வாஞ்சித் துதித்த வளரன்னாய்—பூஞ்சித்த
கல்லார வெற்பனடி கண்டுவந்த மாதிநியே
எல்லாமும் தந்தருள்வாய் எற்கு.

தணிகை வரைவாழி தாய்ஞான அம்மை
பணிபலவும் வாழி பதிந்து.

---

## அநுதாபம்

### செங்குந்த மோட்டார் வீரன்

6. 2. 30. ல். கோயமுத்தூர் ஜில்லா அவிநாசி தாலூக்கா மேட்டுப்பாளையத்திலிருந்து அன்னூர் போகும் ரோட்டில் 2-வது மைலில் உணமைச் செங்குந்த சிகாமணியும் கார் வேலையில் கண்ணன் போன்றவருமாகிய C. K. கருப் பண்ண முதலியார் தனது சொந்த ரி. ஓ. பஸ்ஸிலுள்ள ஸ்டியரிங் கின் கெடுதலால் மரத்தில் மோதப்பட்டு தலையில் காயத்துடன் நெஞ்சில் ஸ்டேரிங்கு தாக்கியதாலும் ஷண்முகா, முருகா என்ற முத்தி முடிவின் வாக்கியத்தைச் சொல்லியவுடனே உயிர்துறந்து கைலையடைந்தார்.

இவ்வாக்கியங்கள் வருவதற்காகவே பலமறைகள் படிப்ப தென்பதையும் அனுஷ்டிப்ப தென் ஷை C. K. K. முதலியாரால் அன்பு மேவிட்ட ஜில்லாவாசிகளில் பிரபுக்கள் பலரும் கார் டிரைவர்கள் பலரும் மற்றையோர்களும் பல நூறுபேர்களும் குதிரை வண்டிகளும் நின்றிருந்த "காக்ஷி ஒரு பெருந் திருவிழாவை யொத்திருந்தது. பிறகு அவரைப் புஷ்ப ரதத்தில் எடுத்துச் சென்று சமக்கடன் அவரது மகன் 11-வயது மாணிக்க வாசகனைக் கொண்டு முடிக்கப்பட்டது

குடும்பத்திற்குக் குமரன் துணைதான் கோரற்பாலது

E. V. துரைசாமிமுதலியார் தலைமை ஆசிரியர்
போர்டு பாடசாலை மூலத்துறை.

---

மாசித்திங்கள் 30-ம் நாள் (13-3-30) குருவாரம் திருக்கோவிலூர் தாலூக்கா கண்டாச்சிபுரம் நாட்டாண்மை அருணாசல முதலியார் குமாரர் அருட்கவி, சண்முக முதலியார் சிவபெருமான் திருவடி நிழலை யடைந்தார். இதை முன்னிட்டு ஷை ஆண்டு பங்குனித் திங்கள் 10-ம் நாள் ஆதிவார தினம் (23-3-30) மோக்ஷ தீபாராதனைகள் நடைபெற்றன.

---

இரங்கூனில் அரிசிவியாபாரியும் அறிவு ஆற்றலுடையவரும் நமது செங்குந்த மித்திரனை இரங்கூனில் பரவச் செய்தவரும் கல்வி நிதிச் சீட்டை மிக்க ஊக்கத்தோடு 1500 ரூபா வரை விற்றுதவியவரும், குலாபிமான மிக்குடையவருமாகிய இராமநாதபுரம் ஜில்லா இளையான் குடியிற் பிறந்த திருவாளர் V. நாராயணசாமி முதலியார் அவர்கள் தமது 32-ம் வயதில் 27-3-30 இரவு 1-30-மணிக்கு இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வு எய்தியதைக் கேட்டு மிக்க வருத்த முறுகின்றேன். இவரது பிரிவு நமது செங்குந்த உலகத்திற்கு ஒரு பெரு நஷ்டமென்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு இவரது ஆன்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

வடஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் பிரபல செல்வந்தரும் வியாபாரியும் முனிசிபல் சேர்மெனும் ஆகிய திருவாளர் K. A. சண்முக முதலியார் அவர்கள் சகோதரர் திருவாளர் K. A. பழனிச்சாமி முதலியார் அவர்கள் சுக்கிலவூ பங்குனிமீ 19உ ஆச்சாரியன் திருவடி அடைந்தார் என்பதைக்கேட்டு மிக்க வருத்தமுறுகின்றேன். இவரது பிரிவாற்றாமையின் அநுதாபத்தை இவரது குடும்பத்தாருக்குத் தெருவித்துக்கொள்ளுகிறேன். இவரது ஆன்மா சாந்தி அடையுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருளை சிந்திக்கின்றேன்.

---

(ப. ஸ்ரீ.)

# செங்குந்தர் கிளர்ச்சி

## கோவை ஜில்லா

### சிவகிரி செங்குந்தர் சன்மார்க்க சங்கம்

மார்கழி 29உ திரு. பெ. நா. ராமசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அச்சமயம் கணபதி வா. ப. நஞ்சைய முதலியார் அவர்கள் தலைச்சங்கப் பிரசாரகர் முயற்சியால் இங்கு நிறுவப்பெற்ற சங்கம் வேலை செய்யாதிருப்பதைப் பற்றியும் சங்க மூலமாகவே ஒற்றுமை யுண்டாகு மென்பதைப் பற்றியும் ஒரு விரிவுரை நிகழ்த்தினர்.

தைமீ 2உ திரு. வா. ப. நஞ்சைய முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் 'ஒற்றுமை' 'மதுவிலக்கு' 'மித்திரன்' முதலியவற்றைக் குறித்துப் பேசினர். பின்னர் ஒருவர் எழுந்து, ;முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்தின் காரியதரிசி காலமாய் விட்டபடியால் சங்கமும் வேலை செய்வதில்லை, வருகிற மித்திரனையும் யாரும் படிப்பதில்லை' என்றார். பிறகு திரு. நஞ்சைய முதலியார் சங்கத்தால் உண்டாகும் நன்மையைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்க, 19-1-30உ சங்கம் ஸ்தாபிப்பதாகச் சபையோர் தீர்மானித்தார்கள்.

19-1-30உ காலை 6-30-மணிக்குள் வேலாயுத சுவாமி ஆலயத்தில் புகைப்படம் பிடிக்கப்பட்டது. இதற்கெனப் பலவித அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்த வ. கு. ப. வீட்டில் திரு. கணபதி வா. ப. நஞ்சைய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூட்டம் கூடிற்று. இத்திறப்பு விழாவைக் குறித்து ஈரோட்டில் கேள்விப்பட்டு மதுரை திரு. மா. குப்புசாமி முதலியார் அவர்களும், கருங்கல் பாளையம் திரு. ஸ்ரீரங்க முதலியார் அவர்களும் விஜயஞ் செய்திருந்தது மிகவும் பாராட்டத் தக்கது. வண்டியூர் செங்குந்தர் சங்கத்திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்த ஷை குப்புசாமி முதலியார் அவர்கள் குலமுன்னேற்ற விஷயத்தில் காட்டிய ஊக்கம் இவ்வூர்ச்செங்குந்தர்களுக்குப் புத்துணர்ச்சியை உண்டாக்கிற்று. திரு. பெரிய வீராசாமிமுதலியார் அவர்கள் தலைச் சங்கச் சட்டதிட்டப்படி அனைவரும் நடந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்திப்பேசிச் சேவலும், வேங்கையும், குந்தமும் அழகாக வரையப்பெற்ற நமது கொடியை உயர்த்தினர். கருங்கல் பாளையம் திரு. ஸ்ரீரங்க முதலியார் அவர்கள் ஒரு அரிய சொற்பெருக்காற்றிச் சங்கத்தைத் திறந்துவைத்தார். இராமாநுஜ படத்து ஸ்வாமிகள் நம் குலம் முன்னேற்ற மடையவேண்டுமென்ற காருண்யத்தாலும், ஜனங்கள் காட்டிய ஊக்கத்தாலும் 'ஒட்டக்கூத்தர் மாண்பு' என்ற விஷயத்தைப்பற்றி உபங்யசித்துக் கூத்தர் பெருமானது படத்தைத் திறந்துவைத்தார்கள். பின்னர் முன் ஏற்பாட்டின்படி திரு. நஞ்சைய முதலியார் அவர்கள் முறைப்படி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். திரு. A. செங்கோட்டையா அவர்கள் தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுத்தார்கள். பிறகு தலைவர் பதிலும் அழகிய முன்னுரையும் கூறியதும் 10¼ மணிக்குக் கூட்டம் மறுபடியும் கூடவேண்டுமென்று தீர்மானித்துக் கலைந்தது.

கூட்டம் மறுபடியும் சுமார் 11-மணிக்குக் கூடிற்று. அப்போது சி. பழநியப்பா என்னும் மாணவன் 'நமது தலைச் சங்கத்தின் தொண்டும் நம் சங்கத்தின் மூலம் நாம் இனிச் செய்யவேண்டிய தொண்டும்' என்பதுபற்றி விரிவாகப் பேசிச் சபையோர்க்குக் குதூகலத்தை உண்டாக்கினன். அடுத்தபடி திருவாளர்கள் பூ. நாச்சிமுத்து முதலியார், வே. ராமசாமி முதலியார், ந. சே. ராமசாமி முதலியார், நடேசன் (மாணவன்) ஆகியவர்கள் 'சன்மார்க்கம்', 'விபூதி ருத்திராக்ஷ தாரணத்தின் அவசியம்', 'கொல்லாமை', 'மதுவிலக்கு', முதலியவற்றைக் குறித்து விரிவுரை செய்தார்கள். திரு. சின்னப்பா அன்பர் நமது மித்திரனில் வெளிவந்துள்ள கும்மிப்பாட்டை இனிய குரலில் பாடினர். சி. குழந்தைவேல் என்னும் மாணவன் 'நமது மித்திரனும் ஒற்றுமையும்' என்பதுபற்றி ½-மணி நேரம் தெளிவாகப் பேசினன்.

மாணவர்களாலும், வாலிபர்களாலும் தேவாரம் ஓதப் பெற்றது. திரு. K. காளிமுத்து முதலியார் T. N. குழந்தைவேல் முதலியார் இருவரும் வாலண்டியர்களாக இருந்து தொண்டாற்றினர். இடையிடையே தலைச் சங்கத்திற்கு ஜே! சபாபதி வள்ளலே நம் குலதெய்வம் M. சண்முக சுந்தர முதலியாருக்கு ஜே! P. C. மாணிக்கவாசக முதலியாருக்கு ஜே! என்ற கோஷம் உண்டாயிற்று.

#### தீர்மானங்கள்.

1. 'சிவகிரி செங்குந்தர் சன்மார்க்க சங்கம்' எனப் பெயரிய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப் பெறல் வேண்டும்.
2. இது சென்னையிலுள்ள நமது தலைச் சங்கத்திற்குக் கிளைச் சங்கமாகச் சேர்க்கப்பெற்று வருடந்தோறும் ரூபா 5 கட்டணமாகக் கட்டி வர வேண்டும்.
3. ஒவ்வொரு செங்குந்தரும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
4. தமிழ் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் சங்கக்கூட்டம் கூடவேண்டும்.
5. மதுபானத்தையும், சூதாடுதலையும் அறவே ஒழிக்கவேண்டும்.
6. இவ்வூருக்குச் சலவசதி செய்து கொடுக்கும்



சிந்தாமணி மேஜையின் மீது வைத்திருந்த ஒரு சிறு பளிங்குப் பதுமையைச் சுட்டிக் காட்டினன். "அதோ நிற்கும் பதுமையின் கைகள் எவ்வளவு வெண்மையாய் உருண்டு நீண்டு அழகாயிருக்கின்றன! அதனலென்ன பயன்? பிறர் கண்டு உவக்கக் கூடிய திறமையில்லாத கைகள் அப்பாவையின் பளிங்குக் கரங்களுக்குச் சமானமே! ஒப்புயர் வற்ற ஓவியராகிய உம்மாற் பிடிக்கப்படும் இக்கரங்கள் வர்ணங் குழைக்கவாவது ஏற்றிருந்தா லல்லவோ உங்கள் கைகளைப் பற்றுவதற்கு ஏற்றவையாகும்?" என்று அவள் பணிவுடனும் பரிவுடனும் பகர்ந்த மொழிகளாற் பரவசனகிச் சித்திரவர்மன் அவளிடமும் அவள் பாட்டனரிடமும் விடை பெற்றுச் சென்றான்.

19-1-30 மாலை 8-மணிக்கு வடசித்தூர் திருவாளர் கப்பல் குப்பண்ண முதலியார் அவர்கள் கட்டடத்தில் கூடிய செங்குந்தர் பொதுக் கூட்டத்தில் கவர்ன்மெண்டு மதுவிலக்குப் பிரசார அமைச்சர் திரு. E. V. சிங்காரவேலு முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்ப் பொள்ளாச்சி தாலூக்கா வடசித்தூர் செங்குந்தர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுக் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர்.

திருவாளர். சா. இராமசாமி முதலியார் அவர்கள்.

உபதலைவர்கள்.

திருவாளர். நாட்டாண்மை அங்கப்ப முதலியார்.
திருவாளர். பெரியதனம். கூ. காளியண்ண முதலியார்.

பொக்கிஷதார்.

திருவாளர். அ. அங்கப்ப முதலியார்.

காரியதரிசி

திருவாளர். நே. சி. சா. பழனியப்ப முதலியார் உபாத்தியாயர்.

உபகாரியதரிசிகள்.

கோதவாடி. திருவாளர். N. முத்தய்ய முதலியார் உபாத்தியாயர்.
பனப்பட்டி. திருவாளர். ப. வேலப்ப முதலியார்.
மற்றும் 12 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

திருவாளர். நே. சி. சா. பழனியப்ப முதலியார் அவர்கள், காளியண்ணன் (5-வது வகுப்பு மாணவன்) இவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறியதும் திரு. V. K. M. அப்பா அவர்கள், திரு. V. R. மருதப்ப முதலியார் அவர்கள், திரு. V. இராமசாமி முதலியார் அவர்கள் திரு. S. சோமசுந்திரம் பிள்ளை அவர்கள், திரு. M. R. பெருமாள் முதலியார் அவர்கள், ஆகியோர் 'கவிச் சக்கிரவர்த்தி அவர்கள் சரிதை' 'நம்மவர் நிலைமை அமைப்பு' 'பெண் கல்வி' 'மகாநாட்டுக்கு நமது கடமையும் கைத் தொழிலும்' என்பவற்றைப்பற்றி வெகு விளக்கமாகச் சுமார் 4-மணி நேரம் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலையும் சமயம் நல்லிட்டி பாளையம் நமது குலாபிமானிகளுக்குச் சரியான தகவல் கிடையாததால் அவர்கள் இன்று இச்சங்கத்திற்கு வரவில்லை, அடுத்த மாதம் கூடும் இச்சங்கத்திற்கு வந்து சேர்வார்கள் என்று தெரிவித்தார். மாலை 7-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

#### தீர்மானங்கள்

இச்சங்கத்தைத் தலைச் சங்கத்தோடு இணைத்துக் கிளைச் சங்கமாக்க வேண்டு மென்றும் தலைச் சங்கத்திற்கு வருஷம் 1-க்கு 5-ரூபாய் கட்டணஞ் செலுத்த வேண்டு மென்றும், இச்சங்கத்தை ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை நடத்திவர வேண்டு மென்றும், இச்சங்கத்திற்குப் போதுமான நிதி சேர்க்க வேண்டும் என்றும் நமது தொழிலாளர்கட்கு வேண்டிய உதவி செய்ய வேண்டு மென்றும் அடுத்த மாதம் கூட்டத்தில் சந்தாத் தொகை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

6—2—30 } நே. சி. சா. பழனியப்ப முதலியார்
வடசித்தூர் } உபாத்தியாயர்.
காரியதரிசி.

*

### குளத்துப்பாளையம்
### செங்குந்தர் முன்னேற்றக் கழகம்.

20-2-30 மாலை விநாயகர் ஆலயத்தில் திரு. கல்யாண சுந்தரம் பிள்ளை B.A. L.T., அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் கடவுள் வாழ்த்து ஆனதும் தலைவர் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பின் திரு. E. V. சிங்காரவேல் முதலியார் B. A. கோவை மாணவர்கள் திரு. குட்டி முதலியார், திரு. தர்மலிங்கம் பிள்ளை, திரு. சண்முகம், திரு. போரைய கவுண்டர், திரு. M. R. பெருமாள், உபாத்தியாயர் திரு. ராமசாமி நாடார், சிரஞ்சீவி M. R. சுப்ரமணியன், மாணவன் திரு. K. P. ராமசாமி ஆகிய ஒன்பதின்மரும் முறையே 'நமது கடமை', 'செங்குந்தரும் கிராமவாசமும்', 'மாணவர் இயக்கம்', 'நமது இயக்கம்', 'சுகாதாரம்' 'நமது 2-வது மகாநாடும் கல்விநிதிச் சீட்டும்', 'செங்குந்தர் கைத் தொழிலும் அதன் உபயோகமும்', 'படியாப் பெண்டிர்' 'செல்வப் பிள்ளையின் சீரழிவு' என்பவை பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

இரவு 7-மணிக்குத் தலைவர் முடிப்புரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. கூட்டத்திற்குப் பல கிராமத்துப் பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

K. P. ராமசாமி.
M. R. பெருமாள்.
காரியதரிசிகள்.

#### பிழைதிருத்தம்.

5—1—30-ந் தேதியில் நடைபெற்ற குளத்துப் பாளையச் சங்கத்தில், கல்வியைப்பற்றிப் பேசின K. காளியண்ண முதலியார் பேர், கன்னியண்ண முதலியார் என்று தப்பாக எழுதப்பட்டிருக்கிறது. தயவு செய்து திருத்திக் கொள்ளவும்.

## மலையாளம் ஜில்லா.

### சோரனூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

19-2-30 இச்சங்கத்தின் கூட்டம் இரவு 8 மணிக்கு நாட்டாண்மை மாணிக்கம் முதலியார் அவர்கள் தலைமையில் மாரியம்மன் கோயிலிற் கூடிற்று. அச்சமயம் கீழ்க்கண்ட கனவான்கள் சங்க நிர்வாகஸ்தராக தேர்ந்தெடுக்கப் பெற்றனர்

திரு. நாட்டாண்மை மாணிக்கம் முதலியார் திரு. நாட்டாண்மை ராமன் முதலியார், திரு. கொ. மாணிக்க முதலியார், திரு. சுப்பிரமணியம் முதலியார், திரு. K. M. ராமசாமி முதலியார்.

பின்பு காரியதரிசி திரு. K. M. ராமசாமி முதலியார் கூட்டுறவு க்ஷேம நிதியின் அவசியத்தைப்பற்றிப் பேசினார். இதற்காக ரூபாய் 46 பிரிவு கிடைத்தது. இத்தொகை நமது ஏழை மக்கள் கைத்தொழிலுக்காகக் கொடுக்கப்பட்டது.

இந்த க்ஷேம நிதிக்குத் தலைச் சங்கத்தாரையும் உதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் 12-மணிக்கு இனிது முடிவுபெற்றது,

K. M. ராமசாமி முதலியார்,
காரியதரிசி.

---

## சேலம் ஜில்லா.

### பவானிக்கடுத்த சின்னப்ப நாயக்கன் பாளையம் செங்குந்த இளைஞர் சைவசித்தாந்த சங்கத் திறப்பு விழா.

நம் செந்தின் மேய வள்ளி மணாளன் ஒள்ளிய அருளால், 22-2-30ல் இரவு 7-30 மணிக்கு ஷை யூர் ஸ்ரீ குகாநந்த நிலைய இராத்திரிப் பாடசாலையில் கூடிய ஒரு கூட்டத்தில் 'செங்குந்த இளைஞர் சைவ சித்தாந்த சங்கம்' ஒன்று நிறுவப் பெற்றது.

அச்சங்கத்திற்கு ஷை யூர் திரு. S. K. செங்கோட முதலியாரவர்கள் தலைமை வகிக்க, தேவாரம் ஓதப் பெற்றதும், முன்னுரையாகக் 'கல்வியின் பயன்' 'சங்கங் கூடுதலின் அவசியம்' 'குல முன்னேற்றம்', என்ற பொருள்கள் பற்றித் தலைவரவர்கள் செவ்வனே விளக்கிய பின், 'ஆன்மவுண்மை' 'தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம்' என்ற பொருள்கள் பற்றி முறையே திரு. நாகப்பன், திரு. அ. சுப்பிரமணியன் என்னும் இளைஞர்கள், விளங்கக் கூறிய பின் தலைவர் பின்னுரை நிகழ்த்த, சந்தன தாம்பூலங்களுடன் கூட்டம் கலைவுற்றது.

1-3-30ல் இரவு 8-மணிக்கு, ஷை யூர்ப் பாடசாலையில் அச்சாலை ஆசிரியர் திரு. K. ஞான சம்பந்தம் அவர்கள் தலைமையில் இளைஞர் சங்கம் வழக்கம் போலக் கூடிற்று.

தமிழ் மறை ஓதப் பெற்றதும், 'தற்காலத்தில் சங்கத்தின் அவசியம்', 'தற்காலத்தின் சாதாரண அறிவை மயக்க வந்த சில புன் சமயங்களிற் சிறுவர் முதல் யாவரும் புகாதிருக்கத் தக்க பாது காப்பு, என்னும் பொருள்கள் பற்றி முன்னுரை நிகழ்த்தியபின், 'அப்பூதி அடிகள்', 'திருநாளைப்போவார்' என்னும் பொருள்களைப் பற்றி முறையே மாணவன் திரு. அங்கமுத்து, திரு. T. R. மாரிமுத்து முதலியார் என்பவர்கள் அழகாகக் கூறி முடித்தார்கள். பின்னர் தலைவர் பின்னுரையாக, சைவ மெய்ச் சமயத்தின் உயர் நிலை, சமரச நிலை, அடியார் பத்தி என்பது பற்றித் தெற்றென விளக்கியதும் வந்தனோபசாரம், சந்தன தாம்பூலம் ஆகியவற்றோடு சங்கம் முடிந்தது.

பின்னர், சனிக்கிழமைதோறும் சங்கம் கூடுதல் என்ற முடிவின் வண்ணம் 8-3-30 ஆகிய சனிக்கிழமை இரவு 8-30 மணிக்கு, முந்தைய வாரத்துத் தீர்மானித்தின் வண்ணம் திரு. S. K. செங்கோட முதலியார் தலைமையில், 'பட்டினத்தடிகள் துறவு', 'காரைக்காலம்மையார்' என்ற பொருள்கள் பற்றி முறையே திருவாளர் தி. கா. கருப்பண்ண முதலியார், திரு. சங்கர பண்டாரம் என்பவர்களால், சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

தலைவர் தமது பின்னுரையில், இல்வாழ்க்கை கற்பு, உண்மைத் துறவு, என்பவை பற்றிப் பேசினார்கள்.

அதன் பின், அடுத்த சங்கத்தில் புரிய வேண்டியவையான, 1. முடிவுகள் நிறைவேற்றுதல், 2. சங்க உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் என்பன முடிவு செய்யப் பெற்றன.

சங்கம் 10-15 மணிக்கு வந்தனோபசாரங்களாதிய, வற்றுடன் கலைவுற்றது.

இங்ஙனம் உண்மையுள்ள,
T. R. மாரிமுத்து முதலியார்.
சங்கக் காரியதரிசி

### சேலம் அம்மாபேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்.

5-3-30 இரவு 9 மணிக்கு T. R. அருணாசல முதலியார் தலைமையில் ஜீவகாருண்யம் என்னும் விஷயமாக முறையே திரு. M. P. பொங்கியா முதலியார் A. மாரிமுத்து முதலியார், R. A. அங்கப்ப முதலியார், மாணிக்க முதலியார், A. நாகலிங்க முதலியார் இவர்கள் வெகு விமரிசையாகவும் கேட்டவர்கள் மனம் நல்வழியில் பதியுமாறும் பேசி முடித்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் இரவு 10-45 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

ஆ. நாகலிங்க முதலியார்.

*

### சேலம் அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கம்.

சேலம் அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கத்தின் மாளிகையில் சென்னை செங்குந்த மித்திரன் அதிபரும் தென்னிந்தியா செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சருமாகிய உயர் திருவாளர் ம. சண்முக சுந்திர முதலியார் M. A. L. T, அவர்கள் தலைமையின் கீழ் 1929ஞு டிசம்பர்மீ 7-ந் தேதியும் 8-ந் தேதியும் நடைபெற்ற சேலம்



அம்மாபேட்டை ஷை சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவின்கண் நிறைவேறிய தீர்மானங்கள்.

1. சேலம் அம்மாபேட்டைக்குள் கள்ளுக்கடை வைத்திருப்பது நமது சமூகத்திற்கு ஒரு மானக் குறைவா யிருப்பதோடு நம்மவர்கள் ஒழுக்கத்திலும் செல்வாதார நிலைமையிலும் தாழ்வடைவதற்குக் காரணமாயுமிருப்பதால் அக்கடையினை அம்மாபேட்டையினின்றும் எடுத்துவிட வேணுமாய்ச் சென்னை அரசாங்கத்தாரை இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. இவ்வூரில் ஆயிரக்கணக்கான நெசவுத் தொழிலாலர்கள் வசிப்பதாலும் ஒவ்வொரு தறியிலும் பட்டுச் சரிகைகளால் பார்டர்களும் புட்டாக்களும் அமைக்கப் படுவதாலும் சைனு, பனாரஸ் முதலிய இடங்களில் நெய்வதைப்போல் விரைவாகவும் அதிநூதனமாகவும் நெய்வதற்கு கூடாமையினாலும் பெங்களூர் முதலிய இடங்களில் மைசூர் கவர்ன் மெண்டார் நெசவுத் தொழிலில் குடிகளுக்குப் போதிப்பது போல இவ்விடத்தில் கைத்தொழில் பாடசாலை ஒன்று எப்படுத்தி அத் தொழிலைச் செவ்வையாகப் போதிப்பவர்களை வரவழைத்து நூதன முறைகளைப் புகட்டவேண்டுமெனச் சென்னை அரசாங்கத்தாரை இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

3. இவ்வூரில் அநேக வியாபாரிகள் இருப்பதினாலும் வெளியூர்களுக்குத் தபால் பார்சல் இன்சூரன்ஸ் ரிஜிஸ்டர் முதலியன அனுப்புவதற்குப் போதிய வசதி இல்லாததினால் கூடிய விரைவில் தபால் கிளை ஆபீஸ் ஒன்று ஏற்படுத்த வேணுமாய்த் தபால் உயர்தர அதிகாரிகளை இந்தச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

4. நமது சமூகத்தில் தறித் தொழில் புரிவதற்கு அமைத்துக் கொள்ளும் சிறுமிகட்கு அட்வான்ஸ் தொகை கொடுப்பதால் அப்பெண்களின் திருமணக் காலத்தில் அதிக சிரமம் ஏற்படுகிறது. ஆகையால் சிறுமிகட்குத் தொழில் அட்வான்ஸ் கொடுக்கும் வழக்கத்தை அடியோடு நிறுத்தி விடுமாறு செங்குந்தர்களனைவரையும் இக்கூட்டம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.

5. பெண்களுக்குப் பரியம் வாங்கும் வழக்கம் இருப்பதால் ஏழைச் செங்குந்தர்கள் திருமணத்தின் போது கடன்காரர்களாவதோடும் கடன் பெறுவதற்குச் சக்தியில்லாதவர்கள் பல ஆண்டுகள் கல்யாணம் செய்து கொள்ளமுடியாமல் கஷ்டப் பட்டுக் கொண்டு இருப்பதனாலும், கடன் பட்டுப் பரியம் செலுத்தும் ஏழைகள் பின்னர் அனுபவிக்கும் துன்பத்தில் நமது பெண்களும் பாகம் பெற வேண்டி யிருப்பதாலு, பரியம் பெறும் வழக்கத்தை அடியோடு ஒழித்து விடுமாறு பெற்றோர்களை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

6. நமது சமூகம் வியாபாரம் பொருளாதாரம் ராஜியமாகிய துறைகளில் விருத்தியடைய வேண்டுமானால் ஒவ்வொருவரும் கல்வி அறிவுடையவர்களாக வேண்டுவது அவசியமாதலின் நமது ஆண் பெண் இரு பாலர்களையும் 11-வயது வரையில் கைத் தொழிலில் விடாமல் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டுமோய் அம்மாபேட்டையிலுள்ள செங்குந்தர்களனைவரையும் இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகிறது.

7. நமது ஊரில் சில்லரை வியாபாரிகள் சொற்ப லாபத்தை எண்ணித் தங்கள் சேலைகளையும் வெண் பட்டு வஸ்திரம் முதலானவைகளையும் பஜார் நிலவர விலைக்குக் குறைத்து விற்பதால் நமது வியாபாரம் க்ஷீணிக்க விடாமல் ஏழைகளைக் காக்கும் பொருட்டும் செங்குந்தர் கோவாபரேடிவ் சொஸைடி ஒன்று ஏற்படுத்தும் விஷயத்தை ஆலோசிக்குமாறு அடியில் கண்டவர்கள் அடங்கிய கமிட்டியை இக்கூட்டம் நியமிக்கிறது. S. P. பொன்னுசாமி முதலியார் 1. மு. முனிய முதலியார் 2. க. பழனியாண்டி முதலியார் 3. கொ. வையாபுரி முதலியார் 4. மு. அங்கப்ப முதலியார் 5. மு. பச்சையப்ப முதலியார் 6. செ. பரிச முதலியார்

8. நமது ஊரில் மாப்பிள்ளைசட்ருப் பல ஆண்டுகள் வரையில் சீர் செய்து வருவது பலருக்கும் சிரமமாக இருப்பதனால் மாபிள்ளைகட்கு முதல் ஆண்டு மட்டும் சீர்செய்ய வேண்டுமென்று நம் குல மக்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

9. சென்ற சில ஆண்டுகளாக நமது குலமக்கள் சேலம் ஜவுளிக்கடையில், ஜவுளி விற்று வந்த வழக்கத்தை நிறுத்தி அம்மாபேட்டையிலேயே கடைகள் வைத்து விற்பனை செய்து வருவதாலும் வெளியூரிலிருந்து அநேக ஜனங்கள் குடியேறி இருப்பதாலும் நம் ஊரில் உள்ள ஜவுளிக்கடை தெருவில் எந்த நேரமும் அதிகமான குழந்தைகளும் பெரியோர்களும் சஞ்சாரம் செய்கிற படியினால் சேலம் இருந்து ஆத்தூருக்குச் செல்லக் கூடியமோட்டார் பஸ்களும் சொந்தக் கார்களும் அதிவேகமாக ஒட்டுகிறதினால் அநேக அபாயங்கள் உண்டாகின்றன ஆகையால் நம் ஊர் போலீஸ் டேஷனிருந்து டோல்கேட்டுவரை 5 மைல் வேகத்தில் மோட்டார் வண்டிகளை ஓட்டும் படியாக உத்திரவு பிறப்பிக்க வேணுமாய் இக்கூட்டம் போலீஸ் சூப்ரண்டெண்ட் அவர்களைக் கேட்டுகொள்ளுகிறது.

10. வாடகை ஜட்கா வண்டிகள் நிறுத்தத் தனிப்பட்ட வண்டிப்பேட்டை ஒன்று இல்லாததின் காரணத்தினால் இவ்வூர் ஜவுளிக்கடை மெயின் ரோட்டின் நடுவில் நிறுத்திக் கொண்டிருப்பதால் பொது ஜனங்களுக்கு அதிக சிரமத்தை உண்டு பண்ணுகிறபடியினால் வண்டிப் பேட்டை ஒன்று கூடிய சீக்கிரம் நிறுவவேணுமாய் நகர சபையாரை இக்கூட்டம் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறது.

11. நமது ஊரில் உள்ள ஜவுளிக்கடை மெயின் ரோட்டில் விற்பனை செய்யும் காய் கறி கடைகளினால் சுகாதாரத்திற்குக் கெடுதல் உண்டாவதால் இதற்கெனத் தனிப்பட்ட இடத்தில் மார்க்கெட் ஒன்று ஏற்படுத்த வேணுமாய் நகர சபையாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

12. சேலத்திற்குள் அம்மா பேட்டை வார்டு ரோட்டுகள் மிகக் கேவலமான நிலையிலிருப்பதனாலும் அவை திருத்தப் பட்டுப் பல ஆண்டுகள் ஆன படியாலும் அம்மா பேட்டையிலுள்ள வீதிகளை

உடனே திருத்திச் செப்பனிடுமாறு இக்கூட்டம் முனிசிபல் சபையினரை வற்புறுத்தி வேண்டிக் கொள்ளுகிறது. இது சம்பந்தமாகத் தீவிர முயற்சிகள் கூடிய சீக்கிரம் நமது அம்மா பேட்டை கவுன்சிலர் எடுத்துக் கொள்ளுவார் என்று இக்கூட்டம் நம்புகிறது.

13. சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் ஒன்று அம்மா பேட்டையில் நியமித்துக் கொடுக்கும்படி சென்னை அரசாங்கத்தாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

14. சேலம் பனைமரத்துப்பட்டி ஏரி அடிக்கடி வறண்டு போய் நமது நகருக்குத் தண்ணீர் பஞ்சம் உண்டாவதாலும் தற்போதும் வறண்டு போய் விட்டபடியாலும் இந்நகர் வாசிகள் நல்ல தண்ணீரைப் பருகாமல் கொடிய நோய்களால் கஷ்டப்படும் பரிதாபகரமான நிலைமை அறிந்தும் குடி தண்ணீர் வசதியை செய்து கொடுக்க வேண்டிய தங்கள் கடமையை மறந்து தண்ணீர் வரி மாத்திரம் வசூலித்து வரும் இந்நகர முனிசிபல் சபையாரைக் கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

இது விஷயத்தில் போதிய சிரத்தை எடுத்துக் கொண்டு 1930ஸு மார்ச்சுமீ 31ந் தேதிக்குள் சேலம் நகர சபையினர் மாட்சிமை தங்கிய சென்னை அரசாங்கத்தாரிடம் வேண்டிய உதவிக்குச் சாங்ஷன் பெறுதவரையில் 20 வருஷகாலமாகக் குடி தண்ணீருக்குப் பரிதபித்துக் கொண்டே சேலம் நகர சபையாருக்கு நாம் செலுத்தி வந்த தண்ணீர் வரியை இனி செலுத்த வேண்டிய தவசியமில்லை. என்று அபிப்பிராயப் படுவதோடு ஷை கெடுவுக்குள் குடி தண்ணீர் வரி செலுத்துவதைக் குறித்து ஆலோசிக்கப் படுமென்று இக்கூட்டம் எண்ணுகிறது.

15. அடிக்கடி தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு அதனால் காலரா வயிற்றுக் கடுப்புமுதலிய பொறுக்க முடியாத நோய்கள் பரவி இந்நரக வாசிகள் வருந்துவதிலிருந்து காப்பாற்றும்படி இந்நகர வாசிகள் பல தடவைகளில் மாட்சிமை தங்கிய சென்னை அரசாங்கத்தாரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டும் நாளது வரையில் சர்க்காரார் ஷை குறையை நிவர்த்திக்க யாதொரு ஏற்பாடும் செய்யாமலிருப்பதைக் கண்டு இம்மகா சபை மிகவும் வருந்துவதுடன் மேட்டூர் தேக்கத்திலிருந்து சேலத்திற்குக் குடி தண்ணீர் கொண்டு வரும் விஷயமாய்ப் போதிய பொருளுதவி செய்து அதிக விரைவில் எங்கள் கஷ்டங்களை நிவர்த்திக்க வேணுமாய் சென்னை அரசாங்கத்தாரைக் கூட்டம் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறது.

இந்தத் தீர்மானங்களை மாட்சிமை தங்கிய சென்னை அரசாங்கத்தாருக்கும் சேலம் நகர சபையாருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்ப வேணுமாய் இச்சபையின் அக்கிராசனரைக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

*

## பள்ளிபாளையம் சமரச சன்மார்க்க செங்குந்த வாலிப சங்கம்.

**15-3-30உ இரவு 9-மணிக்கு அமாவாசை கூட்டம்** சங்கத்தின் பிரசிடெண்டு ஸ்ரீமான் ப. குழந்தையப்ப முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. தலைவர் தமது முன்னுரையில் மதுவிலக்கைப்பற்றிப் பேசினார். பின்னர் ஸ்ரீமான் வெ. கன்னியப்ப முதலியார் அவர்கள் இச்சங்கத்திற்குப் பத்திரிகைகள் தருவித்தல் முதலிய சௌகரியங்கள் செய்யச் சந்தா மகிமை லாட்டரி முதலியவற்றால் மூலதனம் சேகரிக்க வேண்டுமென்று பேசினார்.

### தீர்மானங்கள்

1. சென்னை கலால் மந்திரி கனம் S. முத்தைய முதலியார் அவர்களின் பேருதவியால் சில தாலுக்காக்களில் மதுக்கடைகள் மூடப்பட்டதைப் பற்றி இச்சங்கம் மிக மகிழ்ச்சி யடைவதோடு கனம் மந்திரியவர்கட்கு நன்றி செலுத்துகிறது.

2. இத்தீர்மானத்தைக் கனம் மந்திரியவர்களுக்கு அறிவிக்கப் பிரசிடெண்டு அவர்களுக்கு உரிமை யளிக்கிறது.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 10-மணிக்கு இனிது கலைந்தது.

தலைவர் ப. குழந்தையப்ப முதலியார்.

காரியதரிசி. ப. நஞ்சப்ப முதலியார்.

*

## உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

16-2-30உ **உன்னியூர் செங்குந்தர் சங்கம்** போர்டு பாடசாலையில் மாலை 5-மணிக்குத் திரு. R. மாணிக்க முதலியாரவர்களது தலைமையில் நடைபெற்றது. சங்க மெம்பர்களும் இதர பொது ஜனங்களும் பெருந்திரளாகக் குழுமி யிருந்தனர். அவ்வமயம் அடியிற் கண்ட தீர்மானம் ஒன்று ஏகமனதாய் நிறைவேறியுள்ளது.

### நிறைவேறிய தீர்மானம்.

இந்தக் கிராமத்தில் குடிகாரர் அதிகமாக இல்லாததாலும் இருக்கிற சொற்ப மனிதர்களுக்குச் சமீபமாயுள்ள ஒரு மங்கூர், காட்டுப்புத்தூர், அயிலூர், நெரூர், திருமுக்கூடல் முதலிய கிராமங்களில் கள்ளுக்கடைகளிருப்பதாலும் இந்த ஊருக்குக் கள்ளுக்கடை தேவையில்லை குடியை நிறுத்த வேண்டுமென்ற உத்தேசத்தை கவர்ன்மெண்டார் விசேஷமாகக் கைக்கொண்டிருப்பதாலும், இவ்வூரிலுள்ள செங்குந்தர் சங்கம் குடியை ஒழிக்கப் பிரசார மூலமாக வேலை செய்வதாலும், குடியப்பியாச முள்ள சிலரும் குடிப்பழக்கத்தை அடியோடு விட்டு விடுவதாக நிச்சயித்திருப்பதாய் வாக்களித் திருப்பதாலும், இவ்வூர் கள்ளுக்கடையை எடுத்து விடும்படி காருண்ய மிகுந்த கவர்ன்மெண்டாரவர்களை இச்சங்கம் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறது. மேற்கண்ட தீர்மானம் எல்லோராலும் ஏக மனதாய் நிறைவேறியதும் குடியின் கெடுதியைப்பற்றித் தலைவரவர்கள் விளக்கமாக ஜனங்களுக்கு உபந்நியாசம் செய்த பின் இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

---



## தஞ்சை ஜில்லா

## சைவ சமரச சன்மார்க்க செங்குந்தர் சங்கம். சுந்தர பெருமாள் கோயில்.

24-1-30-உ மேல வீதி செங்குந்தர் பொது மண்டபத்தில் மாலை 6 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அச்சமயம் நமது சங்க வளர்ச்சி என்பதுபற்றி திரு. மு. சா. நடராஜ முதலியார், திரு. நா. தங்கவேல் முதலியார் இருவரும் சொற்பெருக் காற்றினார்கள், கணக்குப் பரிசோதிக்கப் பெற்றதும் 8 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

17-1-30உ இரவு 7 மணிக்குக் கூடிய கூட்டத்தில் நால்வர் படத்திற்கு ஆராதனை முதலிய நடந்தேறித் தேவாரம் பாடப்பட்டபின் திரு. S. ராமையா முதலியார் அவர்கள் 'தலைச் சங்கமும் நமது கடமையும்' என்பதுபற்றி யாவரும் களிகூருமாறு உபந்யசித்தார். தலைவர் முடிவுரையின் பின் கூட்டம் இனிது கலைந்தது.

**29-1-30** கூடிய கூட்டத்திற்கு நாட்டாண்மைக்காரர்களும் மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள். அப்போது திரு. P. நடராஜ முதலியார் திரு. S. ராமையா முதலியார் இருவரும் முறையே 'கல்வி' 'மக்கட் பிறவியின் அருமை' என்பனபற்றி உபந்யசித்தார்கள். தங்கள் வேலை நிமித்தம் சங்க வேலையைப் பார்க்க முடியவில்லை எனத் தெரிவித்த கனவான்களுக்குப் பதிலாக திரு. சு. ம. அப்பாசாமி முதலியார் அவர்கள் தலைவராகவும் திரு. ம. சா. ஆதிமூல முதலியார் அவர்கள் உபதலைவராகவும், ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பிறகு நாட்டாண்மை திரு. சொ. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் இச்சங்கத்தின் சார்பாகவும், சமூக சீர்திருத்தத்தின் சார்பாகவும் ஏற்படும் செலவுக்கு இவ்வூர்ப் பொது வரும்படியிலிருந்து ஈடுபடுத்த ஏற்பாடு செய்வதாகவும் மற்றும் தம்மாலியன்ற உதவி புரிவதாகவும் வாக்களித்தனர். தலைவர் முடிவுரையானதும் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றுக் கழகம் நிறைவேறிற்று.

காரியதரிசி N தங்கவேல்.

---

## திருமலை ராஜன் பட்டினம் செங்குந்த வாலிபர் சங்கம்.

முதலாவதாண்டு நிறைவு விழா நிகழுஞ் சுக்கில-ஸு மாசிமீ 11-12-தேதிகளில் செங்குந்த விநாயகராலயப் பந்தலிற் பிற்பகல் 3-மணிக்குத் திரளாகக் குழுமியிருந்த கூட்டத்தில் தமிழ் மறையோதியபின் சைவத்திருவாளர் த. ச. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் அக்கிராசனத் தமர்ந்தார்கள்.

சங்கத்தார் தலைவரவர்களுக்கு நல்வரவுப் பத்திரம் வாசித்து வழங்கினர். தலைவரவர்கள் முன்னுரையில் ஆலய வழிபாடு என்பதைப் பற்றிப் பேசினார்கள்.

திரு. கந்தசாமி வர்மா அவர்கள் திருஞான சம்பந்தர் என்பது பற்றிப் பிரசங்கித்தார்கள்.

மறுநாள் தலைவரவர்கள் முகவுரையோடு பக்தியென்பதைப்பற்றி உபந்யசித்தார்கள். திரு. கந்தசாமி வர்மா அவர்கள் 'கம்பர் கவி நயம்' என்பதைப் பற்றி அழகுறப் பேசினார்கள்.

அக்கிராசனரவர்கள் முடிப்புரையுடன் கல்வியென்பதைப் பற்றிப் பேசி முடித்தார்கள். திரு. க. நாகலிங்க முதலியார் அகவற் பாவினாலியற்றப் பட்ட வந்தனோப சாரம் வழங்கினதின் பிறகு சந்தனதாம்பூலம் வழங்கப் பெற்று ஆண்டிறுதி நிறைவு விழா இனிது நிறைவேறியது.

காரியதரிசி சா. ம. சு. சிங்காரவேலு முதலியார் இச்சங்கத்தை ஸ்தாபிப்பதிலும் மாதக் கூட்டங்கள் நடைபெறச் செய்வதிலும் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்புறச் செய்தமையிலும் பொருட் செலவு தேகச் சிரமஞ் சிறிதுஞ் சிந்தியாது செய்த நன்றியை இச்சங்கத்தார் பெரிதும் போற்றுகிறார்கள். அறுமுகப் பெருமான் அவர்கட்கு அருள் செய்ய வேண்டும்.

காரியதரிசி.

சி. சிவபெருமான் முதலியார்.

---

## மதுரை ஜில்லா

## செங்குந்தர் இளைஞர் சங்கம், மதுரை.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று 7-2-30 தேதி இரவு 8-மணிக்குத் தல்லாக் குளம் சங்க நிலயத்தில் நடைபெற்றது. அவ்வமயம் சங்க உபதலைவர் திரு. என். பீ. பழனிக்குமாரு முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். கடவுள் வணக்கம் பாடி முடிந்ததும்முதலாவதாகக் காலஞ்சென்ற அமெரிக்கன் கல்லூரி மாணவரும் செங்குந்த வாலிப திலகருமான திரு. சி. ராமலிங்கம் அவர்களின் உருவப் படத்தைத் தலைவரவர்கள் முகவுரையாகச் சில கூறிப் பலத்த கரகோஷத்தினிடையே திறந்து வைத்தனர். பின் திரு. எஸ். மாணிக்கம் அவர்கள் அம்மாணவரின் உயரிய குணாதிசயங்களையும் இச்சங்கத்திற்கு அன்னார் செய்து போந்த தொண்டினையும் குறித்து ஒரு விரிவுரை நிகழ்த்தினர். அப்பால் திரு. பி. வி. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் இச்சங்க ஆதரவில் நடைபெறும் இலவச வாசகசாலைக்கு இனாமாகப் புத்தகங்கள் கொடுத்து உதவியுள்ள திருவாளர்கள் க. ஷண்முகவேலு, சிலோன்; எஸ். எஸ். கந்தசாமி முதலியார் வலங்கைமான், வி. ரத்தின முதலியார் அட்வகேட், சென்னை, எஸ். சன்னாசி முதலியார் சோழவந்தான் இவர்கட்கு இச்சங்கத்தின் மூலம் நன்றி கூறுமுகத்தான்ஒரு தீர்மானம் கொண்டுவர, அது யாவராலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. எஸ். மாணிக்கம் அவர்களால் கீழ்வரும் இரு தீர்மானங்கள் கொணரப்பட்டு திரு. வீ. வீரபத்திரன் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏக மனதாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

1. இச்சங்கத்தில் மிகுதியும் ஈடுபட்டுழைக்கும் அங்கத்தினரும் ராமனுதபுரம் ஜில்லா கல்வி இலாகா ஆபீஸினைச் சார்ந்தவருமான திருவாளர் கே. பேக்ஷிமுத்து முதலியாருக்கும் குஹாலயம் சி. மு. முதலியார் புத்திரி திருமதி அல்லியங்கோதை யம்மையாருக்கும் சென்ற தைமீ 21வ (3-2-30) அன்று திருமணம் நடைபெற்றது குறித்து இச்சங்கம் மிக்க மகிழ்வடைவதுடன் தம்பதிகள் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றது.

2. மேற் குறித்த திருமண வைபவத்தையொட்டி இச்சங்க நிதிக்கு ரூ 2-2-0 நன்கொடையளித்ததை மிக்க வந்தனத்துடன் இச்சங்கம் எற்றுக் கொள்ளுவதுடன் இம்மாதிரி இதர செங்குந்தர்களும் நடந்துகொள்ள வழிகாட்டியாயிருந்த மண மக்கள் வீட்டினரைப் பாராட்டுகின்றது.

பிறகு 'ஜீவகாருண்யம்', 'ஆலய வழிபாடு' என்னும் விஷயங்கள் குறித்து முறையே திருவாளர்கள் சி. வீரபத்திர முதலியாரவர்களும் எம். அங்குசாமி அவர்களும் மிக விரிவாகப் பேசி முடித்தார்கள்.

தலைவர் முடிவுரையானதும் வந்தனோபசாரங் கூறப்பட்டுப் பழம் கற்கண்டு வழங்கக் கூட்டம் இனிது கலைந்தது.

6-3-30வ இரவு 8 மணிக்கு இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் திரு. சி. பொன்னம்பல முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. கடவுள் வணக்கமும் தலைவர் முன்னுரையும் ஆனபிறகு திரு P. V. முத்துகருப்ப முதலியார், திரு M. அங்குசாமி முதலியார் இருவரும் 'நமது இரண்டாவது மகா நாடு' என்பது பற்றிச் சொற் பெருக்காற்றினார்கள்.

### தீர்மானம்

சென்ற கூட்டத்தில் நிறைவேறிய இரண்டாவது தீர்மானத்தின் நகலை மேதகு கவர்னர் அவர்களுக்கு அனுப்ப இக்கூட்டம் காரியதரிசிக்கு அதிகாரமளிக்கிறது.

இரவு $10\frac{1}{2}$-மணிக்கு வந்தனேபசாரத்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

சே. வீ. கனகசபாபதி, காரியதரிசி.

---

## இராமநாதபுரம் ஜில்லா

### செங்குந்த மகாஜன கிளைச்சங்கம்
### அருப்புக்கோட்டை

சுக்கில-ஆு மாசிமீ 24வ இரவு 7-மணிக்குச் சங்க ஹாலில், தலைவர் உயர் திரு சு. ஆ. தி. வெயிலுகந்த முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்திற்கு எராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். திரு. வீரபத்திர முதலியார் அவர்கள் கடவுள் வணக்கமும் தலைவர் முகவுரையும் கூறிய பிறகு திரு. S. மல்லையா (தேவாங்கர் ஸ்கூல் தலைமை ஆசிரியர்) அவர்களும் திரு. T. கருப்பையா (மது விலக்குப் பிரசாரகர்) அவர்களும் முறையே 'கல்வி' 'மது விலக்கு' என்பவை பற்றிப் பேசினார்கள். பின் நமது சங்கத்தின் முதலாவது ஆண்டு பூர்த்தி விழா கொண்டாடப்பெற வேண்டிய அவசியத்தைக் கூறி அதற்கு நம் குலப் பெரியார்கள் நன்கொடை தந்து நடத்திவைக்க வேண்டுமென திரு. T. கருப்பையா அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் ரூபாய் 50 வரையில் குலாபிமானிகளால் வழங்கப்பெற்றது. தலைவர் முடிவுரையானதும் பூமாலை சூட்டி வந்தனோபசாரம் கூறப்பெற்றுச் சுமார் 10-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

ச. சண்முக சுந்தரன்.

---

## திருநெல்வேலி ஜில்லா

### ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேச செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம்,
### சிந்தாமணி

சென்ற புரட்டாசி 25வ கூடிய கூட்டத்தில் சங்கச் சட்டதிட்டங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டதும் திரு. பா. நயினார் அவர்களாலும், திரு. மீனாக்ஷி சுந்தர முதலியார் அவர்களாலும் முறையே 'குலேசர்' 'வியாபாரம்' என்பனபற்றிய் பேருரைகள் நிகழ்த்தப் பெற்றன.

ஐப்பசி 30வ கூடிய கூட்டத்தில் திரு. S. K. லக்ஷ்மண முதலியார் அவர்கள் 'கொலை மறுத்தல்', 'புலால் மறுத்தல்' பற்றிச் சாஸ்திரோக்தமாகப் பேசினார்.

கார்த்திகை 27வ மாலை கூடிய கூட்டத்தில் காஞ்சிபுரம் செங்குந்த குருசுவாமிகள் ஸ்ரீமத் சிவஸ்வாமி தேசிகர் அவர்கள் 'சிறுத்தொண்ட நாயனார்' சரித்திரத்தைக் குறித்து உபந்நியாசித்தார்கள்.

மார்கழி 20வ கூடிய நிர்வாகக் கூட்டத்தில் நம்மவர்கள் ஒற்றுமையையும், பொருளாதாரத்தையும் விருத்தி செய்யும் பொருட்டுக் கோவாபரேடிவ் கிரெடிட் சொஸையடி ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

தை 3வ கூடிய நிர்வாகக் கூட்டத்தில் நமது சங்கமும் சமூகமும் முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தோடு 'ஆனந்த போதினி,' 'சிவநேசன்' ஆகிய பத்திரிகைகளைத் தருவித்து நமது சங்கத்திற்கு அளித்து வருபவராகிய ஜவுளி நூல் வியாபாரம் திரு. ப. மு. வ. கோடீஸ்வர முதலியார் அவர்களுக்கு இச்சங்கம் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதோடு மற்ற குலாபிமானிகளும் இவர்களைப் பின்பற்றி வேறு சில பத்திரிகைகளைத் தருவித்துச் சங்கத்திற்கு உதவுமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள் என்ற தீர்மானம் நிறைவேறிற்று.

2. புளியங்குடி யூனியன் போர்ட்டைச் சார்ந்த புளியங்குடி, மேலப் புளியங்குடி, திருமலை நாயக்கன் புதுக்குடி, சிந்தாமணி ஆகிய 4 கிராமங்களிலும் உள்ள 12000 ஜனத் தொகையுள் செங்குந்த முதலிமார்கள் தொகை 1000 இருந்தும், அநேக வருஷங்களாக நம்மரபினர்க்கு டை யூனியன் போர்டில் பிரதிநிதித்துவம் இல்லாதிருந்து சென்ற மூன்று வருஷங்களாகத் திரு. அ. ரா. சங்கரபாண்டிய முதலியார் அவர்கள் மட்டும் நியமன மெம்பராக இருந்துவருகிறார். சமீபத்தில்நடந்த எலெக்ஷனில் திரு. பிச்சாண்டி முதலியார் புத்திரர் நூல் ஜவுளி வியாபாரம் திரு. பெருமாள் முதலியார் அவர்களும் திரு. பழனி முதலியார் புத்திரரும் பிரபல குடும்பத்தவருமான திரு. பெருமாள் முதலியார் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டதன்றி டை சங்கரபாண்டிய முதலியார் அவர்களும் தாலுக்கா போர்டார் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றனர். பின்னர் அதிகாரத்திலிருந்த இரண்டொருவரால் செய்யப்பட்ட பல தடங்கல்களையும் பொருட்படுத்தாது திரு. அ. ரா. சங்கரபாண்டிய முதலியார் அவர்கள் டை யூனியன் போர்டு பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். சென்ற 35 வருஷங்களாகத் தாலுக்கா போர்டு மெம்பர் பதவியும், இந்த யூனியன் போர்டு பிரசிடெண்டு ஸ்தானமும் பெறுவதற்கு உதவியாயிருந்த அதிகாரிகளுக்கும் திருவாளர்கள் M. தெய்வ நாயகம் பிள்ளை, பஞ்சாயத்து கோர்டு பிரசிடெண்டு கி. சவரிப் பெருமாள் செட்டியார், த. சுப்பிரமணியம் பிள்ளை, திருமலை நாய்க்கர், பி. பெருமாள் முதலியார், ப. பெருமாள் முதலியார், சங்கரபாண்டிய முதலியார் முதலிய கனவான்களுக்கு இக்கிராமத்தின் சார்பாக இச்சங்கம் என்றும் மறவாத நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

3. இத்தீர்மானத்தின் நகலை டை கனவான்களுக்கும் செங்குந்த மித்திரன் பத்திராதிபருக்கும் அனுப்பத் தீர்மானிக்கிறது.

கி. வ. கோட்டீஸ்வர முதலியார், தலைவர்.

*

### செங்குந்தர் அபிவிருத்தி சங்க ஸ்தாபனம்.
### சங்கர நாயனார் கோவில்.

காஞ்சீபுரம் ஸ்ரீ கச்சியாள வந்த வள்ளலார் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ சிவசாமி தேசிகர் அவர்கள் அக்ராசனத்தின் கீழ்ச் சங்கர நாயனார் கோயில் தர்மர் கோவிலில் 1105-ம்ஆு மார்கழிமீ 4வ (18-12-29) "அறம்" என்பதைப்பற்றி ஸ்ரீமான் க. வஜ்ரவேல் முதலியார் B. A. அவர்களும் 20-12-29ல் முதலியார் 3-ம் தெரு சித்தி விநாயகர் ஆலயத்தில் டை ஸ்வாமியவர்கள் "ஒழுக்கமும் ஒற்றுமையும்" என்பதைப்பற்றியும் 22-12-29ல் மாதாங் கோவில் தெருவு ஸ்ரீ சி. ப. மு. பழனியாண்டி முதலியார் வீட்டு முன்பு "ஷண்முக அவதாரம்" என்பது பற்றியும் 29-12-29ல் முதலியார் 2-ம் தெருவில் அப்பூதியடிகள் சரித்திரத்தைப் பற்றியும் 8-1-30ல் சாலைத் தெரு ஸ்ரீ ச. பிரமமுத்து முதலியார் வீட்டு முன்பு தங்கிலியக் கலைய நாயனார் சரித்திரத்தைப் பற்றியும் 14-1-30ல் முதலியார் 1-ம் தெரு விநாயகர் ஆலயத்தில் காரைக்காலம்மையார் சரித்திரத்தைப் பற்றியும் உபந்யசித்தார்கள். ஒவ்வொரு உபந்யாச காலத்திலும் அன்பர்கள் அளவில்லாதவர்கள் வந்து கேட்டு மகிழ்ச்சி யடைந்தார்கள்.

26-1-30-ல் முதலியார் 2-ம் தெரு விநாயகர் ஆலயத்தில் மாலை 7 மணிக்கு டை ஸ்வாமியாரவர்கள் அக்ராசனத்தின் கீழ்க் கூடிய கூட்டத்தில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றது. மெம்பர்களில் சங்க நிர்வாகஸ்தர்களாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

திருவாளர். A. முத்தய்யா முதலியார் அவர்கள் பிரசிடெண்ட்.
,, S. D. சங்கர நமச்சிவாய முதலியார் அவர்கள் வைஸ்பிரசிடெண்ட்
,, T. M. S. T. சங்கர பாண்டிய முதலியார் அவர்கள் காரியதரிசி.
,, S. P. சங்கர குற்றால முதலியார் அவர்கள் உபகாரியதரிசி.
,, S. P. S. அருணாசல முதலியார் அவர்கள் பொக்கிஷதார்.

மற்றும் அறுவர் நிர்வாக அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிரதி மாதம் கிருத்திகை மதாந்த சுக்ரவாரங்களில் சங்கம் கூடவேண்டுமென்றும், மெம்பர்கள் நபர் 1-க்கு சந்தா அணா 2 விதம் மாதந்தோறும் கட்ட வேணுமென்றும் மாதாந்த சுக்ர வாரத்தில் சந்தா வசூலிக்க வேண்டுமென்றும் பேசி இன்று வசூல் ரூ 10-4-2 செலவு ரூ 5-13-2 போக ரூ4-7-0 இருப்புக் கட்டியும் தலைவர் A. முத்தய்யா முதலியார் அவர்களால் வந்தனோபசாரங்கள் சொல்லப் பெற்று 9-30 மணிக்குச் சங்கம் இனிது நிறைவேறியது. சுபம்!

T. M. S. T. சங்கர பாண்டிய முதலியார்,
காரியதரிசி.

---

6-2-30வ மாதாங் கோயில் பாலத்துத் தெரு விநாயகர் கோயிலின் முன் ஸ்ரீமான் A. முத்தையா முதலியார் அவர்கள் அக்கிராசனத்தில் கூடிய கூட்டத்தில் திரு. தி. ப. சு. அருணகிரி முதலியார் அவர்களால் தேவாரம் பாடப்பட்ட பிறகு திருவாளர்கள் M. திருவுடையார் முதலியார்; M. பிச்சாண்டி முதலியார் இவர்கள் முறையே உயர்தரக் கல்வி, செல்வம்' 'ஒற்றுமை' என்பன பற்றி உபந்யசித்தார்கள். தலைவர் அவர்கள் முடிபுரையில் 'ஒற்றுமை' யைப்பற்றி ஒரு விரிவுரை செய்தார்கள்.

12-2-30வ சங்கத்தாரால் கழுகுமலையிலிருந்து அழைத்து வரப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ சிவசாமி தேசிக மூர்த்திகள் தர்மர் கோயிலில் "ஸ்ரீ மீனாக்ஷியம்மாள் திருமணம்" என்பது பற்றி உபந்யசித்தார்கள்.

சுவாமிகளுக்கு மாலை சூட்டிய பிறகு கூட்டம் கலைந்தது. மறுநாள் குருஸ்வாமிகள் காஞ்சி நகருக்குப் பிரயாணமானுர்கள்.

26-2-30-வடகாசியம்மன் கோயில்தெரு விநாயகாலயத்தின் முன் திரு. A. முத்தையா முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் தேவார பாராயணமும் தலைவர் முன்னுரையும் ஆனபிறகு திருவாளர்கள் தலைவர், S. ஆறுமுக முதலியார் M. திருவுடையா முதலியார் ஆகிய மூவரால் முறையே 'கண்ணப்ப நாயனர் சரித்திரம்', 'அறம்' 'தொழில்' என்பனபற்றிச் சொற் பொழிவுகள் நடந்தேறின.

6-3-30ல் அம்மாமடம் தெருவில் திரு. A. முத்தையா முதலியார் அவர்கள் அக்கிராசனத்தில் கூடிய பொதுக் கூட்டத்தில் தேவார பாராயணமானதும் திருவாளர்கள் S. பழனியாண்டி முதலியார் அவர்களால் 'கல்வியின் பயன் அறிவு' என்பது பற்றியும் தலைவர் அவர்களால் 'செங்குந்தர் வரலாறு' 'வீரநாராயணர்விஜயம்' என்பவை பற்றியும், மாணவர் S. ஆறுமுக முதலியார் அவர்களால் 'முயற்சி' என்பது பற்றியும், உபந்யசிக்கப் பெற்று வந்தனோப சாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

12-3-30ல் திரு. V. P. சங்கர நாராயண முதலியார் அவர்கள் புதிய கட்டடத்தில் இரவு 9½ மணிக்குக் கிருகப்பிரவேசம் நடத்திச் சங்கத்திற்கு லைப்ரேரி (வாசகசாலை) திறந்து வைக்கப் பெற்ற பிறகு திரு. A. முத்தையா முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அச்சமயம் திரு. தி. ப். சு. அருணகிரி முதலியார் அவர்களால் தேவாரம் ஓதப் பெற்றதும் தலைவர் அவர்கள் 'சங்கம்' என்பது பற்றியும் திரு. அருணகிரி முதலியார் அவர்கள் தாமஸ் பண்டிதர் சரித்திரத்தைப் பற்றியும் சொற் பொழிவு நிகழ்த்தினுர்கள். வந்தனோபசாரத்துடன் 11½ மணிக்குச் சங்கம் இனிது நிறைவேறியது.

தி. மு. ச. தி. சங்கரபாண்டிய முதலியார்,
காரியதரிசி.

*

## பழையப்பேட்டை செங்குந்தர் வாசகசாலை. திருநெல்வேலி டவுன்.

7-3-30ல் இரவு 8½மணிக்குத் திரு. த. பழனியாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் திருவாளர்கள் சொ. கோமதி நாயக முதலியார் வ. சா. ஞானமுத்து முதலியார், சேலம் பெரியண்ண கவுண்டர் ஆகிய இவர்கள் முறையே 'பக்தி', 'ஒழுக்கம்', 'கல்வி' என்பவைபற்றிப் பேசினுர்கள். காரியதரிசி அவர்கள் இம்மூன்று உபந்யாசகர்களையும் தழுவிப் பேசினுர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

நம்குலச் சிறுவர் சிறுமிகள் கல்வி அபிவிர்த்தியை உத்தேசித்து இவ்வாசகசாலையில் இராப்பள்ளிக்கூடம் ஒன்று நிறுவி இலவசமாய்க் கல்வி கற்பிக்கப் பெற்று வருகிறது. திருவாளர்கள் . ா. கோமதி நாயக முதலியார் அவர்களும் R. கோமதி நாயக முதலியார் அவர்களும் அப்பள்ளிக்கு ஆசிரியர்களாக இருந்து வருகிறுர்கள்.

R. கோமதி நாயகம் முதலியார்.
காரியதரிசி.

### திருத்தம்

I. திருநெல்வேலி டவுனைச் சேர்ந்த பழய பேட்டை செங்குந்தர் வாசகசாலை.

II. R. சோமசுந்தர முதலியார் காரியதரிசி என்று போட்டதை அடித்து R. கோமதிநாயகம் முதலியார் காரியதரிசி என்று போடவேண்டும்.

*

## சென்னை

### திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்

ஷை சங்க ஆதரவில் 1-2-1930 மாலை 5½-மணிக்கு ஷை சங்க வாசக சாலையில் திரு. C. முனிய பெருமாள் முதலியார் அவர்கள் தலைமையில் திரு. N. சுப்பிரமண்யம் அவர்கள் "ஈகை" என்பதைப்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர். இதைத் தழுவி 3 நண்பர்கள் பேசியதும் அவைத் தலைவர் முடிவுரை கூறிய பின் மாலை மரியாதையுடன் வந்தனோபசாரம் வழங்கப்பட்டு இரவு 8-மணிக்குக் கூட்டமினிது கலைந்தது.

குறிப்பு:—திரு. C. முனிய பெருமாள் முதலியார் அவர்கள் நம் சங்க வாசக சாலைக்கு "லோகோபகாரி" பத்திரிகையை இலவசமாக அனுப்புவதாக வாக்களித்ததற்கு நாம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

---

ஷை சங்கத்தின் சார்பாக 15-2-30 ஷை சங்க வாசகசாலையில் மாலை 5½-மணிக்குத் திரு எ. பால சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அவைத்தலைமையில் திரு M. D. சுப்பிரமணியம் அவர்கள் "ஒற்றுமை" எனும் விஷயத்தைப்பற்றி ஒரு சொற்பொழி வாற்றினுர். பின்பு இவ்விஷயத்தைத் தழுவி 4 நண்பர்கள் பேசியதும் வந்தனோப சாரத்துடன் 7½-மணிக்குக் கூட்டமினிது கலைந்தது.

*

### சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

மூன்ரும் வருடத்து ஆரம்பக் கூட்டத்திற்குப் பின் பல கூட்டங்கள் நடைபெற்றன. 18-10-29ல் திருவாளர் ம. அ. கனகசபை முதலியாரவர்கள் தலைமையிற் கூடிய கூட்டத்தில் திரு. மா. ப. தியாகராஜன் அவர்கள் 'பொதுநல உணர்ச்சி' என்பது பற்றிப் பேசினுர்கள். 25-10-29 அன்று திருவாளர் சு. குழந்தைவேல் முதலியார் அவர்களைத்தலைவராகக் கொண்டு நடந்த கூட்டத்தில் திரு. வீராசாமி முதலியார் 'விதவா விவாகம்



வேண்டும்' என்னும் விஷயத்தை ஆதரித்துப் பேசினுர். திரு. T. ராமசாமிமுதலியார் அதனை மறுத்து வாதித்தார். முடிவில் இவ்விஷயம் மிகப் பெருந்தொகையினரால் ஆமோதிக்கப்பட்டுத் தீர்மானமாயிற்று. மறு கூட்டம 13-11-29-ல் திருவாளர் சு. கு. விநாயக முதலியார் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோழ்து திரு. ம. சுந்தரவடிவேல் முதலியார் 'சன்மார்க்கம்' என்பது பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினுர். இவ்வாண்டின் இறுதிக்கூட்டம் 31-1-30-ல் சங்கத்தலைவர் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி. அவர்களது தலைமையின் கீழ்க் கூடிற்று அதுகாலை திரு. பொ. முனியப்ப முதலியார் 'பெண்களுக்குச் சமவுரிமை வேண்டும்' என்னும் விஷயம் பற்றிப் பேசினுர். திரு. ஜெ. தங்கவேல் அதனை மறுத்துப் பேசினுர். தீர்மானம் தோற்றது. முடிவில் தலைவர் பெண்களின் நிலைமையையும், நமது வழக்கத்தையும், பெண்களுக்கு வேண்டிய உரிமையில்லை எனும் உணர்ச்சிக்குக் காரணத்தையும் விளக்கி, பெண்கள் ஒரு விதமானவர்கள் ஆண்கள் மற்றொரு விதமானவர்கள் ஆகையால் இருதிறத்தாரும் ஒரே வகையான நன்மைகளையோ தீமைகளையோ அடைய வியலாதெனவிளக்கி, அவரவர்க் கேற்ற காரியங்களிலும் முறைகளிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேண்டிய உரிமைகளும் சந்தர்ப்பங்களும் தருதல் அவசியமென்றும், அப்பொழுதே இருதிறத்தாரும் சிறந்த [illegible]லையை யடைந்து இன்புறுதற்கு எது உண்டென்[illegible]ம் நன்கு புலப்படுத்தினுர்கள். இக்கூட்டங்களெல்லாம் அன்பு நிறைந்த வந்தனோபசாரங்களோடும் இன்பஞ் செறிந்த உணர்ச்சியோடும் நிறைவேறின.

ஜே. தங்கவேல்
தி. இராஜவேல்
} காரியதரிசிகள்.


மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கலாம்

## கைத் தொழில் முறைகள்

(திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு 2000 பிரதிகள் சில மாதங்களில் விற்றுப்போயின: இந்தியாவின் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சூரியனை கண்ட பனிபோல் போக்கக் கூடிய அரிய புஸ்தகம், சோப்புகள், மெழுகுவர்த்திகள், பிஸ்கத்துகள், இங்கிகள், தீக்குச்சிகள், சகலவிதமான வாசனை சாமான்கள், மருந்துகள் இதுபோன்ற 1000 இரகசிய முறைகள் இந்நூலின் அடங்கியிருக்கின்றன. பிறர் உதவியின்றி நாமே தொழில் செய்து சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகள் அடங்கிய இந்நூலுக்கு விலை மிகவும் சொற்பம் என்பதைக் கவனியுங்கள்.

300 பக்கங்களுள்ளது. ஏரோப்ளேன் டிரேட் மார் உள்ளது. விலை ரூபா 1— 8—

வாஸன் புஸ்தகசாலை, 244, தங்கசாலை வீதி, மதராஸ்.



## ஆனந்த விகடன்

(12000 சந்தாதாரர்களுடையது)

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறுர் ஒரு சந்தாதாரர். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா? தபால் கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருடசந்தா ரூ 1—0—0 அயல் நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

மாதிரி காப்பி இனும்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ், டெலிபோன் 3321

தந்தி விலாசம்;—"விகடன்", சென்னை.

# தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சீபுரம்

## வசூல் கமிட்டிகள்

### காஞ்சீபுரம் வட்டம்

திருவாளர்கள்

சோளீஸ்வரன் கோயில்தெரு. வை. வினைதீர்த்தா முதலியார் அவர்கள்
தீ. வை. பாலசுந்திர முதலியார் அவர்கள்
நடுத்தெரு. காளி. சண்முக முதலியார் அவர்கள்
கிருஷ்ணராயர்வீதி. மொ. பொன்மகிரி முதலியார் அவர்கள்
திருமேற்றளித்தெரு. சின்னசாமி முதலியார் அவர்கள்
புதுப்பாளையத்தெரு. மு. சிங்கார முதலியார் அவர்கள்
„ க. இஷ்டலிங்க முதலியார் அவர்கள்
ஒற்றவாடை. இரத்தின முதலியார் அவர்கள்
மாதனம்பாளையத்தெரு. வடமலை முதலியார் அவர்கள்
„ கோவிந்தராஜுலு முதலியார் அவர்கள்
அக்கணம்பாளையத்தெரு. தணிகைமலை முதலியார் அவர்கள்
திருவேகம்பன்தெரு. குமாரவேலு முதலியார் அவர்கள்
புதுத்தெரு. பவழப்ப முதலியார் அவர்கள்
கச்சியப்பன்தெரு. அருணாசல முதலியார் அவர்கள்
சின்னத்தெரு. அருணாசல முதலியார் அவர்கள்
பெரியகாஞ்சீபுரம். குமாரசாமி முதலியார் அவர்கள்
திருமல் ராஜாத்தெரு. நடேச முதலியார் அவர்கள்
லிங்கப்பையர் பாளையத்தெரு. ஆ. தங்கவேலு முதலியார் அவர்கள்
ஆலடிப்பிள்ளையார் கோயில்தெரு. தி. தேவராய முதலியார் அவர்கள்
ம. சு. கந்தசாமி முதலியார் அவர்கள்
வளத்தீஸ்வரன் கோயில்தெரு. மு. காளத்திமுதலியார் அவர்கள்
அ. செல்லப்ப முதலியார் அவர்கள்
கரிக்கினிலமர்ந்தவன்வீதி. மு. கச்சபாலய முதலியார் அவர்கள்
அருணாசல முதலியார் அவர்கள்
விளக்கொளிகோயில் தோப்புத்தெரு. கு. பாலசுந்தர முதலியார் அவர்கள்
நல்லதம்பி முதலியார் அவர்கள்
நாராயணபாளையத்தெரு. வெ. மு. முருகேச முதலியார் அவர்கள்
„ அருணாசல முதலியார் அவர்கள்
ஐயங்கார் பாளயம். கச்சி ஏகாம்பர முதலியார் அவர்கள்
கதிர்வேலு முதலியார் அவர்கள்
வரதராஜுலு முதலியார் அவர்கள்
அமுதுபடித்தெரு. திருவேங்கட முதலியார் அவர்கள்

### 2. மாணும்பதி வட்டம்

கு. முருகப்ப முதலியார் அவர்கள்
துரைசாமி முதலியார் அவர்கள்
சொ. வேணுகோபால் முதலியார் அவர்கள்
இரத்தின முதலியார் அவர்கள்
பெருநகர் ப. தில்லை முதலியார் அவர்கள்
உத்திரன்மேரூர். கா. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள்
கதிர்வேலு முதலியார் அவர்கள்
ஐயங்கார் குளம். மணியம். பிச்சநாயக முதலியார் அவர்கள்

### 3. சிவபுரம் வட்டம்

பழைய சீவரம். அ. முனுசாமி முதலியார் அவர்கள்
க. துரைசாமி முதலியார் அவர்கள்
சேர்க்காடு. மு. ராகவ முதலியார் அவர்கள்
„ வேதாசல முதலியார் அவர்கள்
சிவமங்கலம். வெ. தெய்வநாயக முதலியார் அவர்கள்
ப. யோரூரான் முதலியார் அவர்கள்
மாமண்டூர். ச. பரசுராம முதலியார் அவர்கள்
மேலவலம்பேட்டை. சொ. சாம்பசிவ முதலியார் அவர்கள்
மதுராந்தகம். முத்துப்பாட்சா முதலியார் அவர்கள்
முத்து அருணாசல முதலியார் அவர்கள்
கொட்டு தேவனூர். ஈ. வேதாசல முதலியார் அவர்கள்
கயப்பாக்கம். வீ. கந்தசாமி முதலியார் அவர்கள்
சந்தி அ. கந்தசாமி முதலியார் அவர்கள்
பொலம்பாக்கம். சோமசுந்தர முதலியார் அவர்கள்
பொன்னம்பல முதலியார் அவர்கள்

### 4. திருமழிசை-மணிமங்கலம் வட்டம்

திருமழிசை. கொ. சுப்பிரமண்ய முதலியார் அவர்கள்
வேலப்ப தேசிகர் அவர்கள்
குன்னத்தூர். ஆ. தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்கள்
சைதாப்பேட்டை. S. ரத்தினவேலு முதலியார் அவர்கள்
S. சடையப்ப முதலியார் அவர்கள்
மணிமங்கலம். ந. மு. ந. எ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள்
சோ. திருவேங்கட முதலியார் அவர்கள்
படப்பை. அம்பலம் முருகேச முதலியார் அவர்கள்
மேல்படப்பை. V. வெங்கடசாமி முதலியார் அவர்கள்
நடுவீரப்பட்டு. மு. வேதகிரி முதலியார் அவர்கள்
சோமங்கலம். சி. ரங்கசாமி முதலியார் அவர்கள்



### 5. திருமால்பேறு-பனப்பாக்கம் வட்டம்

திருமாற்பேறு. காளத்தி முதலியார் அவர்கள்
பனப்பாக்கம். சா. ரா. மாணிக்க முதலியார் அவர்கள்
தக்கோலம். அ. ரா. செல்லப்பமுதலியார் அவர்கள்

### 6. புதுப்பேட்டை வட்டம்

அய்யம்பேட்டை

| | |
|---|---|
| வடிவேலுமுதலியார். | கந்தப்பார் கோயில் தெரு |
| வேலாயுத முதலியார், | „ |
| வி. முருகப்ப முதலியார் | „ |
| சின்னகாளத்தி முதலியார் | „ |
| பரமானந்த முதலியார் | நடுத்தெரு |
| பெருமா காளத்தி முதலியார் | „ |
| க. பாலசுந்திர முதலியார் | வடக்குத் தெரு |
| மு. சரவண முதலியார் | „ |
| க. வேலு முதலியார் | „ |
| ா. வாசுதேவ முதலியார் | மேல்தெரு |
| ப்பாதுரை முதலியார் | „ |
| சோமசுந்திர முதலியார் | „ |
| முனியாண்டி முதலியார் | கீழ்த்தெருவு |
| சத்தியவேலு முதலியார் | „ |

கருக்குப்பேட்டை. க. சரவணமுதலியார்
„ மு. சோமசுந்திர முதலியார்
திம்மம்பேட்டை. பூ. நல்லாண்டி முதலியார்
ஏகனும்பேட்டை. A. முருகேச முதலியார்
„ கு. பொன்னுசாமி முதலியார்
„ வை. வேலாயுத முதலியார்
நாயக்கன்பேட்டை. குப்புசாமி முதலியார்
„ ச. வெங்கிடேச முதலியார்
„ மு. சுப்பிரமணிய முதலியார்
திம்மராஜாம்பேட்டை. சி. கந்தசாமி முதலியார்
„ க. ஆறுமுக முதலியார்
பாவாப்பேட்டை. அ. தணிகைமலை முதலியார்
ஓரக்காட்டுப்பேட்டை. அண்ணாவேலு முதலியார்
„ ராஜரத்தின முதலியார்
„ பூ. வேலாயுத முதலியார்
களியப்பேட்டை. சி. ஆறுமுக முதலியார்
„ க. நமசிவாய முதலியார்

---


இதனுள்
அருணகிரிநாத முனீந்திரர் செய்தருளிய
படைவீட்டுத் திருப்புகழ்
தலத் திருப்புகழ்
தேவாரத் தலத் திருப்புகழ்
தேவார வைப்புத் தலத் திருப்புகழ்
பொதுத் திருப்புகழ்
திருவகுப்பு
கந்தரந்தாதி
கந்தரலங்காரம்
கந்தரனுபூதி
என்னும் திருமுறை ஆறும் அடங்கும்.

உ
முருகன் துணை
கௌமாரத் திருமுறை
(குறிப்புரையுடன்)
ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர்
பதிப்பு விலை ரூ. 4
நல்ல கிளேஸ் காகிதம் உயர்ந்த பதிப்பு
கையொப்ப விலை ரூ. 2
(கையொப்பக்காரர்கள் மேமீ 15-க்குள்
முன் பணம் அனுப்ப வேண்டும்.)
நூல் ஜூலை மாதம் வெளிவரும்
மானேஜர் :
மெய்கண்டான் புத்தக சாலை
காமாட்சி விலாசம், கீழ்ப்பாக்கம், சென்னை.

முன்னுரையில்
ஆசிரியர் வரலாறு கல்வெட்டு செப்பேடு ஓலைச்சுருள், தோற்பட்டயம் முதலியன கொண்டு ஆராய்ச்சி முறையில் வரையப் பெறும்.
மித்திரன் வாசகர்கள் அவசியம் ஆதரிக்க வேண்டிய நூல்.
இந்நூல் சம்பந்தமாக இதுவரை வெளிவாராத குறிப்புக்கள் எவரிடமேனும் இருப்பின் இதன் பதிப்பாசிரியருக்கு அனுப்பின் மிக நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்பெறும்.

பிரமோதூதஹு (சித்திரைமீ 1930ஹு ஏப்ரல்மீ—மேமீ)

தக்ஷிணாயனம், ஹேமந்த ருது.

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய [illegible] | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 (ஏப்ரல்) | 1 (பிரமோதூத சித்திரை) | ஞா | பௌ 13-13 | சி 43-3 | சி 60 | 2 | 1 | சூன் | தெற்கு | வருஷப்பிறப்பு |
| 14 | 2 | திங் | பிர 9-58 | சு 42-5 | அ 42-5 ம | 2 | 1 | துதி | மேற்கு | |
| 15 | 3 | செ | துதி 8-0 | வி 42-43 | ம 42-43 சி | 2 | 1 | திரி | வடமே | |
| 16 | 4 | புத | திரி 7-35 | அ 45-0 | சி 60 | 2 | 1 | சது | வடகிழ | |
| 17 | 5 | வியா | சது 8-48 | கே 48-48 | பி 48-48சி | 2 | 1 | பஞ் | ஆகாசம் | |
| 18 | 6 | வெ | பஞ் 11-45 | மூ 54-3 | அ54-3பி | 2 | 0 | சஷ் | பூமி | |
| 19 | 7 | சனி | சஷ் 16-0 | பூ 60-0 | சி 60 | 2 | 1/2 | சப் | கிழக்கு | |
| 20 | 8 | ஞா | சப் 21-20 | பூர 0-33 | சி 0-33 அ | 2 | 1/2 | ... | வடக்கு | |
| 21 | 9 | திங் | அஷ் 27-13 | உத் 7-43 | ம 7-43 அ | 1 | 1/2 | அஷ் | தென்கி | |
| 22 | 10 | செ | நவ 33-15 | தி 15-3 | சி 60 | 1 | 1/2 | நவ | தெமே | |
| 23 | 11 | புத | தச 38-32 | அ 21-55 | பி 21-55 சி | 1 | 1/2 | தச | தெற்கு | |
| 24 | 12 | வியா | ஏகா 43-0 | ச 28-5 | ம 28-5 சி | 1 | 1/2 | ஏகா | மேற்கு | |
| 25 | 13 | வெ | துவா 45-20 | பூ 33-0 | சி 60 | 0 | 1/2 | துவா | வடமே | |
| 26 | 14 | சனி | திர 47-48 | உ 36-40 | சி 36-40 ம | 0 | 1/2 | திர | வடகிழ | |
| 27 | 15 | ஞா | சது 48-3 | ரே 38-40 | அ 33 40 சி | 0 | 0 | சது | ஆகாசம் | |
| 28 | 16 | திங் | அ● 46-52 | அ 39-23 | சி 60 | 0 | 0 | அமா | பூமி | சர்வ அமாவாசை |
| 29 | 17 | செ | பிர 44-15 | பர 38-48 | சி 60 | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 30 | 18 | புத | துதி 40-43 | கி ※37-5 | அ 37-5 சி | 0 | 0 | துதி | வடக்கு | கிருத்திகை, சந்திர [தரிசனம் |
| 1 (மே) | 19 | வியா | திரி 36-15 | ரோ 34-30 | ம 60 | 0 | 0 | திரி | தென்கி | |
| 2 | 20 | வெ | சது 31-13 | மி 31-23 | சி 60 | 0 | 1/2 | சது | தெமே | |
| 3 | 21 | சனி | பஞ் 25-43 | தி 27-48 | சி 60 | 1 | 1/2 | பஞ் | தெற்கு | |
| 4 | 22 | ஞா | சஷ் 20-0 | பு 23-58 | சி 60 | 1 | 1/2 | சஷ் சப் | மேற்கு | |
| 5 | 23 | திங் | சப் 14-15 | பூ 20-10 | சி 60 | 1 | 1/2 | அஷ் | வடமே | |
| 6 | 24 | செ | அஷ் 8-35 | ஆ 16-28 | சி 60 | 1 | 1/2 | நவ | வடகிழ | |
| 7 | 25 | புத | நவ 3-13 தச 58-7 | ம 12-58 | சி 12 58 அ | 2 | 1/2 | தச | ஆகாசம் | |
| 8 | 26 | வியா | ஏகா 53-38 | பூ 9-30 | சி 9-30 ம | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| 9 | 27 | வெ | துவா 49-43 | உத் 7-23 | சி 7-23 அ | 2 | 1 | துவா | வடக்கு | |
| 10 | 28 | சனி | திர 46-33 | அ 5-30 | ம 60 | 2 | 1 | திர | தென்கி | |
| 11 | 29 | ஞா | சது 44-8 | சி 4-28 | சி 60 | 2 | 1 | சது | தெமே | |
| 12 | 30 | திங் | ○ 42-58 | சு 4-20 | அ 4-20 ம | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 13 | 31 | செ | பிர 43-3 | வி 5-15 | ம 5-15 சி | 2 | 1 | பிர | மேற்கு | |


# கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட ஒரு புட்டியின் விலை ரூபா 1 4 0

3 புட்டி வாங்கினால் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும்முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

ப. அங்கமுத்து முதலியார், சிகிச்சாஞான பண்டிதர்,

கற்பக மெடிகல்ஹால், சத்தியமங்கலம், கோயம்புத்தூர்







ஒவ்வொரு குடும்பத்திற்கும் டாக்டரைப்போல உதவக்கூடியது

# மின்சார ரசம்

ஒன்றேயாகும்.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற

தென உலகப்பிரசித்தி பெற்றது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது

ஒரே முறை பரீக்ஷியுங்கள். கேட்டாக் இனாம்.

புட்டி 1-க்கு ரூ 2. தபாற் செலவு வேறு.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

டி. பி. சுந்தரேசன், B.A., மார்த்தாண்டம்:—

மின்சார ரசத்தினால் இருமல், ஜலதோஷம், ஜுரம் உடனே நிவர்த்தியாயிற்று பல்லின் ஈறின் மேலிருந்த வீக்கம் மிகவும் ஆச்சர்யகரமாக உடனே குணமடைந்தது.

விலாசம்:—மின்சார ரசம் கம்பெனி, லிமிடெட், சேலம்.





உங்களுக்கு கம்பி நகைகளையாவது [illegible] மாகவும் பவுன் நகைகள் கல்நகைகள்

வெள்ளி நகைகள்

தேவையானால் எங்கள் சருப்பு கடையில் ஒரே தடவை வாங்கிப்பரிக்ஷித்துப் பார்த்தால் தெரியவரும். ஆர்டரின் பேரில் செய்து கொடுக்கப்படும். வாங்கின நகைகளை ஒரு வாரத்தில் வாபீஸ் செய்தால் முழுப் பணத்தையும் வாபீஸ் செய்து விடுவோம்.

வீ. க. [illegible] பிள்ளை,

நகை வியாபாரம்,

மண்டி வீதி, ஈரோடு.



நமது தலைவர்களின்

அழகிய போட்டோ படங்கள்

| | |
|---|---|
| தபாற்செலவு உள்பட விலை | ரூ. அ. ப. |
| ஒட்டக்கூத்தர் | ... 1 8 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) | .... 2 8 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) | ... 1 8 0 |
| தலைச்சங்கப்பிரசாரகர்கள் | .... 1 8 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,

பவழக்காரத்தெருவு, சென்னை.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தை தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும்,

## அயக்காந்த செந்தூரமுமே.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன.

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, குடைவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும் போது பொறுக்கமுடியாது பாதையைத்தரும் தந்தி மேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும்.



பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பற்றே வேரையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்வோம்; இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்றும் சந்தேக முடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவர்களே தாம் சாப்பிடவேண்டும் என்று அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாக 10-நாளைக்குச் சாப்பிட்டால் குணம் உங்களுக்கே தெரிய வரும்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு, நெய் இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத்தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊறஊற மேகமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பாவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும் அவரும் அகக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களே யானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1—12—0 தபாற் கூலி ரூபா 1—4—0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0.

சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

விலாசம்:—கருணாநிதி டிபோ,
1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Saugam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at the Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras